கவிகுஞ்சர பாரதி இயற்றிய

அழகர் குறவஞ்சி

பதிப்பாசிரியர்

சங்கீத ஸாகித்ய வித்வான் என். கோடீஸ்வரய்யர் குமாரர்

கே. நாகமணி

ஸ்வரதாள குறிப்பு எழுதி உதவியவர்

சங்கீத பூஷணம் ஸ்ரீ எஸ். இராமநாதன்

சங்கீத நாடக சங்கத்தாரின் பொருளுதவி கொண்டு வெளியிடப்பட்டது.

(ALL RIGHTS RESERVED)

கவிகுஞ்சர பாரதி இயற்றிய

அழகர் குறவஞ்சி

பதிப்பாசிரியர்
சங்கீத ஸாகித்ய வித்வான் என். கோடீஸ்வரய்யர் குமாரர்
கே. நாகமணி

சங்கீத நாடக சங்கத்தாரின் பொருளுதவி கொண்டு
வெளியிடப்பட்டது.

விலை ரூ : 3-00

ஸ்வரதாள குறிப்பு எழுதி உதவியவர்
சங்கீத பூஷணம் ஸ்ரீ எஸ். இராமநாதன்

உரிமைப்பதிவு] [1963ஆம் வருடம்

அல்லயன்ஸ் பிரஸ், மயிலாப்பூர் சென்னை-4

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் ஸ்ரீமடம்

காஞ்சீபுரம்

முத்திரை

பாண்டியநாட்டில் உள்ள வைணவத் திருப்பதிகளில் திருமாலிருஞ்சோலை என்று கூறப்படும் சோலை மலை மீது கோவில் கொண்டு வீற்றிருக்கும் அழகர்மீது கவி குஞ்சர பாரதியாரால் பாடப் பெற்ற 'அழகர் குறவஞ்சி' என்னும் இந்நூல் முன்னோர்களின் வழியை அனுசரித்து குறவஞ்சி என்னும் தமிழ்ப் பிரபந்த அமைப்பில் கையாள வேண்டிய முறைகள் யாவும் அமைந்து செம்பாகமான கீர்த்தனைவகைப் பாடல்களுடன் கலந்து விளங்குகிறது.

ஆஸ்திகர்கள் இப் பிரபந்தத்தைப் படித்து அழகர் பிரானின்மீது பக்திப் பெருக்கங் கொண்டு எல்லா மேன்மைகளையும் அடைவார்களாக.

ஆக்ஞைப்படி
M. V. கிருஷ்ண மூர்த்தி அய்யர்
ஸ்ரீமடம் நிர்வாஹகர்

N. RAMAKRISHNAN, M.P.

Adambakkam,
Madras-16,
2nd April, 1963.

I congratulate Sri K. Nagamani in bringing this book of Azhagar Kuravanji with Music notation. The effort is very welcome. This delightful piece of dance-drama has at last come out, as it were, from the dust of historical antiquity. More-over it is brought out by no less a person than the great-grandson of the author Kavi Kunjara Bharathi.

Myself and the members of my family have more than once heard and enjoyed this Kuravanji ably rendered by Sri Nagamani's father, the late Vidwan Koteeswara Iyer. One can never forget the delicacies of various human emotions with which this drama is replete so exquisitely rendered by Sri Koteeswara Iyer with a richness of Bhava characteristic of his music.

Sri Nagamani has tried his best to get the music pieces reduced into notation as faithfully as possible to the original tunes. He has even in his boyhood heard his father sing this Kuravanji and he has but reproduced the music forms so indelibly impressed in him. He has but accomplished a duty which is expected of the heir of a rich musical heredity.

(Sd.) N. RAMAKRISHNAN

—:o:—

Sangita Sastra Ratnakara
Prof. P. SAMBAMOORTHY, B.A., B.L.
Director, Sangita Vadyalaya, Madras.
Visiting Professor, S. V. College of
Music & Dance, Tirupati.

Phone: 71907
Residence :
116, Santhome High Road,
Mylapore, Madras-4,
29—3—1963.

FOREWORD

The music world is thankful to Sri Nagamani, the great grandson of Ka vi Kunjara Bharathi for having published this book Hitherto the bare texts of Kuravanjis alone were published. This book will have the distinction of being the first Kuravanji in Tamil to be published with notation. The notation will enable all those endowed with swaragnanam to learn the songs and feast their ears as well as the ears of their listeners. **Azhagar Kuravanji** was first produced on the stage in the Annamalai Manram, Madras on the 25th of December 1960. It was also produced over the Madras Radio Many people have thirsted to learn these songs This work is a timely publication.

Kuravanjis are dance dramas in Tamil. They have a a high entertainment value. From the point of view of musical excellence, they stand midway between the classical Bhagavata Mela Nataka and the rustic dance drama. Whereas the music of a few songs here and there may rise to classical heights, the music of the bulk of the songs is characterised by a certain simplicity and native charm. The ragas used in the Kuravanji Natakas are all rakti ragas Genuine folk tunes occur here and there. The sequences of jatis (rhythmical solfa passages) interspersed in between the sahityas at apt places keep up the lively dance atmosphere. Kuravanjis, when produced well, have a gripping interest.

The spicy humour of some of the songs keeps the audience lively. Some kuravanjis like the **Tirukutrala Kuravanji** and **Azhagar Kuravanji** have a literary value as well.

Kuravanjis are woven round the stock theme of a lady falling in love with the King, Minister or a Noble man of the place. In a few Kuravanjis, the lady falls in love with the Deity of the local shrine, when the latter is taken out in a gorgeous procession preceded by all the glamorous paraphernalia. The pangs of love are protrayed in a telling manner. The gipsy woman appears on the scene, reads the hand of the heroine and foretells that her desires would be fulfilled. She is given valuable presents by the heroine. The happy union ultimately takes place. In the songs sung by the gypsy woman, there is a fund of interesting material pertaining to geography and sociology.

Azhagar Kuravanji *is a brilliant* composition. Its author is Kavi Kunjara Bharati (1810-1896). **Kavi Kunjaram** is the *title* conferred upon the poet by Gauri Vallabha Rajah of Sivaganga and this title has been perputuated as his name His *original* name was Kotiswaran. He was the Samasthana Vidwan in the courts of Ramnad and Sivaganga. Kavi Kunjara Bharati's **Magnum opus** is the **Skanda Purana Kirtanas.** He is also the author of **Perinba Kirtanas**. His songs are noted for their beautiful music, sweet diction and fine ideas. They breathe the fragrance of devotion. The **Azhagar Kuravanji** was completed in 1840. The story centres round Sundararaja Perumal, the presiding Deity of Azhagar kovil in Madurai District.

STORY

The play starts with an invocatory song in praise of Vighneswara in Kanada Raga. This song is in sanskrit This is followed by the well-known song in Khamas raga **"Swami Mayuragiri Vadivela"** in praise of Subramanya.

The song invoking the blessings of the Goddess of learning is in Athana raga and has a bright start. A picturesque description of Malazhagar surrounded by devotees performing various services is given in a song in Saranga raga. The heroine Mohanavalli appears on the scene and she is engaged in sports with her maids. How she was playing the ball is described in a captivating song in Khamas raga. A Kummi teeming with rhetorical beauties is next rendered. Malazhagar comes in procession The heroine sees him and falls in love with Him. The well-known song **"Ivanaro Ariyene"** in Kambhoji raga is sung by her on that occasion. This song gives wide scope for the display of skill in abhinaya. Mohanavalli sends a maid to go to Him and communicate her desires. The delay in the arrival of the hero makes her feel sad. In her love-distress, she rebukes the moon and the cupid. She addresses the sea in a song in Senjurutti raga. This Senjurutti is the pure Senjurutti of South Indian music without the admixture of sadharana gandhara. Tyagaraja and Gopalakrishna Bharati have portrayed in their songs only the upanga type of Senjurutti. The North Indian parallel Janjhuti takes the Komal gandhara in addition. This bhashanga type of raga is seen in the javali, **Sakhi prana** of Dharmapuri Subbarayar. In the song in Kedaragaula raga, **Pavaiye sami varumun**, the sakhi asks the heroine to be patient and not become restless.

The gypsy woman appears on the scene. The songs sung by her narrating the glory of her tribe, their time-honoured occupations, the picturesque nature of their mountainous abode and her skill in foretelling one's future afford delightful reading. She waxes eloquent on her capacity to do things impossible on their very face, like twisting the sand into a rope and drawing strands from out of stone. The kuratti is requested to read the palm of the hand of the heroine. After offering her customary prayers to the Hill Deities, the Kuratti starts on her work and finally predicts

that the heroine's desires will be fulfilled. She is given valuable presents. The happy union takes place. The play concludes with a mangalam. Besides the songs, scholarly verses adorn the play. Rhetorical beauties like yamakam, antya prasa etc., are seen in abundance.

The play is prolonged by the introduction of the singan-singi-kuluvan episode. Zoologists will find interesting details relating to birds in the songs sung by the Kuluvan.

(Sd.) P. SAMBAMOORTHY

—:o:—

அழகர் குறவஞ்சி: மதிப்புரை

சங்கீத பூஷணம் S. இராமநாதன்

(Lecturer in Musicology, Central College of Karnataka Music, Madras-28.)

நாடகத்தமிழ்:—இயல், இசை, நாடகம் என்னும் முத் தமிழில் குறவஞ்சியானது நாடகத்தமிழின் வகையைச் சார்ந்தது. இயலாக உள்ள தமிழ்ப் பாடல்களை இசை யுடன் பாடி அபிநயம் பிடிப்பதனால் முத்தமிழும் இதன்கண் அடங்கும் எனலாம்.

கதை:—குறவஞ்சி நாடகங்கள் யாவும் கதை அமைப்பில் ஒரே மாதிரியாகவே இருக்கும்; பாட்டுடைத் தலைவன் தலைவி மட்டும் வேறுபடும். தலைவன் பவனி வருவது, தலைவி அவனைக் கண்டு காதல் கொள்வது, விரகமுற்ற தலைவி சந்திரனைப் பழித்தல், மன்மதனைப் பழித்தல் போன்றவை, குறத்தி வருதல், தன் மலைவளம், நாட்டு வளம் கூறுதல், தலைவி தலைவனோடு சேருவாள் என்று குறி சொல்வது, பின்னர் தலைவன் தலைவியை மணப்பது—இவை யாவும் எல்லாக் குறவஞ்சி நாடகங்களிலும் அடிப்படையாக வரும்.

அழகர் குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் சோலைமலை மாலழகர்; தலைவி மோகனவல்லி. இது :

"கருமுகில் மால் அழகராதி மோகினியை மணந்த கதை"

வேறு சில குறவஞ்சிகள்:—இத்தகைய கதை அமைப்புக் கொண்ட நாடகங்கள் பல தமிழ் நாட்டில் தோன்றியுள்ளன. குறத்தி முக்கிய பாத்திரமாக வருவதால் இவை "குறவஞ்சி நாடகங்கள்" என்று பெயர் பெற்றன. அவற்றுள் தலை சிறந்தவை திருக்குற்றாலக் குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, அழகர் குறவஞ்சி ஆகியவை. குற்றாலக் குறவஞ்சி

இலக்கியச் செறிவு கொண்டது: சரபேந்திர பூபாலக் குறவஞ்சி இசை உயர்வு கொண்டது; அழகர் குறவஞ்சி இலக்கியச் சுவையுடன் மிகச் சிறந்த இசை அமைப்பும் கொண்டது.

ஆசிரியர் காலம்:—இதன் ஆசிரியர் சிவகங்கை சமஸ்தான வித்வான் கவிகுஞ்சர பாரதியாவர். 'கவிகுஞ்சரம்' என்பது இவரது முத்திரை யாகும்.

"செஞ்சொற் கவி குஞ்சரம் இன்சொற்கு நேயனே"

பக்கம் 18.

"கவி குஞ்சர பாரதி கருத்துறைந்த நிதி"— பக்கம் 77

இவரது காலம் 1810-1890 ஆகும். ஆகவே இவர் சங்கீத மும்மூர்த்திகளாகிய தியாகராஜர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகியோரின் சமகாலத்தவர்.

பாடல் வகைகள்:—அழகர் குறவஞ்சி வெண்பா, விருத்தம், முதலிய செய்யுள் வகைகளும் கீர்த்தனம், சிந்து, திபதை, அடிமடக்குத் திபதை, கும்மிக்கண்ணிகள், ஓரடிக் கீர்த்தனம் முதலான இசைப்பாட்டு வகைகளும் அடங்கியது.

சொல் நயம்:—ஓசையின்பமும் பொருட் செறிவும் உடைய செஞ்சொற்கள் நூல் முழுவதும் நிரம்பியுள்ளன:

(உ-ம்) "மருத் தொடையும் இளைஞர் கருத்தும் இறுக்கும்
கொண்டைச் சொருக்கினள்,"
"...துயிலும் இல்லை பசியும் இல்லை
பசித்தாலும் எள்ளளவு புசிப்பும் இல்லை...
புசித்தாலும் ருசிக்கவில்லை,"
"தவள நிறக் கருங்கூந்தல் பவளச் செவ்வாய்க்
கலைமகள்,"
"அங்கம் கலிங்கம் வங்கம் கொங்கம்
சிங்கம் தெலுங்கம்"

உவமைகளும், பழமொழிகளும்:—கவி குஞ்சர பாரதியின் பாடல்களில் எண்ணிறந்த பழமொழிகளும் உவமைகளும்

மிளிர்கின்றன. அழகர் குறவஞ்யில் பல பாடல்களில் இவ் வாறு அமைந்திருப்பதைக் காணலாம்.

"உருத பெநத கோடையில் நீர் பெருகு இடம்
கண்ட மான்கள் போல் ஓடினார்,"
"ஐங்கணை உடலிற் சல்லடைக்கண் போல் துளைக்க,"
"வெயில் கண்ட நவநீதம் போலவே வெதும்பி,"
"புயல் கண்ட மயில் போல்." முதலிய உவமைகளும்
'முடவன் கொம்புத் தேனுக்கு இச்சிததாற்போலே,"
"பழம் நெகிழ்ந்து ஒருக்காலே பாலில் வீழ்ந்தது போலே,"
"பசிக்கு நாள் ஏர் இடச் செய்தவாறு."
"சுக்கு கண்டவுடன் பிள்ளை பெற நினைந்து,"
"புண்ணில் கோல் விட்டு உளை வகை"
"நொய் அரிசி கொதி போருது என்றாற் போலே,"
"கிணற்று நீரை வெள்ளம கொண்டு போமோ?",
"ஆக்கப் பொறுத்தவர்க்கு ஆறபொருதோ?"
"நாழிகை முப்பது சென்றல்லவோ விடியும்?"
"தேள் நனக்கு அதிகாரம் கொடுத்தாற் போலே"
"கல்லினும நார் உரிபபேன், மணலையும்
"கயிறெனத் திரிப்பேன்"
"அங்கை நெல்லிக்கனி என" முதலிய பழமொழிகளும் இந்நூற்குச் சுவைதருகின்றன.

இன்னும் "ஆவரையாற்று வரையுகந்த வரை" என்று தொடங்கும் விருத்தத்திலும், "கடலே எந்தனைப் போலவே" என்ற பாடலிலும், "சேடசயனம்" என்று தொடங்கும் அடிமடக்குத் திபதையிலும் மடக்கு, சிலேடை அணிகள் நிறைந்துள்ளமை காண்க.

இசைச் சிறப்பு "சாமிமயூரகிரி," "இவன் யாரோ," "எல்லோரையும் போல என்னை" முதலிய பாடல்களைக் கேட்டவர்கள் அவற்றின் உயர்ந்த இசைப் பண்பை உணர்வர். தமிழகத்து இசையின் பொற்காலம் என்று கூறத்தக்க 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த கவிகுஞ்சரபாரதி இசையிலும் மிக்க திறமை வாய்ந்தவர் ஆதலால் அவரது பாடல்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

"மோகனவல்லி பந்தடித்தனள்" என்ற கமாஸ்ராகப் பாடலைப் பாடிக் கேட்டால் பந்து அடிக்கும் ஒலியைக் கேட்பது போல் உள்ளது.

"தந்த தகுந்தகு ஜந்தரி கிடுத்தாங்கிடுத் தோம்"

என்ற சொற்கட்டுக்களும் அவ்வொலிக் கேற்றவாறு அமைந் துள்ளமை வியக்கத் தக்கது.

நாட்டுப்பாடல் இசை: இந்நூலின்கண் சாஸ்திரீய இசையும் நாட்டுப்பாடல் இசையும் இருகண்கள் போல் விளங்குகின் றன. நொண்டிச் சிந்து, கும்மி, திபதை முதலியவை மிக்கச் சுவை வாய்ந்த இசையமைப்புக் கொண்டவை.

இசைக் கருவிகள்: இந்நூலின்கண் பல இசைக் கருவிகள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. (உ-ம்) வீணை, மத்தளம், தாளம், துத்தி, தம்புரு, மேளம், பேரி, முரசு, டமாரம், உடுக்கு, வேய், துடி முதலியன.

இசை அமைப்பு: தமிழ் நாடு சங்கீத நாடக சங்கத்தின் ஆதரவில் தமிழகத்தில் உள்ள இசை,நாட்டியம்,நாடகங்கள் பற்றிய (**Survey of Arts**) ஸர்வே ஆஃப் ஆர்ட்ஸ் பொருட்டு நான் ஆராய்ச்சி அலுவராகப் பணிபுரிந்த போது குறவஞ்சி நாடகங்கள் பற்றிய குறிப்புக்களைத் தேடினேன். அப்போது திரு K. நாகமணி அவர்களிடம் அழகர் குறவஞ்சிப் பாடல்கள் சிலவற்றைக் கேட்டேன். இந்த அருமையான நூலை ஸ்வர தாளக்குறிப்புடன் வெளியிட வேண்டும் என்று அவர் பாடிய பாடல்களுக்கு எல்லாம் ஸ்வரதாளக் குறிப்பு எழுதினேன்.

1916-இல் ஸ்ரீ கோடீசுவர ஐயர் வெளியிட்ட பதிப்பை ஆதாரமாகக் கொண்டே இந்நூல் வெளியிடப்படுகின்றது. இசையமைப்பு சரிவரத் தெரியாத பாடல்களின் சுத்த சாகித் தியம் மட்டும் கொடுக்கப்பட்டது.

இராகங்களின் மேள எண் தலைப்பில் இடதுபுறம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அன்னிய ஸ்வரங்கள் நட்சத்திரக்குறி இடபபட்டுள்ளன.

நாட்டுப் பாடல் இசையாக உள்ள பாடல்களுக்கு பெரும்பாலும் அவற்றில் பேசும் ஸ்வரங்களைக் கொண்டு மேள எண் கொடுத்து, மற்ற ஸ்வரங்களை அன்னிய ஸ்வரங்களாகக் காட்டியுள்ளது.

(உ-ம்) வாலையருள் திருமகனே - பக்கம் 140

அழகர் குறவஞ்சியும் நாட்டியமும்:—இத்தகு சிறப்பு வாய்ந்த இந்நூல் நாட்டிய உலகுக்கு ஒரு அரிய பொக்கிஷம் என்றே கூறலாம். "ஆடல், பாடல், அழகு" ஆகிய மூன்றும் பொருந்திய சிறந்த நாட்டியமகளிர் இக்குறவஞ்சியை நாடகமாக நடித்தால் தமிழகத்துக்கும் கலைக்கும் பெரிய தொண்டாகும் என்பதிற் சந்தேகம் இல்லை. அவ்வாறு நடித்தால் அழகர் குறவஞ்சியில் வரும் குறத்தி கூறிய குறியை நாமும் கூறி இவ்வுரையை முடிப்போம்.

"முக்கியமாய் இக்குறியைக் கேளடி யம்மே - ராஜ
மோகினி உனக்கு நல்ல நாளடி யம்மே."

சங்கீத வித்வான் ராமநாதபுரம் கிருஷ்ணய்யர்

ப்ரும்ம ஸ்ரீ கவிக்குஞ்சர பாரதி அவர்கள் இயற்றியுள்ள "அழகர் குறவஞ்சி" என்னும் இந்நூலை ஸங்கீத ஸாகித்திய வித்துவான் ப்ரும்ம ஸ்ரீ என். கோடீஸ்வர அய்யர் அவர்கள் குமாரரான ஸ்ரீ கே. நாகமணி பிரசுரித்திருப்பது ஸங்கீத உலகிற்கு ஒரு அரிய சேவை யாகும் மேற்படி நூல் ஸங்கீத உலகிற்கு பயன்படக் கூடியதான பத ஸாகித்யம் உடையது தற்போது கச்சேரி மேடைகளில் பாடி வரும் "இவளாரோ அறியேன்" என்னும் காம்போதி ராக உருப்படியும், மேற்படி நூலில் உள்ளது. இந்நூலில் உள்ள சில பதங்களை நாகமணி அவர்கள் என்னிடம் பாடிக் காண்பித்தார். ராகபாவமும் ஸாகித்திய சிலாக்கியமும் சிறந்து விளங்குகிறது. உதாரணமாக மோகன வல்லிமின்னாள் என்னும் மாஞ்சிராக பதமும், வந்து சேருவார் என்ற ஸகானா பதமும், குறிப்பிடத் தக்கது.

இந்நூல் ஸ்வர ஸாகித்தியத்துடன் பிரசுரித்திருப்பதால் இதை வித்யார்த்திகள் எளிதில் பயன்படுத்திக்கொள்ளலாம்.

(Sd) ராமநாதபுரம் கிருஷ்ணன்

பதிப்பாசிரியர் உரை

கலியுகத் தெய்வமான ஸ்ரீ முருகப் பெருமான் மீது 72 மேளகர்த்தா ராகங்களில் முதன முதலில் தமிழில் கிருதிகள் இயற்றிய எனது தகப்பனர் ப்ருமம ஸ்ரீ N. கோடீஸ்வரய்யர், அவர்கள் தமது மாதாமஹரான ப்ரும்ம ஸ்ரீ கவிகுஞ்சர பாரதி அவர்கள் இயற்றியுள்ள நூல்களான, ஸ்காந்த புராணம, பேரின்பக் கீர்த்தனைகள், அழகர் குறவஞ்சி என்ற இம்மூன்று நூல்களையும் 1916-ஆம் வருடம் பதிப்பித்து புத்தக ரூபமாக வெளியிட்டார்.

நாடகத் தமிழ் ப்ரபந்தங்களில் ஒன்ருகிய "அழகர் குற வஞ்சியில்" என் சிறு பிராயத்தில் என் தகப்பனரிடம் கேட்டு நேரில் பாடம் செய்த கீர்த்தனைகளை சங்கீத பூஷணம் ஸ்ரீமான் S. இராமநாதன் அவர்கள் நான் பாடக் கேட்டு இயல், இசை, என்ற இவ்விரண்டும் ஒன்றறக் கலந்த இந் நூல் பிரசாரத்திற்கு அவசியம் வரவேண்டுமென்னும் அவாக் கொண்டு சிறிதும் சிரமம் பாராமல் ஸ்வரதாளக் குறிப்புகள் எழுதிக் கொடுத்து உதவியளித்தார்.

1960-ஆம் வருடம் டிஸம்பர் மாதம் 25-ஆம் தேதி பேராசிரியர் ஸ்ரீமான் P. சாம்பமூர்த்தி அய்யர் B.A.B.L. அவர்கள் அவ்வருட தமிழிசைச் சங்கத்தினுதரவில் நாட்டிய நாடகமாக்கி பண்ணுராய்ச்சி நிகழ்ச்சி நிரலில் சேர்த்து ராஜா அண்ணுமலை மன்றத்தில் அரங்கேற்றுவித்தும், பிறகு இசை நாடகமாக 1961-ஆம் ஆண்டு நவம்பர் 18-ஆம் தேதியன்று சென்னை அகில இந்திய வானெலி நிலையத்திலும் ஒலி பரப்பச் செய்தார்.

இந்நூல் அச்சிட்டு வெளியிடுவதற்கு பொருளுதவி தந்த சென்னை ராஜ்ய சங்கீத நாடக சங்கத்தாருக்கும் மேற் படி சங்கத்தினுதரவில் 1-2-63இல் "அழகர் குறவஞ்சி" கீர்த்தனைகளை பாடி காட்ட சந்தர்ப்பம் அளித்தபோது

நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய சங்கீத கலாநிதி ப்ரும்மஸ்ரீ முசிரி சுப்ரமணிய அய்யர் அவர்களும் சங்கத் தலைவர் ஸ்ரீமான் S. வெங்கடேஸ்வரன் I.C.S. அவர்களும் சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் E. Krishna Iyer B A B L. அவர்களும் இதை வெகுவாகப் பாராட்டி என்னை ஊக்குவித்ததற்காக என் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

இந்நூல் பலரறிய ராஜா அண்ணாமலை மன்றத்தில் அரங் கேற்றுவித்தும், இதற்கு சிறப்புரை தந்தும் உதவிய பேராசிரி யார் ஸ்ரீமான் P. சாம்பமூர்த்தி அய்யர் அவர்களுக்கும், அவ் வப்போது அச்சாகிவரும் பாரங்களில் ஸ்வர தாளக் குறிப்புப் பிழைகளையும், மற்ற பிழைகளையும் ஆராய்ந்து களைந்து சிறப்புரை தந்தும் உதவிய சங்கீத பூஷணம் ஸ்ரீ S இராம நாதன் அவர்களுக்கும், இந்நூலுக்கு சிறப்புரை தந்துதவிய ரும் என் தகப்பனாரிடம் புத்திரமித்திரராய் நெருங்கிப் பழகிய வரும், என் தகப்பனார் இயற்றியுள்ள "சந்த சாஹுபதம்" என்ற 72 மேளகர்த்தா ராக கீர்த்தனைகள் அச்சாகும் தரு வாயில் அவருக்கு பலவித உதவிகள் புரிந்தவரும் எங்கள் குடும்பத் தலைவரும், ஆப்த நண்பருமான ஸ்ரீமான் N இராம கிருஷ்ணய்யர் M.A.B.L. M.P. அவர்களுக்கும், பழைய "அழ கர் குறவஞ்சி" புஸ்தக பிரதியிலிருந்து எல்லாவற்றையும் நக லெடுத்து அச்சுக்கு கொடுத்து, அச்சாகி வரும் பாரங்களில் பிழைகளைத் திருத்தி உதவியளித்த எனது ஆப்த நண்பர் ஸ்ரீமான் G. சந்திரமௌளி அவர்களுக்கும், இந்நூலை வெகு சிறந்த முறையில் விரைவினில் அச்சிட்டுத் தந்த அல்லயன்ஸ் பிரஸ் நிர்வாகி ஸ்ரீ K. வெங்கடராமன் அவர் களுக்கும் என் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன்

இந்நூலுக்கு சிறப்புரை தந்து ஆசீர்வதித்த காஞ்சிகாம கோடி பீடத்தை அலங்கரிக்கும் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேக ரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் பாதாரவிந்தம் தனில் என் அனந்த கோடி நமஸ்காரம்.

நயினான் தெரு,
அபிராமபுரம்,
சென்னை-18

நாகமணி
பதிப்பாசிரியர்

நூலாசிரியர் வரலாறு

நாடகத் தமிழான "அழகர் குறவஞ்சி" நூலை இயற்றிய ஸ்ரீமான் கவி குஞ்சரபாரதியவர்கள், சென்ற நூற்றாண்டில், மதுரை ஜில்லாவில் மிக க்யாதி பெற்று விளங்கிய மஹா வித்வான்.

இவர் ஆங்கிரஸ௵ ஆடி௴ (1810௵) ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள பெருங்கரை என்னும் கிராமத்தில் ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியவர்களுக்கு திருக்குமாரராய்ப் பிறந்தார். பெருங்கரை இராமநாதபுரம் ஜில்லா சிவகங்கை ஸமஸ்தானத்தைச் சேர்ந்தது. இவருடைய முன்னோர்கள் ஆதியில் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்தவர்கள். சுமார் 300 வருஷங்களுக்கு முந்தி மகாராஜா ரகுநாதசேதுபதியவர்கள். ஷை பாரதியவர்கள் முன்னோர்களுக்கு தானமாககொடுத்த பெருங்கரையில் குடிபுகுந்து தங்கியவர்கள். சீலமும், ஒழுக்கமும், சிறந்து விளங்கிய இவ்வேத வித்துக்களின் பரம்பரையில் பல தேர்ந்த வித்வான்கள் இருந்ததாக தெரிகிறது இவர்களுள் கோடீசுவரபாரதி என்று தமிழிலும், ஸம்ஸ்கிருதத்திலும் மிக்க கல்வி தேர்ச்சிபெற்ற வித்வானொருவர் இருந்தார். அவருடைய புத்திரர்தான் ஸ்ரீமான் சுப்ரமண்ய பாரதி. வெகு காலம் புத்திர ஸந்ததி இல்லாக் குறையினால் மிக மனத்துயருற்று தமது சொந்த ஊராகிய பெருங்கரைக்கு அருகிலுள்ள கொடுமளூரில் கோயில் கொண்டெழுந்தருளிய ஸ்ரீ முருகப் பெருமான் சந்நிதிக்கு தம் மனைவியோடு வாரம் நடந்து விரதமிருந்து பூஜித்து வணங்கிய மெய்யன்புக்கு உவந்து முருகக்கடவுளது திருவருளினால் ஒரு புதல்வனை அடைந்தார். அவரே நமது "கவிகுஞ்சர பாரதி"யவர்கள்.

இவர் தக்க பருவத்தில் கல்வி கற்க ஆரம்பித்து அதி பால்யத்திலே தமிழிலும், ஸம்ஸ்கிருதத்திலும் மிக்க கல்வித்

திறம் வாய்ந்து கவிபாடுவதிலும் பாண்டித்யம் பெற்று, சங்கீதத்திலும் தேர்ச்சியுற்றிருந்தார். பாரதியவர்கள் இளமைப் பருவத்தில், பதஸாஹித்யம் செய்வதில் மிக ப்ரபலமடைந்திருந்த "மதுரகவி பாரதி" யவர்களோடு புத்திர மித்திரராக நெருங்கிப் பழகிப் பயின்று வந்தமையால் இவருக்கு பன்னிரண்டாம் பிராயத்திலேயே பதங்கள், கீர்த்தனங்கள் பாடும் அற்புத சக்தியுண்டாயிற்று தமக்கு கிடைத்த அருள் வாக்கை தங்கள் இஷ்டதெய்வமான ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமிமீதும், ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர்மீதும் இதர தெய்வங்கள்மீதும், கீர்த்தனங்கள், ப்ரபந்தங்கள் பாடுவதில் உபயோகித்தாரேயன்றி நரஸ்துதியில் வினியோகிக்காமலிருந்தது மெச்சிப் பாராட்டத் தகுந்தது. இதற்கு முக்கிய காரணம் இவரது தெய்வ பக்தியே.

இவரது பதினெட்டாம் பிராயத்தில் கடுமையாள ஜ்வர நோய்கண்டு பலஹீனமுற்று சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். இவ்வாறிருக்கையில் அவ்வூர் கிராம தேவதை "தருமசாஸ்தா" இவர்முன் தோன்றி "தன்மீது ஒரு ப்ரபந்தம் பாடினால் ஜ்வரநோய் தீரும்" என்றருளியதாக ஓரிரவு கனவு கண்டார். மறுநாள் காலையில் விழித்தெழுந்ததும், அசக்தி மிகக் குறைந்து பசியுண்டாகியும், உற்சாகமும் அதிகரித்து இருக்கக்கண்டார். தருமசாஸ்தாவின் திரு அருள் பயனால் அசக்தி குறைந்ததென தெளிந்து அக்கடவுள் கட்டளைக்கு கீழ்ப் படிந்து அவர்மீது "பள்" ஒன்றுபாடி முடித்து அபிஷேக பூஜைகள் சிறப்பாய் நடத்தி அவர் சந்நிதியில் தாம்பாடிய ப்ரபந்தத்தை அரங்கேற்றி சமர்ப்பித்தார், உடனே ஜ்வர நோயும் இவரை அடியோடு விட்டு நீங்கியது. தமது வாணாளையும் வாக்கு விசேஷத்தையும் வறிதே சிலவிடாது "திருமாலிருஞ் சோலைமலை அழகர் மீது ஒரு "குறவஞ்சி"யும், திருமுருகனின் அவதாரத்தை விளக்கும "ஸ்ரீஸ்காந்த புராணக் கீர்த்தனையையும்" மதுரை ஸ்ரீ மீனாக்ஷி அம்மையின் மீது" அடைக்கல மாலையும்" "கயற்கணி மாலையும" திருப்பதி ஸ்ரீ வேங்கடசலபதி மீது "திருவேங்கட மாலையும்" "திருமுக விலாஸமும" இன்னுமனேக தனிப் பாசுரங்களும், கீர்த்தனங்களும், பதங்களும்பாடி கடவுளைத் துதித்து வழிபட்டுவந்

தனர், தமதில்லத்திலும் பஜனை உற்சவாதிகள் விமரிசை யாக நடத்திவந்தார்கள். சுமார் நூறு வருஷங்களுக்கு முன் மதுரை ஜில்லா சிவகங்கையில் ஜமீந்தாரிணியாக இருந்த மாக்ஷிமை தங்கிய காத்தமநாச்சியாரவர்கள் காலத்தில் அழகர் குறவஞ்சியை இயற்றி அவர்கள் அரண்மனையில் மகா வித்வான்கள் முன்னிலையில் இதை அரங்கேற்றிப் பல்லக்கு வரிசை முதலிய முதன் மரியாதைகள் யாவும் பெற்றார். இது பக்தி, ச்ருங்காரம், என்ற இரண்டு ரஸங்களும் நிறைந்தது. இதிலுள்ள கீர்த்தனங்களும், பாக்களும், சொல், பொருள், இசை முதலிய நயங்களால் கேட்போர் மனதை உருக்கி பக்தியில் வயப்படுத்தக் கூடியவை.

நாளடைவில் இவர் கீர்த்தி வெளிப்போந்து நிலவலா-யிற்று. அக்காலத்தில் சிவகங்கை ஸமஸ்தானாதிபதியா யிருந்த கௌரிவல்லப மஹாராஜா அவர்கள் இவர்களுடைய கீர்த்தனங்கள் சிலவற்றை தமது ஸமஸ்தான சங்கீத வித்வான்கள் பாடக்கேட்டு பாரதியவர்களை தமதுஸதஸுக்கு வர வழைத்து இவரியற்றிய பிரபந்தங்களை தமது வித்வான்கள் முன்னிலையில் இவர்களையே பாடிப் பிரஸிங்கிக்கச் செய்து கேட்டு, மிக்க சந்தோஷமடைந்து, இவர்களுக்குத் தக்க ஸன்மானங்களளித்து மரியாதை செய்வித்ததுமன்றி அச் சபையிலுள்ள வித்வான்களால் "கவி குஞ்சரம்" என்ற சிறப் புப் பெயருமளித்துத் தமதாஸ்தான வித்வான்களுள்ளொருவ ராய்,தமது ஸபைக்கோர்பூஷணமாய்இருக்கும்படிவேண்டி னார். அவ்வாறே மஹாராஜாவின் வேண்டுகோளுக்கிணங்கி தம்மூரை விட்டு சிவகங்கையிலேயே கௌரிவல்லப மஹா ராஜா காலத்தும் அவருக்கு பிறகு வந்த "சத்ரபதி போதகுரு" மஹாராஜா காலத்தும், மிக்க மரியாதையோடும் அன் போடும் ஆதரிக்கப் பெற்று வசித்து வந்தார்கள். ஒரு சமயம் மஹாராஜா வேட்டைக்குச் சென்று பதினாறடி வேங்கை யொன்றைக் குத்திக் கொன்ற தீரச்செயலைக் குறித்து ஸமஸ்தான வித்வான்கள் புகழ்ந்து பாடிய பாடல்களெல்லா வற்றினும் பாரதியவர்கள் பாடிய "வேங்கைக் கும்மி" நவரஸங் களும் பொருந்தி வெகு இனிமையாயிருக்கக் கண்டு நன்கு

மதித்து அதை தமது ஸதஸில் அரங்கேற்றச் செய்து அதற்கு சன்மானமாக "கொட்டங்கச்சி யேந்தல்" என்னு மொரு கிராமத்தை தான சாஸனஞ் செய்து கொடுத்து ஆடையாபரணாதி பரிசுகளுமளித்து சிவிகையிலேற்றி ஊர் வலமும் செய்வித்து சிறப்பித்தார்கள்.

இவ்வாறு சிலவருஷங்கள் கழிய தமிழிடத்து தளராத பேரன்புடைய இராமநாதபுரம் சேதுபதியாக அக்காலத்து விளங்கிய முத்து ராமலிங்க சேதுபதியவர்கள் சிவகங்கையி லிருந்த பாரதியவர்களை தமது ஸதஸுக்குவரவழைத்து இவர் கள் இயற்றியுள்ள பிரபந்தங்களை தமது ஸபையிற் பாடக் கேட்டு வியந்து புகழ்ந்து பாராட்டி கௌரவப்படுத்தி தம தாஸ்தான வித்வான்களிலொருவராய் நியமித்துக் கொண்டு தம்மிடத்திலேயே இருக்கும்படி செய்து கொண்டார். மஹா ராஜாவின் தமையனரான பொன்னுசாமித்தேவரவர்களும் இவர்களை வரவழைத்து தாமும் மிக நன்கு மதித்தும், அபிமா னித்தும் வந்தார்கள். இவரது இனிய கவிபாடுமாற்றலையும், சங்கீத வித்வத்தையும் நன்குணர்ந்த பொன்னுசாமித் தேவரவர்களுக்கு தக்கதோர் ஒரு பெரும் நூலை பாரதியவர் களைக் கொண்டு இயற்று விக்க வேண்டுமென்ற பேரவா உண்டாயிற்று.

அது விஷயமாயாலோசித்து சம்பூராமாயணத்தை கீர்த் தனை ரூபமாக மஹாவித்வான் அருணாசலக் கவிராயரவர்கள் இயற்றிய "இராம நாடகம்" என்னும் நூலைப்போலவே கச்சி யப்பரது கந்தபுராணத்தையும் இனிய தமிழ் நடையில் கீர்த்தனங்களாகவும், விருத்தங்களாகவும் செய்வித்தால் லோகோபகாரமாயிருக்குமெனக் கருதி, தமது கருத்தை ஸ்ரீ பாரதியவர்களுக்கு தெரிவித்தார். இவர்களும், குமரக் கடவுள் தமது குலதெய்வமாதலாலும், தமக்கே சுப்ரமண்யக் கடவுளிடத்துள்ள பக்தி மிகுதியாலும் தமது வாழ்நாளில் சென்றதுபோக எஞ்சிய சிறு பாகத்தை, பூர்வபூஜா பலத் தாலும் தெய்வ கிருபையாலும் தமக்கு கிடைத்துள்ள கவித்வத்தையும் வினியோகிக்க இதைக்காட்டிலும் மேலான

விஷயமொன்று இல்லையென்ற பூரண நம்பிக்கையாலும் பொன்னுச்சாமித் தேவரவர்கள் வெளியிட்ட கருத்தை அன்போடங்கீகரித்து அவ்வாறே செய்ய உடன் பட்டார்கள். தேவரவர்களும் அது தருணமே சம்பந்தசரணாலயரியற்றிய "ஸ்காந்த புராண"ச் சுருக்கப் புத்தக மொன்றை பாரதி யவர்களுக்குக் கொடுத்தார்.

இப்பெரிய காரியத்தை தாம் ஒப்புக்கொண்டதும் இராஜாங்க மத்திபிலிராது, தமதூரிலேயே மனவமைதியோடு தனித்துஇருந்தாலொழிய இதைத் தக்கவாறு செய்து முடித்தல்அசாத்யமெனக் கருதி,தமது அபிப்ராயத்தை மஹாராஜா அவர்களுக்கும், தேவரவர்களுக்கும் தெரிவித்து அவர்களிடம் விடைபெற்று பெருங்கரை சேர்ந்து அங்கே வசித்து வந்தார்கள். அப்பொழுது இவர்களுக்கு வயது ஐம்பத்தைந்து. அதுமுதல் 5 வருஷத்தில் நவரஸங்களும் பொதிந்துள்ள "ஸ்காந்த புராணக் கீர்த்தனை" என்னும் நூலை இயற்றிப் பூர்த்தி செய்தனர். இந்த நல்ல காரியத்தின் முற்பயனாய், முந்தியே பக்தியில் கனிந்திளகிய இவர் மனது அதி பக்குவத்தையடைந்து ப்ரவிர்த்தியிற் செல்லாது நிவிர்த்தியை நாட இவர் திரும்பவும் இராஜஸதஸுக்கு போக விரும்பாமல் தமதூரிலேயே தங்கினர். அதுமுதல் தமதூரிலேயேயிருந்து யாதொரு குறைவுமின்றி நித்ய நைமித்திக கர்மாக்களை ஒழுங்காய்ச் செய்தும் தெய்வபூஜை இவைகளைச் செம்மையாய் நடத்தியும், சுகமாய் தம் வாழ்நாட்களைக் கழித்து வந்தார்கள்.

இதற்குப்பிந்தி இவர்கள் வேறு நூலொன்றும் இயற்றியதாகத் தெரியவில்லை. ஆனல் பல சமயங்களில் பாடிய தனிப்படல்கள் அநேகமுண்டு. இவருடைய வாக்கை அருள்வாக்கென்றும், நிக்ரஹானுக்ரஹ சக்தியுடைய தென்றும் யாவரும் மதித்து வந்தார்கள். ஒரு சமயம் ஊரில் மழையில்லாமற் பயிர்கள் வாடக்கண்டு,

கந்த நீ தந்தகொட்டக் கச்சி யேந்தற்
கணை பை மறிச் சான்வயலின் கதிர்களுக்கு

வந்துமழை பொழிந்து செந்நெல்விளைந்து நன்றாய்
மனை நிறைந்து பரிபூர்ணமாக வென்றன்
சிந்தைமகிழ்ந் துனது சங்கீர்த்தனங்கள் பாடித்
தினந்தினமும் பஜனை செய்து க்ஷேமமாகச்
சந்ததிகள் மேன்மேலும் குறைவில்லாமற்
சகலவளமுந் தழைக்கச் செய்வாயே

என்னும் பாடலைப்பாட, உடனே மழைபெய்து சுபிட்ச முண்டாயிற்று. இவ்வாறு இவர் பாடிய பல பாடல்கள் பலவுண்டு. பின்னொரு சமயம் இவர் வீட்டு எருமைக்கு நோய் கண்டு சாகக்கிடக்கையில்,

வேலவனே செம்பொன் விலைகொடுத்து வாங்கியவென்
பாலெருமைக் குற்றிடுந்துன் பங்களைத் தீர்த்தேலுவையாய்
வாலெடுத்து வீசி மடி சுரந்து மென்மேலும்
பால்கறக்கச் செய்வாய் பரிந்து.

என்றொரு வெண்பாப்பாட வியாதி நீங்க மாடு பிழைத்தது என்றும் சொல்லுகிறார்கள். இதனால் அற்பவிஷயங்களிலும் தெய்வ கிருபையையே பெருந்துணையாக நம்பியிருந்தார் என்பது நன்கு விளங்கும்.

மேலும், இவர் காலத்து வித்துவான்கள் இவரை ஒரு தெய்வமாகவே பாவித்து வந்தார்கள். இக்காலத்து காளமேகம் என்று பேர் பெற்றிருந்த வேம்பத்தூர் பிச்சுவையர் அவர்கள் ஒரு சமயம் இவரிடம் விபூதி வாங்கி நெற்றியிலணிந்து கொண்டவுடன்.

நெற்றிதனி லணிந்தே னீங்கினேன் கர்மவினை
யெற்றிவிட்டேனின்பநிலை யெய்தினேன் - முற்றுணர்ந்து
கந்தனருள் பெற்ற கவிகுஞ்சரமறையோன்
தந்த விபூதிதனை.

என்ற வெண்பா பாடியருளினார்.

1894-ம் ஹு ஆயிரம் பிறை கண்ட எண்பத்திநாலா வது வயதில் இவருக்கு வேதோக்தமாக சாந்தி ஜபங்கள் செய்து சதாபிஷேகம் நடத்தப்பட்டது. இதற்கு இரண்டு வருடங்களுக்கு பிந்தி (ஹேவிளம்பி ஹு கார்த்திகை மீ) எண்பத்தியாருவது வயதில் தமது புத்ர புத்ரிகள், பௌத்ர பௌத்ரிகள், பந்துக்கள் மத்தியில் தேகாவஸ்தைகள் சிறிது மின்றி நல்லறிவோடு கடவுளிடத்து செலுத்திய மனதின ராய் இவர் மோக்ஷ நிலை எய்தினர்.

நூலாசிரியர் வரலாறு முற்றுப்பெற்றது.

பொருளடக்கம்

எண்	கீர்த்தனம்	ராகம்	தாளம்	பக்கம்
1.	அங்கண்மா வனந்திகழ்	விருத்தம்		78
2.	அங்குலிய மிட்டகரம்	யதுகுல காம்போதி	ஆதி	136
3.	அணையவாரும்	நவரோஸ்	திரிபுடை	85
4.	அம்பினைத் தொடுத்து	காம்போதி	ஆதி	163
5.	அம்மையென் குறித் திறமை	பைரவி	ரூபகம்	130
6.	அரவிலே நடைபயின்று	விருத்தம்		89
7.	அருள் செய்யவேணும்	அடாணு	ஆதி	13
8.	அருள் பாரையா	தோடி	"	10
9.	அல்லியங் கோதை	விருத்தம்		80

10.	அழைத்து வாடா குளுவா	சங்கராபரணம்	ஆதி	*176*
11.	ஆர்த்த மரிற் குவியிரத	விருத்தம்		*117*
12.	ஆவரை யாற்றுவரை	,,		*9*
13.	ஆவின் கன்றை	ஆனந்தபைரவி	திச்ரம்	*110*
14.	இவனுரோ அறியேனே	காம்போதி	ஆதி	*58*
15.	இக்கதை சிங்கன்	விருத்தம்		*167*
16.	உரலொடு தவழ்ந்து	,,		*163*
17.	உரைத்த தெலாம்	,,		*94*
18.	எங்கள் சாரியொன்றே	பிலகரி	ரூபகம்	*115*
19.	எடுத்துடுக் கடிக்கும்	விருத்தம்		*142*
20.	எண்ணிரண்டிரண்டு	,,		*170*
21.	ஏடவிழ்தார் பைந்துளப	வெண்பா		*17*
22.	ஒரு கையிலே	விருத்தம்		*104*
23.	கடக்க வோர் கரையிலாத	,,		*91*
24.	கடலேயென் றனே	செஞ்சுருட்டி	ரூபகம்	*94*
25.	கட்டியக் காரன் வந்தான்	மத்ய மாவதி	ஆதி	*24*
26.	கத்தா வென்றேராவே	கலிப்பா		*135*
27.	கதிக் குடைய	விருத்தம்		*101*
28.	கலை முழுது முணர்ந்தவர்க்கு	,,		*22*
29.	கலையளித்துக் கோவியர்	,,		*110*
30.	கன்றிகராவுண்டவொரு	,,		*170*

31.	கன்னியருடனே கூடி	விருத்தம்		145
32.	கார் காட்டும் சோலை	கட்டளைக் கலித்துறை		136
33.	காருலாவிய சோலை	யது குலகாம்போதி	சாபு	126
34.	காலிலிரு கால் விலங்கு	விருத்தம்		65
35.	குருகினம் பிடிக்கவே	புன்னாகவராளி	சாப்பு	168
36.	குருகின்மேற் கண்ணி	விருத்தம்		175
37.	குறவஞ்சி மேவும்	வெண்பா		5
38.	குனிக்கு முயர்	விருத்தம்		133
39.	கொல்ல வென்றரக்கன்	விருத்தம்		176
40.	கோல மிகுஞ் செங்கண்	சாரங்கா	ஆதி	27
41.	சங்கதிர் பனமணி	விருத்தம்		97
42.	சந்தணக் குழம்பெடுத்து	சங்கராபரணம்	ரூபகம்	70
43.	சர்க்கரை யொருவன்	விருத்தம்		177
44.	சன கனளி விலை முறித்து	,,		164
45.	சிங்கியெங்ஙனம் போயினுள்	காபி	ரூபகம்	181
46.	சீர் மறை புகலும்	நிலைமண்டில ஆசிரியப்பா		118
47.	சுகம் பெற்ற மோகினி	விருத்தம்		159
48.	செக்கச் சிவந்த	நொண்டிச் சிந்து	ஏகம்	182
49.	செங்கண் மாலழகர்வரும்	யது குலகாம்போதி	ஆதி	40
50.	செங்கரம் பார்த்தேன்	விருத்தம்		137
51.	செங்கையிலே தூசு	கொச்சகக்கலிப்பா		186

52.	செய்க்குவளைத் தேன்	விருத்தம்		105
53.	சேடசயனஞ் செய்து	யது குலகாம்போதி	ரூபகம்	89
54.	சேலிருக்கும் விழி	விருத்தம்		85
55.	சோலை மலைச் சிங்கனும்	தன்யாசி	ரூபகம்	160
56.	ஞால முண்டமாலழகர்	கொச்சகக்கலிப்பா		182
57.	தப்பிப் போடாமன்மதா	ஆனந்தபைரவி	அட தாளம்	151
58.	தனிக்குறி	ஆரபி	சாபு	133
59.	தாதிலங்கு சோலை	விருத்தம்		117
60.	தாவு தன்னில்லங் காக்க	,,		184
61.	திருப்பவனி வந்த	சௌராஷ்டிரம்	ஆதி	31
62.	திருமறை தேடரிய	விருத்தம்		17
63.	திருமாலழகருக்கு	சௌராஷ்டிரம்	ஆதி	
64.	திருமாலழகர் பாதம்	யது குலகாம்போதி	திரிபுடை	162
65.	தீர்த்த மகிமையை	ஆனந்தபைரவி	கண்ட ஜாதி திரிபுடை	122
66.	துங்க மாலழகர் மேவும்	விருத்தம்		122
67.	துங்க வழகர் பதம்	கொச்சகக் கலிப்பா		178
68.	தேடிச் சென்றுனே சிங்கியை	கரகரப்பிரியா	ரூபகம்	178
69.	தொய்யிலேந்திய	விருத்தம்		23
70.	நம்பனிடம் பார்த்தனுக்கு	கொச்சகக் கலிப்பா		115

71.	நிதி சிறந்த பாடி தனிற்	விருத்தம்		162
72.	நீயறிந்தால் போலவனே	,,		147
73.	நேமிசங் கணிந்தோன்	,,		61
74.	பசத்தாக மின்னனே	,,		76
75.	படித்து முன்ளுட் பழகி	,,		69
76.	படியளந் த கிலம்	,,		129
77.	பண்ணை தொறும் கண்ணி	,,		173
78.	பதம்பவன சுதன் பரவும்	,,		40
79.	பறந்தோடிப் போயினவையே	யமுனு கல்யாணி	ஆதி	174
80.	பறவைகள் வருகுதையே	கல்யாணி	சாபு	165
81.	பன்னிரு நாமஞ் சொலிப்பன்	விருத்தம்		9
82.	பாண்டவரை யாண்டவரை	,,		8
83.	பார்மெழுகி	நாதநாமக்ரியை	அட தாளம்	135
84.	பாவையே சாமி	கேதாரகௌளம்	ரூபகம்	91
85.	பூட்டகஞ் செய்கிருய்	அமீர் கல்யாணி	ரூபகம்	145
86.	பூமருவு சங்கப் புயலழகர்	வெண்பா		1
87.	பேசாதடையே சற்றே	சௌராஷ்டிரம்	அட	171
88.	பேய் பிடித்த தலைக் கிறுக்கோ	விருத்தம்		141

89.	பொன்னு வருட்டவர்	விருத்தம்		126
90.	மகளென்னமோ ஒரு	காபி	ரூபகம்	66
91.	மங்களஞ் சேர் சோலை	மாஞ்சி	ரூபகம்	52
92.	மங்கையர் கண்ணினை	காம் போதி	சாபு	172
93.	மங்கையே நீ தூது போடி	பரசு	ஆதி	78
94.	மஞ்சனைய கருங்குழற்	விருத்தம்		71
95.	மதனுவுனக் கேனிந்த	பியாகடை	ரூபகம்	101
96.	மதியுலகந்தனையுலவி	சந்தவிருத்தம்		26
97.	மதியை மயக்குதினி	ஸ்ரீ	ஆதி	61
98.	மதிவாழி ஆழ்வார்கள்	வாழி விருத்தம்		189
99.	மந்தர தர மாதவ	தோடி	ஆதி	36
100.	மருத்துளப அழகர்	மோகனம்	சாபு	153
101.	மருத் தொடையு மிளைஞர்	காம்போதி	சாபு	43
102.	மலைக் குறவஞ்சி வந்தாளே	பியாகடை	ஆதி	108
103.	மலைமகள் தனருள்	விருத்தம்		13
104.	மன்றிலகுதார்	,,		172
105.	மாகனகந் தூசு நிதி	,,		52
106.	மாதன மாவினம் பூமி	,,		151

107.	மார்தேயங்கேயே துக்கு	கல்யாணி	ஆதி	71
108.	மாமேவு சோலை மலையிடத்து	விருத்தம்		1
109.	மாலழக ராயா திருவருளினாலே	,,		186
110.	மாலழகர் மாலால்	வெண்பா		104
111.	மாலிருந்த மனமதன	விருத்தம்		187
112.	மானிட ஜீவனில்	ஆசிரியப்பா		141
113.	முக்கியமாயிருக் குறியை	யது குலகாம்போதி	ஏகதாளம்	143
114.	மோக மிஞ்சு தென்னசெய்வேன்	வகுளாபரணம்	ஆதி	76
115.	மோகனமா மயில்	அமீர்கல்யாணி	ஆதி	45
116.	மோகனவல்லி பந்தடித்தனள்	கமாசு	ரூபகம்	47
117.	மோகனவல்லி மின்னாள்	மாஞ்சி	சாபு	81
118.	வந்தடித் தேற்பவர்க்கு	விருத்தம்		46
119.	வந்து சேருவார்மானே	சகானா	சாபு	148
120.	வயிணவர் தரிக்கும்	நிலைமண்டில ஆசிரியப்பா		105
121.	வழக்குக்கோ வந்தாய்	விருத்தம்		146
122.	வள்ளைக்குழை மோக	வெண்பா		88
123.	வன் கொடுமை செய்கிறாய்	பியாகு	ஆதி	98
1 24.	வாதராஜன் குமாரனே	மோகனம்	,,	18

125.	வாலை மலைக்குமரி துணை	விருத்தம்		159
126.	வாலையருள் திருமகனே	ஹரிகாம்போதி	ரூபகம்	138
127.	வாளேர் விழி	வெண்பா		88
128.	வானையளந்துலவிய	விருத்தம்		22
129.	வெண்ணையுண்டு கோவியர்	,,		167
130.	வெம்மதிக் குந்தென்றலுக்கு	,,		87
131.	வேதாகமத் துறையும்	கொச்சகக் கலிப்பா		180
132.	ஸாமி மயூரகிரிவடிவேலா	கமாசு	ஆதி	9
133.	ஸ்வாமின் கஜமுகவிபோ	கானடா	ஆதி	2

ஸங்கீத ஸாகித்ய வித்வான்:

ஸ்ரீ என். கோடீஸ்வரய்யர் மனைவியார் கற்பகாம்பாள்

பதிப்பாசிரியரின் பெற்றோர்கள்

பாயிரம்

விநாயகர் துதி

வெண்பா

பூமருவு சங்கப் புயலழகர் மீதினிலே
தேமருவு செந்தமிழைச் செப்பவே—தாமருவு
கும்பமுலை யம்பிகைமுன் கொஞ்சி விளையாடிவரும்
கம்பமதத் தும்பிபதம் காப்பு.

இதுவுமது—விருத்தம்

மாமேவு சோலைமலையிடத்து மன்பருளத்துமிக வளர்ந்து பாண்டிப்
பூமேவு சிவகங்கை நகர்தழைக்க மாலழகர் புரிந்ததான
பாமேவு குறவஞ்சி நாடகச் செந்தமிழைமிகு பரிவாய்க்கூறக்-
காமேவு தந்திமுகத்தைந்து கரத்தெந்தை பதங் காப்பதாமே.

1. கீர்த்தனம் **இராகம் கானடா—ஆதி தாளம்**

பல்லவி

ஸ்வாமின் கஜமுகவிபோ—மாமவ (ஸ்வா)

அனுபல்லவி

சாமளவர்ண ஸூநய—சக்திசங்கர தனய
கோமள குண்டலய குமாரஸஹோதர ஜெய (ஸ்வா)

சரணம்

இந்த்ராதி வந்திதபதா ச்ரித
மந்தார மஞ்சுளஸதா முனி
ப்ருந்தாதி ஹ்ருத்கமல ப்ருங்கஸத்ருச ஸூகமு
குந்த பாகிநேய ஹிதகுஞ்சர கவிப்ரணீத (ஸ்வா)

விநாயகர் துதி

பல்லவி

(1) ரீ , நீ , ஸ ரி ப ம ப | கா ; | , த மா ரி ஸா ||
ஸ்வா மின் க ஜ மு க வி போ மா . ம வ

(2) ,, ஸ ரி ப ம ப நி த | ப ம கா ; | , க மா ரி ஸா ||
க ஜ மு க . வி . போ . . மா . ம வ

அனுபல்லவி

பா , ப க ம த நி ஸ் ஸ் | க் ம்ா ரி ஸ்ா ஸ் நி | ஸ் நி ரி ஸ் நி ப ப ம ||
சா ம ள . வர் ண ஸு நய சக் தி சங் . க . ர . த . . . ன ய

பா , ப க ம தா , த த த | தா நி ஸ் நி ப பா | கா மா , ரி ஸா ||
கோ மள கு . ஞ ல ய கு மா ர . . ஸஹோ த ர ஜ ய

சரணம்

ரி நீ ஸ ரி ப ம ப | கா ; | , க மா ரி ஸா ||
இந்த் ரா தி வந்தி த ப தா ஆ . ச் ரித

,, ,, | ,, | ,, ப பா ||
ம ந் தா ர மஞ்சுளஸதா மு னி

அனுபல்லவிபோல் பாடவும்

பிரு ந் தா தி ஹ்ருத்க ம ல ப் ருங் க ஸ த்ருச ஸு . . க . . மு .
குந் த பாஹூ நே ய . . ஹி த கு ஞ் ச ர க வி ப் ர ணீத
(ஸவாமின்)

5

முருகக்கடவுள் — வெண்பா

குறவஞ்சி மேவும் குகநாத னேபல்
குறவஞ்சி யோடநலங் கூடக்—குறவஞ்சி
நாடகத்தை மாலழக நாரணனுர் மீதிசைத்துப்
பாடல்செய நின்பதங் காப்பாம்

2. கீர்த்தனம் **இராகம்—கமாசு ஆதிதாளம்**

பல்லவி

ஸாமி மயூரகிரிவடிவேலா ஓம் சரவணபவகுரு (ஸா)

அனுபல்லவி

ஸோமசேகர குமார வரத ஜய
ஸுப்ரகாச சிவ ஸுப்ரமண்ய குரு (ஸா)

சரணங்கள்

1. நானுனதிணையடி மறவேனே - மன
   தினிலனுதினமுமே
   கானவர் குலமயில் மருவிய
   கந்தனே யழகர் செந்தமிழ்க் கருள்புரி (ஸா)
2. மாமுனி பரவுங்கமலசரணு - இமை
   யவர்கள் பயஹரண
   கோமள குணநய மழை பொழி
   கொண்டலே யழகர் தண்டமிழ்க் கருள்புரி (ஸா)
3. மாலகமகிழ்வுறு திருமருகா - மலை
   மகளுதவுமுருக
   கோலமிகு வரசுப கவி
   குஞ்சரஞ் சொல்குற வஞ்சியின் சொலருள் (ஸா)

பல்லவி

ஸ்ா ,ஸ் நி த ம ப நி த ப ம ம க ரி க | மா ; ; ம க | ம நி த நி த ப் த நி ||

ஸா மி . . ம யூ . ர கி ரி வ டி வே வ லா ஓ ம் ச ர வண ப வ கு ரு

அனுபல்லவி

மா க ம நி த நி ப — த நி ஸ் நி ஸ் ஸ் ஸ் ஸ் | ரீ ரிஸ்ா ஸ்நித | நீ த மா ப த நி ||

சோ ம சே கரகு . —மா . ர வ ர த ஜ ய சுப்ரகாசசிவ சுப் ரமண் ய கு ரு

சரணம்

ஸ்ா ; ; ஸ் நி நி த த ப ம க ரி க | மா ; ; மக | ம நி த நி த ப த நி ||

நான் உ ன தி ணை ய டி ம ற வே . னே மன தினி லனு தினமுமே

மா க ம நி த நி ப த நி ஸ் நி ஸ் ஸ் ஸ் ஸ் | ரீ ரிஸ்ாஸ்நித | நீ த ப ம ப த நி ||

கா . . . னவர் . கு ல ம யில் ம ரு வி ய கந்தனேஅழகர் செந்தமிழ்க்கருள்புரி

(மற்ற சரணங்களும் அதேபோல்)

விச்வநாதர் - விசாலாட்சி

விருத்தம்

பாண்டவரை யாண்டவரை பண்ணவர்கா மண்ணளப்பப்
பலிபாலன்றுள்
நீண்டவரை அழகரைக்கொண் டாடி வஞ்சிப்பாவினத்தை
நிகழ்த்த வென்னே
ஆண்டவரைச் சிவகங்கை யமர்ந்த வரையம்பலத்தில்
அருளானந்தத்
தாண்டவரை விசுவநாதரை விசா லாக்ஷியொடுச்
சரித்து வாழ்வாம்.

சோலைமலை அழகர்

விருத்தம்

*ஆவரை யாற்றுவரையுகந் தவரைமத அத்தவரை யாண்டு மான்மேல்
நாவரையக் கணைதொடுத்த மாவலரை மேவலர்செய் நடுக்கந் தீர்த்துக்
காவரைப் பைந்துகிலையெனக் காத்தவரைக் கயிலைவரைக் கடவுள் வாழ்த்தும்
தேவரைத்தென் சோலைவரையழ கரைக்கோ வலவரையாம் சிந்திப்பாமே.

இதுவுமது—விருத்தம்

பன்னிருநா மஞ்சொலிப்பன் னொருமகம்செய் தேத்தப்
பண்டுதச ரதன்மகவாய்ப் பாடி நவநீதம்
தன்னையுண்டட் டாக்கரத்தின் பொருளெனக் கோவியர்க்காச்
சப்தசுரவே யிசைத்தோ ரறுசமையங் காட்டி
மின்னுமுயர் பஞ்சவர்தூ தேவல் புரிந்தருளி
மிக்குறுநான் மறைமுதலாய் முத்தொழிலுமியற்றி
மன்னுமிரு வினைநீக்குமொரு பொருளா மெங்கள்
மாலழகர் பதமலரென் மணிமுடிக்குப் போதாம்.

---

*ஆவரை = கோவர்த்தன கிரி. ஆல் = ஆலிலை. துவரை = துவாரகை.

3. கீர்த்தனம் **இராகம்—தோடி ஆதி தாளம்**

பல்லவி

அருள்பாரையா கதியாரையா (அருள்)

அனுபல்லவி

மருமலர்த் துளபமணி மார்பா
திருமா லழகா ஜயபத்ம நாபா (அருள்)

சரணங்கள்

1. *பவப்பிணி நீக்கிப் பழவினைப் போக்கித்*
தவபக்தி யென்னிதையத் துறநோக்கி (அருள்)

2. *சவரிசெய் விருந்து தனையுண்டுவந்து*
அவனி யளந்தோ யகத்துளிருந்துன் (அருள்)

3. *சோனையை மாற்றித்துயரங்களாற்றி*
ஆனினங்காத்த சுந்தர ராஜ மூர்த்தி (அருள்)

தோடி—ஆதி

பல்லவி

; ; ; ஸா நீ - கா ; ரீ	கா ; ; - ரீ	ஸா - ஸா ரீ நீ	‖
; ; ; அரு ள் - பா ; ரை	யா ; ; - க	தி - யா . ரை	‖
ஸா ; ; ,,	க ம பா மா - கா	ரீ - ,,	‖
யா ; ; ,,	யா . . . - க	தி - ,,	‖
ஸா ; ; ,,	க ம ப த ப ம - கா	,,	‖
யா ; ; ,,	யா. . . . . - க	,,	‖
ஸா ; ; ,,	க ம ப த நி ஸ் - ஸ் நி	த ப - மா கா ரீ	‖
யா ; ; ,,	யா. . . . . - க .	தி . - யா . ரை	‖

ஸரிகரிரிஸ

யா. . . (அருள் பாரையா)

அனுபல்லவி

; ; ; தா பா கா ; மா | தா , - தா , - த நி | ஸா - த நி ஸ்ா நீ ||
ம ரு ம லர் | து - ள - ப . | . ம ணி . . ||

ஸ்ா , ஸ்ா , ,, | ,, | ,, ||
மார் பா ,, | ,, | ,, ||

ஸ்நித - பமக ,, | ,, | ,, ||
மா ர் - பா . ,, | ,, | ,, ||

ரி நீ - தபம ,, | ,, | ,, ||
மார் - பா , ,, | ,, | ,, ||

ஸ்ா , ஸ்ா , நீ க்ா , ரீ , நீ | தா , நீ , - ஸ்ா | நீ தா பா மா ||
மார் பா தி ரு மா ல | ழ கா - ஜ | ய பத் . ம ||

கா , ரி ஸ நி
நா பா . . (அருள்பாரையா)

(அனுபல்லவியைப்போல்)

கலைமகள் - விருத்தம்

மலைமகள்த னருள் சிறந்த வழுதி நாட்டில்
மகிமை திகழ் சோலைமலைத் தலத்திலென்றும்
நிலைமை கொண்டன் பரைக் காக்குங் கடவுளான
நீலவண்ண மாலழகர் பெருமை தன்னைத்
தலைமைபெறு குறவஞ்சித் தமிழாற் கூறத்
தவள நிறக் கருங் கூந்தற் பவளச் செவ்வாய்க்
கலைமகளென் திருநாவிலிருந்து நன்மை
காட்டுவாள் செஞ்சொலிசை கூட்டுவாளே

4. கீர்த்தனம் **இராகம் - அடாணு—ஆதி: தாளம்**

பல்லவி

அருள்செய்ய வேணும் வாணி—என்னுவில் நின்
றருள் செய்ய வேணும் வாணி

அநுபல்லவி

கருமுகிலுறைவள முறுசோலை மலைவளர்
திருமாலழகர் மீதிலுரை செய்யுங் கவிக்கு நீ (அருள்)

சரணங்கள்

1. பஞ்சலக்ஷணங்கள்கற் றறிந்தவ னிலேயே
பாவினங்களுரைக்கத்தெரியேனந் நிலேயே
தஞ்சமுன் பதமலாற் பின்புவே றிலேயே
ஸரளமாகவாக்குப் பெருகவுங்க மலேயே
(அருள்)

2. சத்தஸ்வரூபமாக விளங்கும் சந்நிதியே
சதுர்முகன் தன்க்குவாய்த்தருளும் சுரதியே
கர்த்தர் மூவரும் நிதம் துதிக்கும் சுமதியே
கமலாசனத்தில் வீற்றிருக்கும் பாரதியே
(அருள்)

3. ஞால முழுது மென்றன் கவிதனை மதிக்க
நாவலர் முதற் பெரியோர்கள்ஸம் மதிக்க
கோலமிகுங் கவிகுஞ்சரமின் சொல்கதிக்க
குணக்குறவஞ்சித்தமிழினைச்சொலித் துதிக்க
(அருள்)

பல்லவி

; ம பா ரி ஸ்ா - ஸ்ா ; - ஸ் த நீ | ஸ்ா ; ; நிரி | ஸ் ரி பா நி நி பா || மா
அருள் செய்ய வே ணும்வா ணி என் நா வி ல் நி ன் று

அநுபல்லவி

ம ப த ப ஸ் ஸ் ஸ் ஸ் ரி ம் ரி ஸ் ஸ் ஸ் த த | நி ஸ் ரி ஸ் ஸ் நி ஸ் நி |
க ரு முகில் உ றை வ ள முறுசோலை ம லை வ ளர் தி ரு மால ழ கர்மீதில்

ஸ்ா ஸ்ா ஸ்ா ஸ்ா ப த நி * ப ம பப ரி ||
அரு ள் செ ய்ய உரைசெய்யுங்கவிக்குநீ ||

சரணம்

கா ம ப ப ப ப ப - ப நி நி ப ப ம மா |
பஞ் ச ல க்ஷ ண ங் கள் கற்றறிந் த வ ணி லை யே

ம ப ரி ஸ் ஸ் ஸ் ஸ் ஸ் | நி ஸ் ரி ஸ் த த தா ||
பாவின ங் க ளு ரைக்கத் தெரியேன் அந்நிலையே ||

நீ நி ஸ் ரி ம் ரி ஸ் நி ஸ் ரி ஸ் த த தா |
தஞ்ச முன் ப த ம லர் பி ன் பு வே றி லே யே |

நி ஸ் ரி ஸ் நி நி ஸ் நி | ப த நி ப ம ப ப ரி
ஸரளமாக வே வா வா க் கு பெ ரு க வும் க ம லே யே (அருள்)

(மற்ற சரணங்களும் அதேபோல்)

துர்க்கை

திருமறைதே டரிய பரம்பொருளெனமா முனிவரனு
    தினம் பூசிக்கும்
கருமுகின்மா லழகராதி மோகினியை மணந்த கதை
    கனிவாய்க் கூறத்
தரும தேவதை யெனவுங் கருதெமது குலதெய்வத்
    தாயுமான
குருநாதர் மருவுமகமாயியங்கா ளேச்வரியைக்
    கூறுவாமே

ஆஞ்சனேயர்

வெண்பா

ஏடவிழ்தார்ப் பைந்துளப மேந்துபுய மாலழகர்
தாடொழுது வஞ்சித் தமிழுரைக்க—நாடியன்பால்
வந்தெனது சிந்தையுளே வர்த்தனே சேர் முற்றறிவைத்
தந்துதவு மாருத மைந்தா.

5. கீர்த்தனம் **இராகம்—மோகனம் ஆதிதாளம்**

பல்லவி

வாதராஜன் குமரனே—தமிழ்வளர்ப்பது நீதானே

அனுபல்லவி

மாதுலாவிய செங்கண் மாலழகர் மீதினில்
ஓது தமிழிலொரு கோது குறைவராமல் (வாத)

சரணங்கள்

1. *கூனமுடவன் கொம்புத் தேனுக்கிச் சித்தாற்* போலே
குறவஞ்சித் தமிழ் சொல்லக் கருதினேனெருக் காலே
ஞானமுள்ள பெரியோர் ஊனம் சொல்லாமல் மேலே
நவரஸமும் பொருளும் சுவைமொழியாயன் பாலே (வாத)

2. தேர்ந்த வியாகரணங்கள் ஆய்ந்தருள் போதனே
திரை கடலைக் கடந்து கரைகண்ட பாதனே
சார்ந்த படைக் கமுதம் ஈந்தவி ஞேதனே
சதுரனயோத்தி ரகு பதிமகிழ் தூதனே (வாத)

3. அஞ்சனு தேவி பெற்ற சஞ்சீவி ராயனே
அரிவை ஜானகிக்கு மோதிரமீந்த தூயனே
செஞ்சொற் கவிகுஞ்சரம் இன்சொற்கு நேயனே
தீர்க்கமாயன்பர்களைக் காக்கும் ச காயனே (வாத)

20

ஆஞ்சனேயர் துதி

இராகம் மோகனம்—தாளம் ஆதி

பல்லவி

; க பா கா ரீ ஸ ா ஸ த ஸ ா ரீ | க ா ; ; ; | க ா ; ப த ஸ் ா ||
வா த ரா ஜன் கு . ம ா ர னே த மி . ழ்

; த ஸ்ா த பா கா•ரீ கா க ப | க ா ரீ ஸ ா ; | ; ; ; ; ||
வ ளர்ப்ப து நீ தா னே

(வாத)

அனுபல்லவி

; கா , க கா பா பா தா தா | ; ப தா ஸ் ஸ்ா | ஸ் த ரி ஸ் த ப தா ||
மா து லா வி ய செங்கண் மா . ல ழ க ர் மீ தி . ணி ல்

; த க்ர் ரி ஸ்ா ஸ் த ரி ஸ் த ப ப க | பா, த ஸ்ா-ஸ் த த ப | ப க த ப க ப க ரி ||
ஓ து த மி . ழி ல் ஒ . . ரு கோ . . து . கு றை வ ரா . ம ல்

ஸ ரி—(வாத)

சரணங்கள்

ஸ ரி க க க க க க | ரி க ப க க ரி ஸ ஸ ||
கூ ன மு டவன் கொம் பு | தேனுக்கிச்சித்தாற்போலே

க ப க ரி ஸ ஸ ஸ த | க க ரி க ப ப ப ப ||
குறவ ஞ் சி தமிழ்சொல் ல | க ரு தினே னுருக்காலே

க ா க க க க ப ப | ப த ஸ் த ஸ் த ப ப ||
ஞானமுள்ள பெரியோர் ஊனம் சொல்லாமல் மேலே

ப த ஸ் ஸ் த ஸ் த ப | க ப த ப க ப க ரி ||
நவரஸமும் பொ ரு ளு ம் | சுவைமொழியாயன்பாலே

ஸ ரி—

. . (வாத)

(மற்ற சரணங்களும் அதேபோல்)

ஆழ்வார்கள்

விருத்தம்

வானையளந்துலவிய தென்சோலைமலை வீற்றிருந்து வரிவண்டெல்லாம்
தேனையருந்துங் கமலவாவிதிகழ் திருப்பதியாஞ் செழுநகர்க்குற்
றானையன்பர்க் கருளழக நாரணனைப் போற்றிவஞ்சி யன்பாய்க்கூறச்
சேனையர்கோ னேடுபதின்மர் சேவடியை யனுதினமுஞ் சிந்தை
செய்வாம். **(10)**

அவையடக்கம்

விருத்தம்

கலைமுழுது முணர்ந்தவர்க்கு வாய்பேசா மூங்கையுரை
கற்பித்தாற்போல்
நிலைகடலை நீந்தினர்க்கு நீந்தறியான் நீந்துநெறி
நிகழ்த்தினற் போல்
அலைகடல் பண்டடைத் திலங்கை யரசைவென்று வீடணனை
யாண்டசோலை
மலையழகர் மீதுவஞ்சித் தமிழைநா வலர்முன்யான்
வழுத்தினேனே **(11)**

நூல்

கட்டியக்காரன் வருகை

விருத்தம்

தொய்யிலேந் தியமுலைமா மடந்தை மோகச்
சுகத்திலே வசித்தின்பஞ் சுகித்து நாகப்
பையிலே துயின்ற திருவழகர் கஞ்சப்
பதத்திலே பதித்தமனப் பத்திக் காரன்
நெய்யிலே துவண்ட கொண்டைக்கட்டுக்காரன்
நெற்றியிலே கஸ்தூரிப் பொட்டுக்காரன்
கையிலே பிடித்ததங்கப் பிரம்புக் காரன்
கனக்காரன் கட்டியக்காரனும் வந்தானே (12)

6. கீர்த்தனம் இராகம்—மத்யமாவதி ஆதி தாளம்

பல்லவி

கட்டியக்காரன் வந்தான்—மலையழகர் கொலுவில்
வாசல் (கட்டி)

அனுபல்லவி

அஷ்டதிசை புகழ வட்டத்திகிரிதனை
விட்டுக்கதிர் மறைத்த கட்டழகர் சபையின் (கட்டி)

சரணங்கள்

புரிந்த முந்நூலுமாட்டிப் பொன்னுபரணம் பூட்டித்
திருந்திய நாமந்தீட்டி செயவிருது பாராட்டி (கட்டி)

சிவகங்கை வளர்ந்தேறத் தேவர்கள் களிப்பூற
அவனியின் கலிமாற அழகர் பவனிகூற (கட்டி)

கட்டியக்காரன் வருகை

ராகம் மத்யமாவதி—தாளம் ஆதி

பல்லவி

; , பா ரிஸ்ாஸ் நி ஸ் நி ப ம ப நி | ஸ்ா ; ; ரி ரி | ரி ரி ரி ம் ரி ஸ் ஸ் நி || ஸ்ா,
கட் டி ய க் கா . . ர ன் வ ந் தான் ம லே ய ழ கர் கொலுவின் வா . சல்

அநுபல்லவி

ரி ரி ரி ம் ரி ஸ் ஸ்ா ரி ஸ் நி ப நி ஸ் | பா ரி ஸ் நி ஸ் நி ப | பா ஸ் நி ப ம ரி ம || பா ,
அஷ்டதி சைபு க ழ வட் ட தி கி ரி த னே விட்டுக்கதிர்மறைத் த கட் ட ழ க ர் ச பை யின்

சரணம்

ரி ரி ரி ரி ரி ம் ரி ஸ் ஸ்ா ரி ஸ் நி ப நி ஸ் |
பு ரிந் த முந் நூ லும் மாட் டி பொன் ஞ ப ர ணம்பூட்டி

ப ப ரி ஸ் நி நி ஸ் நி | ப நி ப ம ரி ம பா || நீ ,
தி ரு ந்திய நா மம் தீட் டி ஜ ய வி ரு து பா ராட் டி

(மற்ற சரணங்களும் அதே போல்)

மாலழகர் சிவகங்கை நகரில் தனக்கு அமைக்கப்பட்ட ஆலயத்தில் கொலுவீற்றிருத்தல்

சந்த விருத்தம்

மதியுலகந்தனை யுலவிவளர்ந்தெழு மாலிருதண் சோலை
மலைமிசைதங்கிய கருமுகிலென்றௌி வளர்வடிவுங்கலைசேர்
பதுமமெனுந்திரு முகமுமணஞ்செறி பாதமுமஞ் சோதிப்
பருதியிளங்கதிர் முடிபுனையுந்துள பமருவு தொங்கல்களும்
மதுரமிகுந்தந வரஸமெனுஞ்சொலுமாத ரளந்தூவும்
வரிவளையுந் திகிரியுமணியுங்கர வனசமு மம்புசமுங்
குதிகொண் மருங்கணியொலியு மிலங்கிய கோலமிகுந்தேறக்
குழைதொடு குண்டல அழகர் வளங்கொடு கொலுவிலிருந்தனரே. **(13)**

7. கீர்த்தனம் **இராகம் - சாரங்க—ஆதி தாளம்**

பல்லவி

கோலமிகுஞ் செங்கண் மாலழகர் திருக்
கொலு விருந்தனரே

அநுபல்லவி

சீலமிகுந்திடும் தென் - சிவகங்கை நகரினில்
செல்வி சௌந்தரவல்லி சமேதராய்க் (கோல)

சரணங்கள்

1. பூசுரர் வேதத்தால் துதிக்கவே — தேவர்
பூமலர் பொழிந்தாடிக் குதிக்கவே — போற்றி
வாசவனயனுள்ளன் புதிக்கவே — வாழ்த்தி
மயிர்புளக முற்றின் பங்கதிக்கவே— பல
காசினியிலுள்ளோர் பவத்தை யொழிக்கவே
கங்கை யெனுஞ் சிலம் பருவி சுழிக்கவே
ராசராசற்குச் செல்வங் கொழிக்கவே
நன்மைப் பயிர் வளர்ந்தேறிச் செழிக்கவே (கோல)

2. சங்கு சக்ரமதை நேர்த்தியே பெறத்
தரித்து மார்பினில் முந்நூல் சாத்தியே எழில்
துங்கப் பீதாம்பரம் போர்த்தியே நிற்குஞ்
சொரூபத்தை கண்டறவோர் வாழ்த்தியே ஏத்தத்
திங்கள் முக மண்டல மிலங்கவே
சிலைநுதல் திலகந் துலங்கவே
பங்கயப் பதச் சதங்கை குலுங்கவே
பரவுமடியவர் கலி விலங்கவே
(கோல)

3. தாமரை மின்களிப் பூறவே பூவில்
தக்கமகங்கள் நிறை வேறவே செழுங்
காமர் சோலையில் செந்தே னூறவே செஞ்சொற்
கவிகுஞ்சரம் பேர்வளர்ந் தேறவே வானில்
சோம சந்தவி மானம் நிறக்கவே
தூயவர்புரி அர்ச் சனை திறக்கவே
மாமங்கையர் சோ பனம் பிறக்கவே
மகதபோவனர் தவஞ் சிறக்கவே
(கோல)

இராகம் சாரங்கா— ஆதிதாளம்

பல்லவி

; ஸ ா ரி ஸ பா ப ா ப ா ம ப த நி | ஸ் ா ; ; ஸ் நி | தபப பமரீ கம*ரீ ||
கோலமிகு ம் செங்கண் மா . ல ழ கர் தி . ரு . . . .

; , க நி த ப ப ம ரீ ரீ க ம ா ரி | ஸ ா ; ; ; ; | ; ; ; ; ||
கொலுவிருந் த . . ன ரே

அனுபல்லவி

; ஸ ா ரி ஸ ஸ் ா ஸ் ா ஸ் ா ஸ் ா ; |
சீ ல மி குந் தி டும் தென்

; , ஸ் ரி ஸ் ஸ்ா | தா தா , ஸ் நி த ப பா , ||
சி வ கங் கை ந க ரி னி ல்

; , ம ப தா நி ஸ் நி தா , நி த பா
செ ல் வி ச வு ந் த . ர

; , ப நி த ா ப ா ப | ப ம ரீ ரீ க ம ா* ரி ||
வ ல் . லி ச | மே . . த ரா ய் (கோல)

சரணம்

; ஸா , ரிஸா பாகம பாபா |; , பநிதபா | பமரீ கம*ரீ ||
பூ சுரர் வே . . தத்தால் | துதிக்கவே தே. . வர் . .

; , நீதபா் மரி கம* ரீஸா | ; , ஸரிஸபா | பாகமபாபா ||
பூமலர் பொ. ழிந் தாடி | குதிக்கவே போ. . ற் றி

அனுபல்லவி போல்

வாசவன் அயன் உள்ளன் புதிக்கவே வாழ்த்தி
மயிர் புளக முற்றின்பம் கதிக்கவே—பல.

மத்திம காலம்

ஸ ா ரிஸபபபா - பதபபகமபப | காமபதாநிஸ் | தததநிதபபம ||
காசினியிலுள்ளோர் பவத்தையொழிக்கவே கங்கையெனும்சிலம் பருவிசுழிக்கவே

கமப தாநிஸ்ா ததி ஸரிஸ் நி தா ப ப ம | த நி ஸ் ஸ் தா ப ம | தாபமரீகமா || ரீ
ராஜராஜர்க்கு செல்வம் கொ ழி க் க வே நன்மைப்பயிர்வளர்ந் தேறிச்செழிக்கவே || (கோ)

(மற்ற சரணங்களும் அதேபோல்)

மேற் கூறிய ஆலயத்தில் நடத்தப்பட்ட வஸந்தோற்சவத்தில் சுந்தர ராஜப் பெருமாள் சுக்லபக்ஷம் சப்தமி முதல் சதுர்த்தசி பர்யந்தம் அஷ்டாவதாரக் காட்சியுடன் பவனி வந்தமைக் கூறல்

8. ஓரடிக்கீர்த்தனம் **இராகம் சௌராஷ்டிரம்—ஆதி தாளம்**

பல்லவி

திருப்பவனி வந்த விசித்ரங்களை யாதி
சேடனுலுஞ் சொல்லக் கூடுமோ அழகர் (திருப்)

அநுபல்லவி

மருப் பொழிற் சிவகங்கை மாநகர் மறுகினில்
மாதவர்களிப் புற வளர்சந்திரிகை யதனில் (திருப்)

சரணங்கள்

கடற்குள் மறையொளித்த சோமகனை செயித்த
கயலவதாரக் காட்சி காட்டியே - வேலை

தடக்க மின்றி மந்தர கிரியைத் தாங்கிய கூர்ம
தரிசனங் கொடுத்தின்ப மூட்டியே - மனத்

திடப் பொற்கணனே வென்றகிலம் படைத்தவராகச்
சேவை தந்தன் பர்பவ மோட்டியே - பரும்
உடற் குடல் பிளந்திரண்யனே வென்ற காட்சியளித்
துலக முற்றுங்கருணை நாட்டியே - உள்

அடக்கமாய் மாவலிமுன் படிமூ வடி யாசித்த
அருங் குறளுரு வொடு மரசர்களைச் செயித்த
அடற் பரசு ராமஸ்வ ரூபங் காட்டி யெதிர்த்த
அரக்கனே வென்ற ஸ்ரீராமாவ தாரமோ டொத்த

அலதர தரிசன மளித்து மேதகு
அவை புகுதலு முளங் களித்தெலோர்களும்
மலர் மழை பொழிந்துப சரிக்க மோனவர்
மறையொடு துதிகளுச் சரிக்கவே எழில் (திருப்

ஸௌராஷ்டிரம்—ஆதி

பல்லவி

; த ரி ஸ் ஸ்ா ஸ் நி தா த த பா | ; ம பா த பா | ம க ரீ ரீ ரி ||
திருப் ப வணி. வந்த விசித் ரங்க ளோ ஆதி

; ஸ ஸ ஸ நி தா தா ; ரி ரீ | ; ப மா க ரீ | ; ; த த பா ||
சேடு . . லும் சொல்லக் கூடு மோ அழகர்

அநுபல்லவி

; த ப ம த தா- ரி ரீ ரீ ரீ | ; ஸ்ா, ஸ் ஸ்ா | ஸ் நி தா த நி* த ப ||
மருப் பொழில் சிவ கங்கை மா நகர் ம று கி னில்

; ஸ்ா, ஸ் ஸ்ா நி தா த நீ* த | பா- ம பா த பா | ம க ரீ க ம பா ||
மா தவர் களி ப்புற வ ளர் ச ந் திரிகை ய தனில்

சரணம்

; த த த ப- பா மா ம க ரீ ரீ | ; ரி கா ரி ஸா | தா, த ரி ஸ, ரீ ||
கடற்குள்- ம றை யொ. ளித்த ஸோமக னை செயித் த

; ஸ ரி கா மா ப்பா பா மா மா | ப்பா ப் ம ப் ஸ் நி த | ப் ம க ரிரீ ரீ ||
க ய ல வ தா ரக் காட்சி கா . . . . ட்டி யே வேலே

; த த த ப ப்பா மா ம க ரீ ரீ | ; ரி கா ரி ஸா | தூா தூா ரி ஸ ரீ ||
த ட க் க மின் றி ம . ந்தர கி ரி யைத்தா ங் கிய கூர் ம

; ஸ ரீ ம க ரி பா பா பா ப ம | த நி ஸ் ரி ஸ் நி தா | த நீ*த ப்பா ப ம ||
த ரி ச ன ம் கொடுத்தின் ப மூ . , . . ட்டி யே ம ன

; த த பா பா மா ம க ரீ ; | ; ரி க ா ரி ஸ | தூா தூா ரி ஸ ரீ ||
திடப்பொற் கணை . வெ ன் ற கி ல ம் ப டைத் த வ ரா க

; ஸ ரீ ம க ரி மா மா மா மா | மா ம க ரீ கா | மா ; ரீ ரீ ||
சே . வை. தந் தன் பர் ப வ மோ . . ட்டி யே பரும்

; ஸ் ரீ க் ரீ க் ம் க் ம்ா க் ரீ | ஸ்ா ஸ்ா ; த நி |, ஸ் ஸ்ா தா ; ||
உ டற் கு டல்பி ளந் தி ர ண் ய னை வென்ற காட் சி ய ளித்

தா தா பா பா ப ம - பா பா பா | பா மா ப் ஸ் நி த | ப ம க ரி ரீ ; ||
து ல க முற் றும் க ரு ணை நா . . . ட்டி யே . . . உள்

த தா ப் மா தா ப் ம க ம க ரி கா | ரி ஸ தூ ா ; ரீ | ரீ ; ; ; ||
அ டக்கமாய் மா வ லி முன் ப டி மூ வ டி யா சித் த

ஸ ரி க ரி ப ம ப ம ப ம ப ப ப ம ப் த | த நீ* த ப ா ; | த நி ஸ் நி த த ப் ம ||
அருங்குறளுருவொடு ம ர ச ர் க ளை செ யி . . த்த . . . .

த த ா ஸ் ஸ் ஸ் ஸ் ா ஸ் ா, ஸ் ஸ் ா ஸ் ா | த நி ஸ் ரி ஸ் நி த த | த நீ* த ப் ா ; ||
அட ற் ப ர சு ரா ம ஸ் வ ரு ப ம் காட் . டி எ தி ர் த் த

த் ரி ஸ் ஸ் ஸ் நி த ா த த ப ப ா ப ா ம | க ம ப த நி* த ப ம | ம க ரீ ரீ ; ||
அரக்க னை வென் ற ஸ்ரீ . . ர ா ம ா வ தா . ர மொ . டொ த் த .

த த ப ம க ரி ஸ ரி க ம ா ம ரீ ஸ ரி | ஸ ரி க ம ப ப ப ம | ப த ா நி ஸ் ா ஸ் ஸ் ||
அ ல த ர த ரி சனம் அளி த் து மேதகு அவைபுகுதலும் உளம் களித்தெலோர்க ளு ம்

த நி ஸ் ரி ஸ் ரி ஸ் ரி - ஸ் ரி க் ம் க் ரி ஸ் த | ரி ஸ் நி த த த த ா | ப ா ம ப ா த ம் ா ||
மலர் மழைபொழிந்து பசரிக்கமோ.னவர் மறையொடுதுதிகள் உச் ச ரி க் கவே

ப ம -
எழில் (திரு)

மாலழகர் ஒன்பாதாம் நாள் உற்சவத்தில் ஜெகன் மோஹன கிருஷ்ண வடிவத்துடன் பவனி வருதல்

9. கீர்த்தனம் **இராகம்—தோடி** **ஆதி தாளம்**

பல்லவி

மந்தரதரமாதவ சுந்தரராஜர் பவனி
வந்த விந்தை யென்ன சொல்லுவேன் (மந்த)

அனுபல்லவி

வந்தனமோடனுதினம் சிந்தனைசெய் தந்தணர்சி -
ரத்தனில் கரங்குவித்து வந்து போற்றியே
கந்தமலர் தூவநிறை சந்திரிகை யுலாவுமந்திக்
காலைசிவ கங்கைநகர் கோலமிகு வீதிதனில் (மந்த)

சரணங்கள்

1. *துங்கமிகு தவளப்ப ளிங்கிளுற் பலகைசட்டந்*
தொடுத்துப் பவளக்குத்துக் கால்திருத்திச்
சிங்கமத கரிபரி பொங்குதிக்குப் பாலர் முதற்
சித்திரப் பதுமைகளும் சுற்றிலிருத்தி

எங்கினுந்தகத கென்னவே—பூர்ண கும்பங்கள்
இந்திரலோ கம்முதற் சிறந்து மின்னவே
தங்கச்சரி கைத்துகில் இலங்குஞ்சுழி கையிலசைந்
தாடுமாலை கட்டிவெகு ஜோடினையான ரதத்தில் (மந்த)

2. முத்து நவரத்னமோட மைத்தமுக வட்டணிந்த
சுத்தநட னப்பரிகள் கட்டிவரவே
மத்தகஜ பேரியொட்ட கத்துடமா ரங்கள்முர
சத்தொனி சத்தமேகம்போ லோசைதரவே
த்த்தையர் நடம் நடிக்கவே ஐயவிருது
சத்ர சாமரைகள் பலர் முன்பிடிக்கவே
வெற்றிசேர னுமக்கரு டக்கொடிவிண்ணி லுலவ
வெள்ளிதங்க தீபட்டிகள் தெள்ளியப்ர பைஜொலிக்க (மந்த)

3. மாமறையொலியும் வயிணவர்கள் பதின்மர் திரு
வாய்மொழி ப்ரபந்தங்களும் கோஷிக்கவே
நாமகீர்த்தனங்கள் சொல்லிப் பாகவதர்களுஞ் சூழ்ந்து
நண்புடன் தம்புருவீணை வாசிக்கவே
நேமி பாஞ்ச சன்யந் துலங்க—ரத்னப் பதக்கம்
நித்திலப்பைந் துளபங்க வுத்வமிலங்கக்
காமனுங் கமலமலர்ப் பூமனுமடிபரவக்
கவிகுஞ்சரம் புகழப் புவியெங் கினுத்திகழ (மந்த)

ராகம் தோடி—தாளம் ஆதி

பல்லவி

ப த நி த ப ப ம கா க | மா , நி த ம | கா ப ம க ரி ஸா ||
மந் த ர த ர மா . த வ சுந் த ர ரா ஜ ர் ப . வ னி

ஸ கா ரி ஸா ஸ ஸ த நி | ஸா ; | ; ; ||
வந் த வி ந் தை என்னசொல்லு வேன்

அனுபல்லவி

பா , த நி த ப ப க ம | ப த நித | ப ப க ம || பா , த நி த ப ப க ம | ப த நிஸ் | தா ; ||
வந்தனமோடனுதினம் சிந்தனை செய்தந்தணர் சிரந்தனில் கரங்குவித்து வந்து போற்றி யே

, ததாபதா தக்ரிஸ் | நிக்ரிஸ் | நிதபாதநிஸா || ,நிஸாரிஸாநிதபாதநிஸா| ,நிநீதபா | மாபாமகமா ||
கந்தமலர்துவநிறை சந்திரிகையுலாவு மந்தி காலைசிவ கங்கைநகர் கோலமிகு வீதிதனில்

சரணம்

, த தா த தா த த த த | ப ப ப த | ப் ப ப த ப || , ம பா த பா ம க ரி ஸ | ,ஸா ரி ம | கா ; ||
துங்க மி கு தவளப்ப ளிங்கினுர் பலகைச்சட்டஞ் தொடுத்துப் பவளக்குத்துக்கால்திருத்தி

, ஸ ரீ க மா பா த ப ம கா | , ம நீ த மா | க ரி ஸ ஸ || , ஸ ரீ க ரீ ஸ ஸ ரி ஸ | ஸ ஸ த நி | ஸா; ||
சி ங் க ம த க ரி ப ரி பொங்குதிக்குப்பாலர்முதற் சித்திரபதுமைகளும் சுற்றிலிருத் தி

பதாநிதா ப் ப க ம | தா , த | ரிஸ்நித தா || த நி ஸ் ஸ் ஸ்நிதாபாதம | ப த நி ஸ் | தா ; ||
எங்கினும் தகதகென்னவே பூர் ணகும்பங்கள் இந்திரலோ கம் மு த ற் சி றந் துமின்னவே

அனுபல்லவிபோல்

தங்கச் சரிகைத்துகில் இலங்குஞ்சுழி கையிலசைந்
தாடு மாலை கட்டிவெகு ஜோடனையானரதத்தில் (மந்)

(மற்ற சரணங்களும் அதேபோல்)

(சுந்தரராஜ பெருமாள் பவனிவரும் கோலத்தைக் கண்டு
நகரிலுள்ள் மாதர்கள் விரகமுறல்)

விருத்தம்

பதம்பவன சுதன்பரவும் மாலழகவெனத் துதிக்கும்
பாவலோர்க்குச்
சதம்பவனம் பூஸ்திதிதந் தருள்வழுதி நிலந்தழைக்கத்
தகை மலர்ப்பூங்
கதம்பவனந் திகழ்பொழின்மா மலைமிசைவந் துதித்த திருக்
கருணை மாலச்
சுதன்பவனி கண்ட பெண்கள் பரவசமுற்றுள முருகித்
தொடர்கின்றாரே. (14)

10\. திபதை இராகம் - யதுகுலகாம்போதி - ஆதிதாளம்

1\. செங்கண் மாலழகர் வரும் துங்கமாம் பவனிகண்டு
தெரிசித்தார் - மலர் - வருஷித்தார் - உயர்
பிங்கள நிறமாகிய மங்கையர் நிரை நிரையாய்ப்
பின்சென்றார் - சிலர் - முன் சென்றார்.

2. பங்கய முகத்திலிரு கண்களால் நோக்கியே நீலம்
பரத்தினர் - கண்ணன் மேல் - நிரத்தினர் - சிலர்
அங்கை விரலாழியுடன் செங்கைவளையுஞ் சரிந்த
தறிகிலார் - மயல் - பிரிகிலார்.

3. வலக்கரத்தில் தொடியிட்டோர் இடக்கரத்திற் கணிய மெய்
மறந்தனர் - சிந்தை - துறந்தனர் - சிலர்
கலைப் பொன்னிடை தனைவிட்டு நிலத்திடை நெகிழ்ந்து விழக்
கண்டனர் - வெட்கம் - கொண்டனர்.

4. உருகுபெருங் கோடையில் நீர் பெருகிடங் கண்டமான்கள்போல்
ஓடினர் - மயங்கி - வாடினர் - சில
அரிவையர் மனங்களையன் திருமுன் செல்லவுயிர் சித்ரம்
ஆயினர் - பவள - வாயினர்.

5. வில்லியையங்கணை உடலிற் சல்லடைக்கண் போல் துளைக்க
வெம்பினர் - விழி - அம்பினர் - சிலர்
வல்லி நுண்ணிடை தள்ளாட அல்லிமலர்க் கொடிபோல
வணங்கினர் - முலைச் - சுணங்கினர்.

6. ஏந்துமால்பு யாசலஞ்செங் காந்தமெனப் பெண்கள் மனம்
இரும்பினுர் - நகை - அரும்பினுர் - கமழ்
சாந்தணி கும்பத்தனத்தில் தோய்ந்த கஞ்சுகங்களெல்லாம்
தறித்ததே - நில - வெறித்ததே.

7. கழைமதன் விடுத்தகணைத் தொளைவழியே தென்றல் புகக்
காய்ந்தனர் - சங்கையுற் - ருய்ந்தனர் - இவன்
தழைவுறு மிந்திரனென்ருல் விழியவற் காயிரமுண்டே
தையலே - இதென்ன - மையலே.

8. அயனுக்கு நான் முகங்களுண் டிவனுக்கோர் வதனந் தோனு
தாரடி - தேர்ந்து - பாரடி - நல்ல
பயனுற்ற சந்திரனென்ருல் நியமித்த நாள்தோறுங் கலை
பருக்குமே - சிலநாள் - சுருக்குமே.

9. ஐம்முகப்பகவ னென்ருல் கையினிற் கபாலமும் பாம்
பணியுண்டே - அக்க - மணியுண்டே - போரில்
எய்யும் வேற்குமர னென்ருல் மைம்மயிலன்றிக் கருடன்
ஏதடி - வகை - ஓதடி.

10. மங்கையர் கவுத்துவங் கொள்ள மார்பினிற் கவுத்துவங் கொண்ட
மாயனும் - கனி - வாயனும் - எழில்
சங்கு சக்ரம் கையிற்கொண்ட செங்கண் மாலழகனிவன்
தானடி - ஐயம் - ஏனடி.

அழகர் பவனி வருகையில் தரிசிக்கவந்த அதிமோகன வல்லியின் வடிவம் கூறல்.

11. திபதை - இராகம் - காம்போதி - சாப்பு தாளம்

1. மருத்தொடையுமிளைஞர் கருத்துமிறுக்குங் கொண்டைச்
சொருக்கினுள் - செம்ப
வனத்தைத்துப் பெனச் சொல்லிக் கழித்துப் பழிக்குமிதழ முருக்கினுள்
திருத்துமிந்து முறிபோல் இருக்குஞ் சிலை நுதலின்
உருவத்தாள் - மதன்
செங்கைவில்லைப் பறித் திணங்கத்தரித்துக்கொண்ட புருவத்தாள்,

2. தவத்திற் சிறந்தோர் சிலை மனத்தைக் கவரும் பாச
விழியினுள் - பால்
சர்க்கரைதேன் சீனி கற்கண்டமுதமெனு மொழி யினுள்

உவர்க்கடலுதித்த தரளத்தைப் பழித்த தந்த
வரிசையாள் - மதன்
உற்பன கலைக்கொரு விற்பன மெனத்தகும் உரிசையாள்

3. முருந்துறழ் நகைதனைப் பரிந்து தழுவியசிந்
தாக்கினுள் அழகர்
பொருந்து மதனனம்பு திருந்துஞ்சாணை நிகர்க
போலத்தாள் - செழும்
பூகம் சங்கினை நிகராகுங் சுந்தரமுள்ள கோலத்தாள்.

4. சுணங்குபடர்ந்தெழுந்து கனங்கொண்ட தனக்கும் பக்
குடத்தினுள் - உந்திச்
மணங்கொள் மலரைச் சுமந்திணங்கி வளைந்தகொடி
இடையினுள் - கணை
மாரனரண்மனைக்கு நேர்பொருந்திய கம்பத் தொடையினுள்

5. வழுத்து முடையின் விலையிழைக் கோராயிரங் கோடி
சொர்ணமே - இந்த
வஞ்சி நடையைக் கண்டுள் அஞ்சி நடக்குமட அன்னமே
தழைத்த அழகரன் புற்றிருக்கும் மோகனவல்லி
யோகமே - உற்ற
தையலுடனேகூடி எய்திடுவாரிந்த்ர போகமே,

மோகன வல்லி வருகை

12. கீர்த்தனம் **இராகம் அமீர்கல்யாணி—ஆதி தாளம்**

பல்லவி

மோகன மாமயில் மாது வந்தாள்—அதி
மோகன

அனுபல்லவி

நாக சயனன்றனைத் தாகமுடன் சேவிக்க (மோகன

சரணங்கள்

1. கொண்டைச் சொருக்கில்மலர் வண்டசைந்தாடக்
குவளை விழிகள் மதன் கணைகளைச் சாடச்
செண்டனையதனம் இரண்டும் பந்தாடச்
செகமயங்க நடந்து சகியுடன் கூட (மோகன)

2. இந்து நிகர் நுதலில் சிந்தூரந்தீட்டி
இன்னிசை வீணைமீட்டி புன்னகை காட்டிச்
செந்திருவை நிகரவந்த சீமாட்டி
தேசம் புகழுங் கண்ணன் ஆசைக் கண்ணூட்டி (மோகன

3. மின்னிடை யுடையினில் மேகலை சொலித்திட
விளங்கு மார்பினில் மணிக் கலன்கள் ப்ரபலித்திட
வர்ணக் கங்கணத்தோடு மலர்சிலம் பொலித்திட
மாலழகர் தம்மண மாலை பலித்திட (மோகன

மோகனவல்லி பந்தடித்தல்

விருத்தம்

வந்தடித்தேற் பவர்க்குமழைக் கனைய கொடையளிக்கும் நந்தன்
மகவாய்த் தோன்றித்
தந்தெடுத்திந் திரன்விடுத்த மழைதடுத்துக் கோவியர்க்காய்
தடமார் வெற்பை
முந்தெடுத்துக் குடைபிடித்த திருவழகர் ப்வனிகண்டு
மோகமின்னாள்
பந்தெடுத்துச் சகியருட னடிக்கின்றாள் சிந்துகவி
படிக்கின்றாளே (15)

13. கீர்த்தனம் இராகம்—கமாசு—ரூபக தாளம்

பல்லவி

மோகனவல்லி பந்தடித்தனள்
முத்துப் பந்தலிலே—அதி (மோகன)

அனுபல்லவி

மேகவர்ணன்றன்னை யுன்னியே—நறும்
பாகனையமொழி பன்னியே
மிஞ்சி மிஞ்சிக்கொண்டு கொஞ்சி கொஞ்சி நின்று
ஐஞ்சஜலஞ்ஜல மென்றெழில் பந்தடியிட்ட திரஞ்சித (மோக)

சரணங்கள்

1. கொண்டல் நிகர்குழல் வண்டு மகரந்தம்
உண்டின்னிசை பாட- மலர்
மண்டியபின்னர் சடையதவிழ்ந்து
மதுவும் வழிந் தோட - கருங்
கெண்டை விழிகளிரண்டு மனங்கன்
கணையையிகழ்ந் தாட நல்ல
தண்டமிழ்பாடிக் கொண்டாடிக் கொண்டாடியே
தந்த தகுந்தகு ஜந்தரிகிடுத்தாங் கிடுத்தோமென்றதி (மோ)

2\. செந்திரு மங்கை நுதலிற் கிந்தூரத்
திலதந்தளத — ளென்ன - காதில்
கொந்தளவேலை ஜிமிக்கி பொற்பாவிலி
கோஸஞெபளப — ளென்ன - வளைக்
கந்தரந்தன்னிலணிந்த நவரத்னக்
காரை நிகநி — கென்ன - பூர்ண
சந்த்ரனெனும் வதனத்திலொளி மின்னத்
தக்கதகஜ்ஜணு தகதரி க்டுதஜணுதகதோ மென்றதி (மோ)

3\. குங்குமகந்த மணிந்த ஸ்தனங்கள்
குலுங்கியிலங் — கிடவே - திவ்ய
மங்களஞ்சேர் முத்துமாலையொடு ரத்ன
மாலையசைந் — திடவே . வர்ணச்
செங்கைக் கடையங்கள் கங்கணவோசை
ஜயம் ஜெயமென் — றிடவே - உயிர்
தங்கக் கொடியிடை யங்கைக் கடங்கிடத்
தங்கததிங்கிண தீங்கிணதகததிங்கிண்தோ மென்றதி
(மோ)

4. அன்னத்தை சூழ்ந்த மயிர்குலம் போற்சுி
மாார்களரு இருந்து - பாட
மின்னெத்த மேகலை துன்னிடமிக்க
வியந்து நடம் பரிந்து - தாளில்
துன்னிய தண்டைச் சதங்கை கலின் கலீ
ரென்ன மனம் புரிந்து - தேவ
கின்னரரம்பையர் கிம்புருடாதியர்
கந்தருவாதியர்கான மிசைந்து புரிந்திடவேயதி (மோ)

5. மத்தள தாளங்கள் துத்தியொடும் நய
மானச்ருதிகூடி - திவ்ய
ஸத்வகுணஹரி பக்த ஜனதியர்
தும்மைப் - புகழ்ந்தாடி - அதி
பக்தியுடன் கவிகுஞ்சரஞ்சொல்கீர்த்த
னத்தை மிகப்பாடி - ஜக
கர்த்தனெனும் சோலை மாமலைமேவிய
கண்ணனெனுங் கடல்மாமணி வண்ணன்றனையெண்ணி
நாடி (மோ)

மேளம் 28 ராகம் கமாஸ் — தாளம் ரூபகம்

பல்லவி

ஸ்ா | ஸ்ஸ்நிதபப || பா | த பமமாக || மா; | மநி | தஸ்நித | நிப-த தநி ||
மோ க . .னவல் லி பந்ததடித்த னள் முத்துப் ப ந்த லிலே அதி

அனுபல்லவி

ம நி | த த நி ப || த நி | ஸ்ாஸ் ஸ் || நி ரி | ரி ரி ரி ஸ் || நி நி | ஸ்ா ; ||
மேக வர்ணன்தனே யுன்னி யேநறும் பாக னேயமொழி பன்னி யே

நிநீரி | ,ரி நிஸ்ா || தாநிரிஸ்நிதப தா || மாமக | பாபம பாதப || தாநித | நீஸ்நிரிஸநித ||
மிஞ்சிமிஞ்சி கொண்டுகொஞ்சிகொஞ்சிநின்றுஜஞ்சஜ லஞ்ஜல மென்றெழில் பஞ்சடி யிட்டதிரஞ்சித

சரணம்

ப க | ம ப் ப் ம || ம த | த த நி த || நி நி | நி நி ரி ஸ் || நீ ;க ஸ ||
கொண்டல் நி க ர் கு ழ ல் வ ண் டு ம க ர ந் த ம் உண் டி ன் னி சை ச பா ட ,மலர்

ம நி | த நி ஸ் நி ‖ ரி ரி | நி ஸ் ா ஸ ‖ நி த | நி ஸ் ஞ் ா ‖ த நி | ஸ் ா | ப ம ‖
மண்டிய பின்னற்ச ‖ டைய தவிழ்ந் து மது வும்வழிந் தோ. டக் கரும்

ப க | ம ப ப ம ‖ ம த | த த நி த ‖ நி நி | நி நீ , ரீ ஸ் ‖ நீ ‖ ; ஸ் ஸ் ‖
கெண்டைவிழிகள்இ ரண்டும் மனங்கண் கணை யை இகழ்ந்தா ட நல் ல

க்க் | ரிமா, க்ஸ் ‖ ஸ்ஸ் | நிரிஸ்ாநிதா ‖ தாதநி | ரீ-ஸ்நிரிஸ்நித ‖ பத நிஸ | நித ரிஸ்நிதபத ‖
தண்டமிழ்ப்பாடிக்கொண்டாடிக் கொண்டாடியேதந்தத கும்தகும்ஜந்தரி கிடுதாங் கிடுத்தோமென்றதி
‖ மோ ‖

மற்ற சரணங்களும் அதேபோல

மோகனவல்லி கும்மி யடித்தல்

விருத்தம்

மாகனகந் தூசு நித மறையோர்க் கீயும்
மதனஜக மோகவல்லி வைணதேய
வாகனக மீனய புய ஞயிரம் பொன்
மணிமுடியார் பணிசயனன் மலர்மா மங்கை
பாகனக முறுகனக னுடல்கீளந்து
பண்ணவரைக் காத்த கண்ணன் பாதம் போற்றிக்
கோகனக வதன சகிமார்களோடுங்
கூடினுள் கும்மியடித்துப் பாடினுளே. (16)

14. கும்மிக் கண்ணிகள் - இராகம் - மாஞ்சி - ரூபக தாளம்

1. மங்களஞ் சேர் சோலை மாமலைமேவிய
மாலழகர் கும்மிப் பாட்டுரைக்க
அங்கஜமாமுக வைங்கரனுமயி
லாறு முகத்தனுக் காப்பாமே.

2. துங்கவழகர் பதம் போற்றிஞானத்
துய்யகும்மித் தமிழ்ப் பாட்டுரைக்கச்
சங்கமும் சக்ரமும் சேடன் மாருதியுந்
தாவுங் கருடனுங் காப்பாமே.

3. மோகன வல்லி யமுத வல்லியடி
முத்து வல்லி யதிசித்ர வல்லி
நாகவல்லி பசுந்தோகை வல்லி நவ
ரத்நவல்லி யானந்த வல்லி.

4, செண்பகவல்லி சினேகவல்லி குண
சீலவல்லி துணை மாலைவல்லி
அம்புஜவல்லி ஸரஸ வல்லி நீங்கள்
அஞ்சாறு பெண்களும் வாருங்கடி.

5. முத்து ரத்னமதி சித்ரரத்னம் அதி
மோகரத்நஞ்சடை நாகரத்னம்
புத்திரரத்நத்தை பெற்று மகிழ்ந்திடும்
பூவைய ரெல்லோரும் வாருங்கடி.

6. மாணிக்கமாலை துணைமாலை திரு
மாலை வணங்கும் குணமாலை

11. கோலமிகுந்த மணிரதத்திற் சத
கோடி யமரர்கள் நாடிவர
பாலகோபால சவுந்தரராஜர்
பவனிவாரார் பாருங்கடி'

12. மருவுங்கருட வாகன மோடணி
மணிரதத்தில் ஆரோகணித்துத்
திருமங்கையுடன் வரும் கோபாலர்
சேவடியைமுடி சூடுங்கடி.

13. மெய்யனைக் கண்டதே காக்ஷியடியினி
மேலும் நமக்கென்ன தாக்ஷியடி
அய்யனை மாமலர் தூவிப்பரவிப்பல்
லாண்டுகள் சொல்லிப் புகழ்ந்திடுவோம்.

14. பஞ்சவர்க்குத் தூது சென்றவராம் த்ரௌ
பதிகவலையை வென்றவராம்
கஞ்சனைப் போர்செய்து கொன்றவராம்—உலூ
கத்தினிற் கட்டுண்டு நின்றவராம்.

15. பேயின் முலைப்பால் குடித்தவராம் இரு
பெருமருதை யொடித்தவராம்

11. கோலமிகுந்த மணிரதத்திற் சத
கோடி யமரர்கள் நாடிவர
பாலகோபால சவுந்தரராஜர்
பவனிவாரார் பாருங்கடி'

12. மருவுங்கருட வாகன மோடணி
மணிரதத்தில் ஆரோகணித்துத்
திருமங்கையுடன் வரும் கோபாலர்
சேவடியைமுடி சூடுங்கடி.

13. மெய்யனைக் கண்டதே காக்ஷியடியினி
மேலும் நம்க்கென்ன தாக்ஷியடி
அய்யனை மாமலர் தூவிப்பரவிப்பல்
லாண்டுகள் சொல்லிப் புகழ்ந்திடுவோம்.

14. பஞ்சவர்க்குத் தூது சென்றவராம் த்ரைள
பதிகவலையை வென்றவராம்
கஞ்சனைப் போர்செய்து கொன்றவராம்—உலூ
கத்தினிற் கட்டுண்டு நின்றவராம்.

15. பேயின் முலைப்பால் குடித்தவராம் இரு
பெருமருதை யொடித்தவராம்

வேயிசை கானம் படித்தவராம் அர
வின்முடி நின்று நடித்தவராம்.

15. ஆயர்மின்ஞர்களைக் காத்தவராம் வேண்ட
ஆனைமுன் வந்தின்னல் தீர்த்தவராம்
தூயரைக் கைவசந் சேர்த்தவராம் அவர்
துன்பப் பவக்கடல் தூர்த்தவராம்.

17. கஞ்சமலர்த்திரு மால் வாழிவள்ளி
குஞ்சரிநாதன் கைவேல் வாழி
அஞ்சொன்மறையோ ரிறையோற் முதற்குண
ரஞ்சித ப்பாவலரும் வாழி.

மேளம் 20 கும்மி—திச்ரலகு

ப ப ப ப் த ப் | மமக* ம க ரி | ரி ம க* ம க ரி | ஸ ரி க ரீ, ||
மங்களம் சேர்சோலை மாமலை மேவிய மா ல ழ க ர் கு ம் மி பாட் டு ரைக்க

ரி க ம ப த ப் | ம ப ம க ரி ஸ் | ஸ ம க ம க ரி | ஸ ஸா ஸா ||
அ ங் க ஜ மா மு க வைங்கரனுமயில் ஆ று மு க த் தனுக் கா ப் பா மே

கும்மிப்பாடல் இதுவுமது

மேளம் 20 உசேனி—திஸ்ரலகு

ஸ ஸ ஸ ப் ப் ப | ப ப ப நி த*ம || த*நி த* நி ஸ் ரி ஸ் நி த் பா, ||
அ ன் ன த்தை வென்றந டை ய ழ கி மெ து வா ன க த லி த் தொ டை ய ழ கி

ப் ஸ் ப பி த ப | ம ப ம க ரி ஸ் || ஸ ரி க ம க ரி | ஸ ஸ ஸ ஸா, ||
மின்னெத் தில கு மி டை ய ழ கி ம ணி மேகலை யு ற் ற² உடைய ழ கி

(மற்றவையும் அதேபோல்)

மோகனவல்லி அழகரைக் கண்ணுற்றுப் பாங்கியை வினவல்

13. கீர்த்தனம் இராகம்—காம்போதி ஆதி தாளம்

பல்லவி

இவனுரோ அறியேனே—சகியே
யாதொன்றும் தெரியேனே (இவ)

அனுபல்லவி

திவிலொளி மணிக்கவுத் துவமுமணிந்துகொண்டு
தேரிலேறியே சிங்காரப்பவனி வரான் (இவ)

சரணங்கள்

1. பாதத்திலொரு மங்கை—பக்கத்திலொரு மங்கை
சீதத்துளவம் பூண்ட—திருமார்பிலொரு மங்கை
ஏதுக்காயணிந்தானோ இவன்தானென் பெருமானோ
சாதித்து நான் செய்த தவப்பயனுய் வந்தானோ (இவ)

2. விரிந்த கமலங்காட்டி விழிச் செங்கமலங்காட்டிப்
பொருந்துபுவன மூன்றும் பூத்தகமலங்காட்டிக்
கரந்திங்குவருகுறான் கருணை தந்தருள்கிறான்
திருந்தவென் னெதிராக திருச்சேவை தருகிறான் (இவ)

3. சோதிமுடியிலங்கச் சொர்ணக்குழை துலங்க
தேகு கிண்கிணிமே கலையிடையிற் குலுங்கப்
பீதாம்பரத்தைப் போர்த்திப்பேர் திருநாமஞ்சாத்திக்
காதலழகர்போலே காக்ஷி தந்தருள் மூர்த்தி (இவ)

காம்போதி—ஆதி 2 களை

பல்லவி

; ப் த ஸ்ா ; ஸ்ா ஸ் ஸ் - ப தா | ஸ்ா ; ; ம ம | ப த ஸ் த த ப த ப ம க ||
இ வ ஞ ரோ . . . அ றி யேன் எ ன் ச . . . கி . யே . . .

ரீ , ரி த பா ப ம கா ரீ ரீ ரீ-ரிபக ம ரி க | ஸா ; ; ம க | ப த ஸ் நி நி த த ப || ம ா -
. யா . தொன் று ம் தெரி யே. . . . . . னே . . . .

அநுபல்லவி

; , ம க ப தா ஸ்ா ஸ்ா ஸ் ரி க்ா ம க் க் ரி | ரீ, ரீ க் ஸ்ா ஸ் | ஸ் த ரி ஸ் நி த த ப மா ||
தி வி லெ ா ளி ம ணி க் . . . க . . . வு த் துவ மு . . . . ம ணி ந் து கொ ண் டு

; , ப த ரி ஸ்ா ஸ் ரி நி தா ம ம ப த | ஸ்ா - ஸ்ா , ரி நி த பா | பா த ம மக கா ப தஸ்ா ||
தே. ரி ல்ஏ றி . . யே ய சி ங் . . . கா : . ர ப வ . . . ணி . வரான்

சரணம்

; , த ஸ் நீ தா தா நி த பா, த ப த நி த | நீ,ப த ப த ஸ் | ஸ் த ரி ஸ் நி த பா ப நி த ப் ||
ப ா தத் தில் ஒ ரு . . . ம ங் . கை . ப க் க த் தில் ஒ . ரு . . . . . ம ங் கை

மா, ப ப ா பா ப ம த ப ம க மா | ; , ப த ஸ் ப த | ஸ்ா ஸ்ா , ஸ்ஸ்ா ||
. சீ த த் து ள . வ ம் பூ . ண்ட திருமார்பில் ஒ ரு மங்கை

(மற்ற சரணங்களும் அதேபோல்)

சகி அழகரை இன்னாரென்று கூற மோகனவல்லி விரகமுற்றியம்பல்

விருத்தம்

நேமிசங் கணிந்தோன் கண்டாய் நிகரிலாக் கடவுள் கண்டாய்
பூமகள்கொழுநன் கண்டாய் பூவுலகளந்தோன் கண்டாய்
நாமமாலழகர் கண்டா யெனச்சகி நவின்ற போதே
காமன்வெம் பகழிபாயக் கலங்கி நின்றிது சொல்வாளே (27)

---

16. கீர்த்தனம் **இராகம் ஸ்ரீ—திரிபுடை தாளம்**

பல்லவி

மதியைமயக்கு தினியென்ன செய்வேன்
வஞ்சியே நானிங் கெப்படி உய்வேன்—என் (மதி)

அனுபல்லவி

ததிநவநீத சோரமாலழகன்
தந்தமோகமென் அந்தரங்கமதாயென் (மதி)

சரணங்கள்

1. வெயில்கண்ட நவநீதம் போலவே
வெதும்பியென் மனம் உருகுதே
புயல்கண்ட மயில்போ லுடலமிகப்
புளகமானது தருகுதே—என
தயில்கொண்ட இணைவிழியழகன்புய
அழகிலமிழ்ந்துளம் இளகி விரகமிகுந்தென் (மதி)

1. தாமரையினிலை போல மேனியும்
தண்ணகை தரும்சிங் காரமும்
ஸோம சதிர்சவதனமும் மார்பினில்
துலங்குமணித்துள வாரமும்—நறும்
தேமலர் மணிக் கோவையும்—பத
சேவையும்கண்டு மாமயல்குதி கொண்டென் (மதி)

3. ஆசையிப்படிச் செய்யு மென்றணு
வாகிலுங் குறியேனடி
நேசருக்கருள் மாதவன் சிலை
நெஞ்சனென் றறியேனடி உயர்
வாஸமாமணித் தேரினிற் பவனி
வரும் ஐயனுடைய திருமருவுதிருவுரு—என் (மதி)

மேளம் 22 2 களை

பல்லவி

; ப ரி ஸ்ா ஸ்ா நீ ரி ஸ்நி நி ப , ப மா - | ; , பா ஸ் நீ | ஸ்ா ; ; ||
ம தி யை ம ய க் கு . . தி னி என்னசெய் வேன்

; ப ா ரி ஸ்ா நீ பா நீ ஸ்ா | ; , பா ஸ் நி ப ம ரீ | ரி க ரீ ஸா ரி ம பா ||
வ ஞ் சி யே நா ணி ங் கு எ ப் ப டி . . உ ய் வேன் எ . ன்

அனுபல்லவி

; , ப நி ஸ் ரீ ரீ ; ரி க் ரீ | ; , ஸ்ா ரி ஸ்ா | நி ப நீ ஸ்ா ; ||
த தி ந வ நீ . . த சோ ர மா ல் . ழ கன்

; , ப ரி ஸ் ஸ் நி நி ப நீ ஸ்ா ; | ; , ப ஸ் ஸ் ஸ் நி | நி ப ப ம ம ரி - ரி ம || பா
த ந் த மோ. க மென் . அ ந் த ர ங் க . ம . தாய் எ ன் .

சரணம்

; ரி ரி ரி ரி ரி ம - பா ப ப நி ம பா | ரி பா ம ரீ க ரி | ; , ரி க ரி ஸா ||
வெயில்கண்ட நவநீதம் போலவே வெதும்பி என்மனம் உ ரு கு தே

; ம ரி ப ம ப ம ப ா ப ப ஸ் ஸ் நீ | ப ப ஸ் நீ நி ப ா | ; , ப ஸ் (என)
புயல் கண்ட மயில்போல் உடல்மிக புளகமானது தருகுதே

ரி ரி ரி ரி ரி க் ரி ஸ் ஸ் ரி ஸ் நி ப நி ஸா - |
தயிவ் . கொாண்ட இணைவிழி அழகன் பு-ய

ப ப ரி ஸ் ஸ் நி ப ம | ப ஸ் நி ப ஸ் நி ப ம ॥ ரி ம
அழகில் அமிழ்ந்துளம் இளகிவிரகமிகுந் தென்

(மற்ற சரணங்களும் அதேபோல்)

விரகமுற்றுப் புலம்பும் மோகனவல்லிக்கு அவள் தாய் இரங்கல்

விருத்தம்

*காலிரு கால்விலங்கு பூண்டசுரன் கான்முளையைக்
காத்துச் செங்கைக்

கோலிலிருங்காவிடை கண்டுயிலழகர் பவனிகண்டு
குவளைச் செங்கட்

சேலிலிரு நீர்ததும்பும் சேயிழைத் தாயெடுத்தில்
லிடஞ் சென்றுங்கோ

ராலிலிரு கையணைத்துப் பிடித்தமளி மீதேற்றி
யரற்றுவாளே (18)

---

*கால் = தூண். இருகால் விலங்கு = நரசிம்மமூர்த்தி.

17. கீர்த்தனம் இராகம்—காபி—ரூபக தாளம்

பல்லவி

மகளென்னமோ ஒரு
வகையாக இருக்கிருளே—என்தன் (மக)

அனுபல்லவி

ஜெகதலங்கள் துதிக்கும்
சிவகங்கை மாநகரில்
செங்கண்மால்வரும் துங்கமாகிய
தெரிச னங்கண்டென்னருகினில் வந்த எந்தன் (மக)

சரணங்கள்

1. கொந்தளகமும் உடையும் நடையும்
கொடியி னிடையும் சோர்ந்து - எழில்
சந்த்ரவதன சுந்தரக்கன
தனத்தி மனத்தி லெனத்தை நினைத்தோ என்தன் (மக)

2. பவளக்கொடிமெய் துவளத்துவளப்
படுத்துநெட்டுயிர்ப் பெடுத்துக்
கவளமெள்ளள வேனுங்கொள்ளாமல்
கயக்கமுற்றுள மயக்கமடைந்து என்தன் (மக)

3. மாலையுஞ் செம்பொன் ஓலையும் வர்ணச்
சேலையும் அணியாமல்
காலையும் அந்திமாலையும் எண்ணம்
கலங்கி யுறக்கம் விலங்கி யேமிக என்தன் (மக)

4. திடத்த நடுவ ணிடத்தினிலுடுக்
கடித்தாகிலும் பார்ப்போம்
இடக்குடனெவர் பார்த்திடுங்கண்
ணேரோ நா வேரோஎவ் வாரோதெய் வக்கூரோ என்தன்(ம)

5. மாலழகர்தம் கோலங்கண்டிவள்
மதிமயக்க முற்றளோ
கோலமதப்பேய் பிடித்ததோவகை
கூறுவாரன்றியே சீறுபா றென்றிப்போ தென்தன் (மக)

மேளம் 22

பல்லவி

, ரி ம | ப் நீ ப க ரி || , க ரி | ஸ ரி ஸ நி* ஸ ா ; || ரி ரீ க | ரி ஸ ரீ க க ||
ம க ளெ ன் ன மோ ஒ ரு வ கை யா க இருக் கி ਮு.ளோ எந்தன்

அனுபல்லவி

, ம நி | ப - ம க ரி ம || ப ப | நி ம ப ா || , ம ப | , ஸ நீ* ஸ் ா || ஸ் ஸ் | ஸ் ா ; ||
ஜ க த ல ங் க ள் துதிக் கும் சி வ கங் கை மா ந க ரில்

ப ரி | ஸ் ா நி த ப ம || ப ஸ் | ஸ் நி த நி ப ம ப ா || பபரிஸ் | ;நித பம || ப த நி த | பாத*பமக*மா
செங்கண்மால்வ.ரும் துங்க மா. . . கி . ய தரிசனம் கண்டென் அருகினில் வந்த எ.ந்தன்

(மற்ற சரணங்களும் அதேபோல்)

மோகனவல்லி சோகம் தீரத் தாய் சகியரைக்கொண்டு உபசரித்தல்

விருத்தம்

படித்து முன்னுட் பழகிமுதிர் சினேகத்தாலே
    பரிவோடவலளித்த குசேலருக் கன்போடு

மிடித்துயரந்தீர நிதியளித்துக் காத்த
    மெய்முகின் மாலழகர்தந்த விரகத்தாழ்ந்த

பிடித்துடிமின் னிடையுளபுத்திரியைக் கையாற்
    பிடித்துரித் தோடணைத்துடை நன் குடுத்திக் கந்தப்

பொடித்துகளும் பனிநீருந்தெளித்து நன்ருய்ப்
    போற்றியன்னை சகியரைக் கொண்டாற்றுவாளே. (19)

18. திபதை - இராகம் - சங்கராபரணம் - ரூபக தாளம்

1. சந்தணக் குழம்பெடுத்தணி முலேத் தடத்திற் பூசுவார்காமத்
தழலே வளர்க்க மழைவிழியளே விசிறி வீசுவார்
கந்தப் பொடியுஞ் சாந்தும் புனுகுங் கலந்து தூவுவார் மங்கை
கருத்தைத் தெரியாதுரைத்துக் காமன் கணேயையேவுவார்

2. ஒத்த தனத்தின் முத்தணிகளும் உருகுதே யென்பார் நல்
ஒளி மலர்ச்செழுந் தளிர்ப்பொன்மேனி கருகுதே யென்பார்
மெத்தை தனேவிட்டெடுத்துப் பைந்தளிர் மீதிற் கிடத்துவார்
இசை
வீணே தம்பூரு மீட்டிக் கீதங்கள் மிகவும் நடத்துவார்

3. சாமத்திலிந் தக்காமப்பேயை தடுப்பதா ரென்பார் மதன்
சன்னதம் நீங்கத் தகுந்த பூசை கொடுப்பதா ரென்பார்
காமக் காச்சல் தணிக்க மருந்து செலுத்துவீரென்பார்
எங்கள்
கர்த்தனழகன் சித்தந்திருந்த வழுத்துவீ ரென்பார்.

மோகனவல்லியைத் தாய்க் கோபித்தல்

விருத்தம்

மஞ்சனைய கருங்குழற்கோ வியர்க்கா யாற்றின்
மருங்கதனில் கனிக்காக்ஷி யளித்தந் நாளில்
கஞ்சனயந் திறைஞ்சவன்ஞேன் கரவுசெய்த
கன்றினம் போல் வேறமைத்தக் கணத்திற் பன்னுட்
புஞ்சநய வேயிசைத்தா வினத்தைக் காத்த
புனிதகுண வழகர் மிசை யாவலுற்ற
பஞ்சனைய மெல்லடியார் மகளை நோக்கிப்
பார்க்கின்ருள் தாய் கடிந்து கேட்கின்ருளே (20)

---

19. கீர்த்தனம் - **இராகம் - கல்யாணி - ஆதி**

பல்லவி

மாதே யங்கே யேதுக்குச் சென்ருயடி—மாயன்
பவனி வரும் வேளையில் (மாதே)

அநுபல்லவி

மாதுலாவி வளருஞ்சிவ கங்கை
வள்ளலான அழகருடைய
உள்ளந்தெரியா மலெந்தன் (மாதே)

சரணங்கள்

1. கன்னியர் மாடத்தின் வாசற்படியைக்
கடக்கவும் ஞாய முண்டோ—சற்றும்
என்னுரை கேளாத வன்னெஞ்சியைப்பெற்
றெனக்கொரு வாயு முண்டோ—இப்போ
தன்னெஞ்சறியாமற் சன்னதங் கொண்டிந்தச்
சட்டஞ் செலுத்துறாய் திட்டந்திட்டம் பெண்ணே
உன்னை யடக்கத் திறமெனக் கில்லையே
ஊரினுடைய வாயைமூட உலைமூடியும் தானுண்டோடி
(மாதே)

2. கொள்ளாது தாய்மொழி தள்ளிய பிள்ளை
குலத்துக்குச் சின்னமடி—மிகத்
தெள்ளித் தெளிந்த என்தேனே யுனக்கிந்தத்

திண்ணக்கம் தானென்னடி—வெகு
கள்ளமுடன்பதி ஞராயிரம் பெண்கள்
கற்பைய ழித்திட்ட சற்பனைக் காரனென்
றுள்ளது சொன்னாலும் சள்ளையடி நடை
ஓதிமமே அழகருடைய சேதிகள் தெரியாமலென்தன்
(மாதே)

3. வல்லமை சேர் தரு மாமறை யோர் நிதம்
வாழ்த்தும் இரு சரணன்—நாளும்
சல்லாபனுங் கவி குஞ்சரத்துக் கருள்
தண்டுளவா பரணன்—உயர்
செல்வமிகுஞ்சிவ கங்கையில் மேவிய
செங்கணழகர்க் கிணங்கிய மோகன
வல்லீ உன்னுல்லாச மென்னடை கண்டினி
மாமணமது செய்து கொள்
ளாமலும் விடுவானே போடி (மாதே)

மேளம் 65

ராகம் கல்யாணி—தாளம் ஆதி

பல்லவி

பா , கா , ரீ ஸா , ரி ஸ நி ஸா | ஸா , ரீ , ஸா | ரீ ; ; ; ||
மா தே அங் கே ஏ து க் கு ச் சென் று ய டி

க மா பா, கா கா க ரி க ம பா | ப ம நி த ப ம ம த | பா , த ப ம க ரி ||
மா . யன் ப வ னி . . வ ரு ம் வே . . . ளை . . யில் நீ . . . .

க த ப ம கா ரீ
ம ா . . தே .

அநுபல்லவி

ஸ்ா ஸ் நி தா பா ப ம க க மா ரீ | ; க ம ப த நீ | ஸ்ா , ஸ் ஸ்ா ஸ்ா ||
மா து . . லா வி . வ ள ரு ம் சி வ கங் கை வள் ள லா ன

த க் ரீ ; ஸ் ரி ஸ் நி தா ; ப ப | ப ம நி த பா பா | ம த ப ம க ரி கா ||
அ ழ கர் உ ள் ள ம் தெரி ய ா . . ம லே என் த ன்

சரணம்

தா, பா, பா ம த ப ம க ரி கா | க நி தா ; பா | ப ம கா மா ரீ ||
கன் னி யர் ம ா . . ட த் தின் வா சற் ப டி . . யைக்

க க ா ஸ் நி த பா ப ா ; கா மா | பா ; ; ; | ; ; க ா க ரி ||
க ட க் க வு ம் நியா யமுண் டோ ச ற் று ம்

க நி தா ; பா ப் த ப ம க ரி கா | ; க ஸ் நி த பா | க த ப ம க ரி ஸா ||
எ ன் னு ரை கே ளா த வ ன் னெஞ் சி யைப்பெ ற் ற

; நி ஸா ரி ரீ கா மா பா பா | ம த ப ம கா; | ரீ ; ஸா ; ||
எ னக் கொ ரு வா யு மு ண் டோ

ஸ்ா ஸ் நி தா பா ப ம கா மா ரீ | ; ம பா த ப ா | த ா நீ ஸ்ா ஸ்ா ||
த ன் னெ ஞ் ச றி . . யாமல் ச ந் ந த ம் கொண்டி ந் த

ஸ்ா, ஸ்ா, ஸ்ா ஸ்ா க்ா ரீ ஸ்ா | ஸ்ா தா, நீ | ஸ்ா ; ஸ்ா ஸ்ா ||
ச ட் ட ம் செ லு த் து ரு ய் திட் டம் தி ட்டம் பெண்ணே

; ஸ்ா ஸ்ா ஸ்ா ஸ்ா க்ா ரீ ஸ்ா | ; நி ரீ ஸ் தா | நீ ; ஸ்ா ; ||
உன் னை ய டக் கத் தி றம் எ னக் கி லை யே

; ஸ்ா, ஸ்ா, ஸ்ா ஸ் நி தா பா பா | ; க தா ப பா | க த ப ம க ரி கா ||
ஊ ரின் வா யை . . மூ ட உ லை மூ டி தா னு ண் டோ டி

மற்ற சரணங்களும் அதேபோல

மோகனவல்லி தாய்க்கு மறுமொழி கூருமல் சகியிடம் உரைத்தல்

விருத்தம்

பசத்தாக மின்னனை சொற் கெதிர் கூருமல்
பயந்தயர்வுற் றுளமயக்குற் றழகர் மோக
வசத்தாலெற் பகலிரவோர் யுகம் போலாகி
மழை மதற்கண் துயிலுமிலை பசியுமில்லை
பசித்தாலு மெள்ளளவு புசிப்பு மில்லைப்
பாலடிசில் மங்கையர்கள் பரிந்தங் கூட்டப்
புசித்தாலும் ருசிக்கவிலை யவளென் செய்வாள்
புலம்பியிந்த விதம்சகி பாற் புகல்கின்ருளே. (21)

---

20. கீர்த்தனம் - இராகம் - வகுளாபரணம் - ஆதிதாளம்

பல்லவி

மோக மிஞ்சுதென்ன செய்வேன் மொய்குழற் சகியே மானே
ஆகம்பசப்புற்ற தாலிங்கணுவளவேனுமனஞ் சகியேனே (மோக)

அநுபல்லவி

நாகவணை மீதுயோகானந்தல் செய்யும் கண்ணன் தானே
தாகமோ டெனைச் சேராவிடில்
அரைக்ஷணமேனு முயிர்தரியேனே—மா (மோக)

சரணங்கள்

1. பஞ்சணைமீதிற் படுக்கப் பரிவாய் முத்தங்கொடுக்க
வஞ்சமாரன்றன்னை யொடுக்கக் கண்ணன்
மகிழ்வுற்றென்னுடன் லீலை தொடுக்க (மோக)

2. மன்மதன் மதம் பாராட்டி மாயவன் மேலாசை காட்டி
யென்மனதிளகிட வாட்டிக்கணை
யெய்கிறுன் வில்லின்ருணை மாட்டி (மோக)

3. கவி குஞ்சரபாரதி கருத்துறைந்த நிதி
பவனிக் காட்சிதந்தென் மதிதனைப்
பற்றிக்கொண்டதா லவன் மீதிலதி (மோக)

மோகனவல்லி அழகரிடம் சகியைத் தூதுபோகச் சொல்லல்

விருத்தம்

அங்கண்மா வனந்திகழ் கோகுலத்தோர் நாள் கோவியரா
குலத்தைத் தீர்க்கத்
திங்கள் கலா விடங்கொழுநனெனக் கூடியவளகந்தை
தீர்த்தக் ரூரர்க்
கிங்கிதமா யமுனை நதிக்குள்ளினுமக் கரையினுங்கண்
காட்சியீந்த
செங்கண்மாலழகனிடத் தென்விரகஞ் சொலச்சகி நீ
செல்லென்பாளே. (22)

---

21. கீர்த்தனம் இராகம்—பரசு—ஆதிதாளம்

பல்லவி

மங்கையே நீ தூது போடி எங்கள்
மாலழகனைக் கூட்டி வாடியிப்போதே சேடி (மங்கை)

அநுபல்லவி

பங்கயன்றனைப் பயந்த செங்கமலக் கண்ணனை முன்
பவனியிற்கண்டு மோக பரவசங்கொண்டேனடி (மங்கை)

சரணங்கள்

ஏலுமதப்பயல் மாலைக்களிற்றின்மீ
தேறியுலாவித் திரிந்தானடி—கணை
சீறியென் மார்பிற்சொரிந்தானடி—கடுங்
கோலப் பிறைக் கோடுந் தைக்குதே—இரு
கும்பத் தனத்தைத் துளைக்குதே—யுடல்
பாலுற்றனலாக மொய்க்குதே—தீம்
பாலன முஞ்ருசி யாமலே கைக்குதே (மங்கை)

2. வில்லிமலர்க்கணை சல்லடைக்கண்போல
மெய்யடங்கலு மழுந்திடுதே—கண்ணன்
மையல் புளகித் தெழுந்திடுதே—மிகச்
சல்லைக் குறுந்தென்றல் சீறுதே—வரிச்
சங்கக் கடலொலி மீறுதே—மாவில்

அல்லிற்குயிலிசை கூறுதே—விடி
யாமஞெ டியுக மாய்வளர்ந்தேறுதே (மங்கை)

3. ரஞ்சிதமாமறைக் கஞ்சன் முதற்றேவர்
நாளுந்தொழு மாமலர்க் கண்ணனே—எனே
யாளுங்கடல்மாமணி வண்ணனே—நான்
பஞ்சணேமீது நிதங்கூடவே—உள்ளம்
பரமானந்த சுகத்தை நாடவே—கவி
குஞ்சரத்தின் சொலிசை பாடவே—என்றும்
கொஞ்சிக் கோலாகல மாய்விளேயாடவே (மங்கை)

சகி அழகரிடம் சென்று மோகனவல்லியின் வனப்பையும் காதலேயும் வணங்கித் தெரிவித்தல்

விருத்தம்

அல்லியங் கோதை நல்லாளதி மோகனவல்லியென்பாள்
வில்லியின் குதையம் பாலே மெலிந்திடுமுள்ள வாவைச்
சொல்லிடவிரைவாய்ப் பாங்கி துளவஞ லயஞ்சென் றேத்தி
வல்லியின் கருத்தைச் செங்கண் மாலிடம் வழுத்துவாளே.

22. கீர்த்தனம் - இராகம் - மாஞ்சி - சாபு தாளம்

பல்லவி

மோகனவல்லி மின்னாள் உன்மேல்
மோகமதாகினள் ஐயாசாமி (மோக)

அனுபல்லவி

நாகவணையினிற்கண் துயிலு மணிவண்ணனே
நந்தன் பாலகனை செந்தாமரைக் கண்ணனே (மோக)

சரணங்கள்

1. கொங்கைக்குடங் கெவுளபாத்ரம் - அந்தக்
கோதை நல்லாள்ரதி - கோத்ரம் - செழும்
பங்கஜதளமவள் - நேத்ரம் - தங்கள்
பார்வைக்கிணங்கியஸத் - பாத்ரம் - நின்கைச்
சங்கங்கந் தரங்காணும் - தயவுற்றிணங்கவேணும்
நங்கையர்க்காசைபூணும் - நடைகண்டாலனம்நாணும்
(மோக)

2\. தண்மலர்க்குழலொரு பாகம் - பின்னல்
சடைகண்டொளிக்குங்கரு நாகம் - உயர்
செண்பகப்பூமணம் தேகம் - நாளைச்
சேர்ந்தபின் தெரியும்வை போகம் - அவள்
தண்மைமொழிகற் கண்டு - சமைந்தொரு மாதமுண்டு
பண்புசேரெழில் கண்டு - பவனிமேலாசைகொண்டு
(மோக)

3\. மழைநிறத் தொளிகொண்ட நீலா - அன்பர்
மனதிலுறையுங்குண சீலா - செழும்
கழைமதன் தனைபெற்ற லோலா - செஞ்சொற்
கவிகுஞ்ச ரத்துக்கனு கூலா - மால்
அழகரேயுந்தன் மேலே - ஆசைமிகுந்தன் பாலே
பழநெகிழ்ந்தொருக்காலே - பாலில்வீழ்ந்ததுபோலே
(மோக)

மேளம் 20

மாஞ்சி - சாபு

பல்லவி

; ப ம | கரி ஸா || ; ரி க | மாபதபத || பா, | ; ; || ; , | பா, நிதபமா ||
மோ ஹ ன வ . ல்லி.மின் ளுள் உ ன் . மேல்

; ப | தூஸ்நிநித || த பா | பாபநிதப || கா, | மாபதபா, தப்மகா || ரீ, | ஸரிகரிப்மகரி || ஸா
மோ ஹ . . ம தா கி ளு ளெ யா . . . சா . மி

அனுபல்லவி

; ப | த நி த - த || நி ஸ்ா | நி ரி ஸ்ா || ; தநி | ஸ்ா ஸ் || ஸ்ாநிரிஸ்நி | தாபா ||
நா க . வ ணே யினிற்கண் துயி லும் ம ணி . வண் ணனே

; நித | தாஸ்நிநித || த பா | பா த ப || கா, | ப ம த ப || கா, ரீ, | ஸரிகரிபமகரி || ஸா
தந் தன் பா ல க ளு . ன செந் தா . ம ரைக்கண் ண- னே

சரணம்

; ரிக | மா மா || தபாகா, | ரீகா || கா,மா, | தா பா || ; , | பாதபமா ||
மழை நிறத் தொளி கொண்ட நீ . லா அன்பர்

; பப | தாஸ்நிநித || த பா | பநிதப || கா, | மபதபபமகா || ரீ, | ரிகஸா ஸா ||
மன தி . லு றையுங் குண . சீ . . . . லா செ . ழும்

கழைமதன்தனைப்பெற்ற லோலா செஞ்சொற்
கவிகுஞ்சரத்துக்கனு கூலா மால்

அனுபல்லவி போல்

அழகரே உந்தன்மேலே ஆசைமிகுந்தன்பாலே
பழநெகிழ்ந்தொருக்காலே பாலில்வீழ்ந்ததுபோலே (மோ)

இதுவுமது - விருத்தம்

சேலிருக்கும் விழியுடையாள் தேனிருக்கு மொழியுடையாள்
சிறந்த மோக
மாலிருக்கு மனமுடையாள் வாரிருக்குந்தன முடையாள்
வல்லியென்றே
பாலிருக்குங் கடல்நடுவே படுத்திருக்குங் கண்ணனெனும்
பக்ஷிராஜன்
மேலிருக்குமழகர் மனமெலிந்துருக்கும் படிசேடி
விள்ளுவாளே (24)

23. கீர்த்தனம் **இராகம்—நவரோஸ்—திரிபுடைதாளம்**

பல்லவி

அணையவாரும் செழுமணிவண்ணனே - ஸாமி
அணையவாரும்

அனுபல்லவி

பணைமலர்த்தடஞ்சூழும் அணிசோலைமலை வாழும்
பனகசயனரேமோ கனவல்லி தனைக்கூடி (அணை)

சரணங்கள்

1. பருதி நிகரிரதப் பவனியில் வருகையில்
கருதி உம்தமையெதிர் கண்டாளாம் - அந்த
அரிவையன்று முதலாப் பொருமதன் பகழியால்
அங்கமிகமெலிந்து - பொங்கியுமை நினைந்து
அனமும்பாலுங்கசந்து - தனியேமிகப் பயந்து
அணைமிசை துயிலாமல் - இணைமொழி பயிலாமல்
அஞ்சுகிருளெங்களைக் - கெஞ்சுகிருள்
திருவுளமிரங்கியே - கருணைக்கிடமான உன்
சிந்தனையதனிலோர்ந்து - ஸந்ததம் களிகூர்ந்து (அணை)

2. அந்திமுன்னேரத்தில் சந்த்ரிகை குடிகொண்டு
வெந்திடும் தழலெனவே தூவுதாம் - அந்தச்
செந்திரு நிகர்மின்னுள் கொந்தளகந்தனிலே
செழுமலர் முடியாமல் எழிலிசை படியாமல்
சீறுந்தென்றற் புலிக்கும் மீறுங்கடலொலிக்கும்
சினமாங்குயிலுக்கும் அனமாம் பயிலுக்கும்
தியங்குகிருள் சிந்தை மயங்குகிருள் - அனு
சந்ததமும் உமது சிந்தை மகிழ்ந்து நங்கை
தாகமோகந்தீரவே யேகவைபோகமாகவே (அணை)

3. சீர்தவ நிறைமறை யோரனுதினம் போற்றும்
செங்கணழகரெனும் திருமாலே - அந்த
வாரணிதனமங்கை நேர் தெரிந்து கொள்ளாமல்
வன்கண்மை செய்வ தேதுபெண்கள்மேலென்னவாது
மயல் கொண்டு வந்ததாலே தயவுசெய்து கைமேலே
வனமாலை தருவீர் கனசுகமே பெறுவீர்
மாயனேவே யூதுங்கனி வாயனே - அந்தக்
கூர்விழியாளுடனே ஏர் பெருகிய கவி
குஞ்சரம்பதம் பாடி ரஞ்சிதமுடன்கூடி (அணை)

சகி அழகரைக் கையுடனழைத்து வராதது பற்றி மோகனவல்லி வருத்த முற்றுரைத்தல்

விருத்தம்

வெம்மதிக்குந் தென்றலுக்கு மெலிந்து வாடும்
மெல்லியதி மோகினிப் பெண் விரகமுற்றும்
அம்மதிக்கு முயர்வதனத் தழகர்முன்னம்
அறிக்கையிட மணமாலை சூடுஞ்சிந்தை

சம்மதிக்கு முண் மதிதேர்ந்தடைந்து பாங்கி
　　தையல் திருத்தாள் பணிந்தென்னையேயுன் றன்
செம்மதிக்கு ரியவழகர் நாளையுன்பால்
　　சேர்வரென அதற்கு வல்லி செப்புவாளே (25)

வெண்பா

வாளோர் விழியணங்கே மாலழகர் வந்தினிமேல்
தோளினிலே நாண்மாலை சூட்டுமென்றாய் - தேளோர்
விடத்தைநே ராகு மிகுபசிக்கு நாளே
ரிடச் செய்த வாறுபோ லின்று (26)

அதற்குப் பாங்கி கூறல்

வெண்பா

வள்ளைக்குழைமோக வல்லிசுக்கு கண்டவுடன்
பிள்ளைபெற நினைந்து பேசுகின்றாய் - தெள்ளியசீர்
செம்மழைத டுத்த மலர்ச் செங்கரத்திற் சங்கணிந்த
நம்மழகர் தம்மயலி ஞல்

அழகர் தன்பால் வரவில்லையென்று மோகனவல்லி வருந்தல்

விருத்தம்

அரவிலே நடைபயின்று மாலிலையிலேதுயின்று
மாயர் வீட்டிற்
கரவிலே வெண்ணையுண்டு கருடனிலே வருமழகர்
கருதுமென்பால்
வரவிலே நினைவுமில்லை மதியிலே தயவுமில்லை
மானேயென்கண்
இரவிலே துயிலுமில்லை யேந்திழையே யானுமிதற்
கென் செய்வேனே

---

24. அடிமடக்குத்திபதை இராகம் - எதுகுல காம்போதி - ரூபகம்

1. சேடசயனஞ் செய்து மகிழ்ந்தவர் எனையணைந்துவி
சேடசயனஞ் செய்து மகிழ்கிலார்
பாடியினில்தந் தயையுகந்தவர் வாயின்வேயிசை
பாடியினித்தந் தயையுகக்கிலார்

2. இடைச்சியரக முரிநெய்க் கலந்தவர் - மெலிந்துவாடும்சிற்
றிடைச்சி மென்னக முருகக் கலக்கிலார்
வடத்திற்குழந்தை அங்கத்துறைந்தவர் எனதணிமுத்து
வடத்திற்குழைந்தென் னங்கத் துறைகிலார்.

3. வில்லையொடித்தம் மானைக்காத்தவர் மாரன் கருப்பு
வில்லையொடித்தென் மானங்காக்கிலார்
கல்லையுரு மங்கையெனச் செய்தவர் என்றன் முன்மிகு
கல்லையுறுமங் கயனைச் செயிக்கிலார்.

4. அம்பரத்தினிற் கதிரையொளித்தவர் தனத்திடைமதன்
அம்பரத்தினிற் கதிரையொழிக்கிலார்
உம்பர்க்கிதமுற் றமுத மளித்தவர் நிதமுங்கூடி
யுண்பற்கிதழ்முத் தமுதமளிக்கிலார்

5. வனத்துளவத்தை அகத்தில் தரித்தவர் எனைவருத்தும்யவ்
வனத்துளவத்தை அகத்தில் தரிக்கிலார்
அனத்துறுமயன் தனக்குத் தந்தையார் அணையினேசுச
யனத்துரிமை யென்றனக்குத் தந்திலார்.

6. கடலைக் கடக்கக் கவிகொண்டணைத்தவர் எனதுமோகக்
கடலைக் கடக்கக் கை கொண்டணைக்கிலார்
மடலெழுதவொண்ணு தென்னெஞ்சமே ஆயினுமென்றன்
மாலழகர்தம் பாதந்தஞ்சமே

அதிமோகனவல்லிக்கு சகி கூறல்

விருத்தம்

கடக்கவோர் கரையிலாத காமநீ ராழியுள்ளத்
தடக்கவோர் திறமிலாத வதி மோகவல்லிதன்னை
விடக்கொடும் புண்ணிற் கோலை விட்டுளை வகைபோற் பாங்கி
யிடக்கொடும் பழமை சொல்லியிடிக்கின்றாள் படிக்கின்றாளே

---

25. கீர்த்தனம் இராகம்—கேதாரகௌளம்—ரூபகதாளம்

பல்லவி

பாவையே ஸாமி வருமுன்னித்தனை
பதட்டந்தானுனக் கென்னடி—அடி (பாவையே)

அனுபல்லவி

ஆவலழகர் மேலுற்ற தாலே—நொய்
அரிசி கொதிபொறுதென்றாற் போலே (பாவையே)

சரணங்கள்

1. காதலை மனதில் அடக்கவேணும்
கர்த்தனுக்கும் இச்சை கொடுக்கவேணும்
பாதத்தில் நீயன்பு தொடுக்கவேணும்
பதறுதிருந்தல்லோ படுக்கவேணும் (பாவையே)

2. உள்ளத்தில் நம்பிக்கைகொள்ள வேண்டாமோ
ஓகோவுன்சிந்தையும் இப்படிநோமோ
கிள்ளைக்கு சொல்வதுபோற் சொல்லலாமோ
கிணற்றுநீரை வெள்ளம் கொண்டுபோமோ (பாவையே)

3. உண்டென்று நம்பினுல் தெய்வந்தராதோ
உற்றபொருள்கையில் தானேவராதோ
அண்டையில் நின்று சிணுங்கிறுயேதோ
ஆக்கப்பொறுத்தவர்க் காறப் பொறுதோ (பாவையே)

4. எங்களழகர் க்ருபையா லெப்படியும்
எண்ணின காரியம் நன்மையாய் முடியும்
நங்கையே சொல்கிறேன் கேளுள்ள படியும்
நாழிகை முப்பது சென்றல்லோ விடியும் (பாவையே)

5. குஞ்சரத்தையென்றும் காப்பதுபோலே
கூடியணையவருவார் தன்னுலே
பஞ்சரிப்பேதுக்கடி யொருக்காலே
பகுத்தறிந்து கொள்ளாமல் மென்மேலே (பாவையே)

மேளம் 28

கேதாரகௌள—ரூபகம்

பல்லவி

ஸ்ா | நி-ரிஸ்நிதபா || மபநித | தபமககரிஸா || ,ரிரி | , மபபம || பநிஸ்ாரீஸ் | நிதபாரிமபநி ||
பா வையேசா.மி வ . ரு முன்இத்தனைபதட் டம்தான்உன க்கென்.ன டி . அ . டி

அனுபல்லவி

,ம | பநிஸ்ரி || ரிப்ம்க் | - ரிம்க்ரிஸ்ாரீ | நிஸ் | ரிஸ்நிதபா || பதபா | மக-ரிமபநி ||
ஆ வலழகர் மேலுற் ற தா லே நொய் யரிசிகொதி பொ.ருதென் ருற்போலே

சரணம்

ப த ப ா | ம க ரி க ஸ || ஸ ரி | ம ப ா ப || ப நி ப | ப - ப த ப ம ா || ப ஸ் | நி - ஸ் ா ஸ் ||
உ ண்டென்றுநம்பினல் தெய்வம்தராதோ உ ற் ற பொருள்கையில் தானே வராதோ

ரி ரி | ரி ரி ரீ || ரி ப் ம் க் | ரீம் க் ரி ஸ் ஸ் ா || ரி ஸ்ரீ | ஸ்ா நி த பா பா || ப த பா | ம க ரி ம ப நி ||
அண்டையில்நின்றுசிணுங்கிருய் ஏ தே ா ஆக்கப் பொறுத்தவர்க் கா. றப் பொரு தோ

மோகனவல்லி கடலைநோக்கி வினவுதல்

விருத்தம்

உரைத்ததெலாஞ் செவிடன்காதூதிய சங்கெனச்சகிதன்
　　னுள்ளந்தேறக்
கரைத்ததெலாங் கருங்கடலிற் பெருங்காயங்கரைத்ததெனக்
　　கண்ணன்றானும்
விரைத்தமயல் வேதையினல் வருந்தும்மதிமோகினிபால்
　　விருதாவாகத்
திரைத்தெழுமார் கலிக்குளெழு மொலிக்குமன திறங்கி உரை
　　செய்கின்றாளே.

---

26. கீர்த்தனம் - இராகம் - செஞ்சுட்ருடி - ரூபக தாளம்

பல்லவி

கடலே யென்றனைப் போலவே நீயும்
காதலுற்றாயோ—கரும் (கடலே)

அனுபல்லவி

அடர்சோலை மலைமேவிய
ஆயனுகிய மாயனிடத்தில் (கடலே)

சரணங்கள்

1. மாலையடைந்து நின்றேன் நீயு
மாலையடைந்து நின்ருய்— - கை
வளைகள் நெகிழ்ந்துநின்றேன் நீயும்
வளைகள் நெகிழ்ந்து நின்ருய் இதே
வேலையாய் நிறங்கறுத்தேன் - நீயும்
வேலையாய் நிறங்கறுத்தாய் மழை
மேகமுரும வெருவிக்குறைந்தேன்
மேகமுரும வெருவிக்குறைந்தாய் (கடலே)

2. வாயினிற் கம்பலை கொண்டேன் - அலை
வாயினிற் கம்பலை கொண்டாய் - நிறை
மதிக்குக் கண்புனல் சொரிந்தேன் - நீயு
மதிக்குக் கண்புனல் சொரிந்தாய் - இந்த
மாயிருஞாலத்தி லுறங்கேன்—நீயு
மாயிருஞாலத்தி லுறங்காய்வெம்
மதனக் கனலால் மிகவுமெலிந்தேன்
மதனக் கனலால் மிகவுமெலிந்தாய் (கடலே)

மேளம் 28

செஞ்சுருட்டி - ரூபகம்

பல்லவி

; க க | கரி மகரிஸஸ ॥ ,ரிக*, | ந்தரிஸாஸஸந்த ॥ ப - ஸ | ஸஸ ஸரிகம ॥ கா | ; ஸரி ॥
க ட லே எந்தனைப் போ. லவே நீ யும்-கா தலுற்ரு யோ கரும்

அனுபல்லவி

, ஸ ரி | மா , ம ம ॥ ,கம | பதாபபப ॥ பமதப | பபமம கக ॥ கரிபம | கரிஸாரீ =
அடர் சோ லை மலை மே விய ஆய ஞ கிய மா.ய. னிடத்தில்

சரணம்

, க | கரிமகரிஸஸா ॥ ,தநி | ஸ - த நி ஸ தநி ॥ ப - ஸ | ஸ ஸ ஸ ரி ॥ ஸரிகம | கா; ॥
.மா லையடைந்து நின்றேன் நீ . . யும் மா லையடைந்து நின் ருய்

அதிமோகனவல்லி சந்திரனை நிந்தித்தல்

விருத்தம்

சங்கதிர்பன் மணியுதிருங் கழைகமுகு தேங்குபல
தருக்களோடுஞ்
செங்கதிர் சார்வரம்பகணி திகழ்சோலை மலையிலனு
தினம் விளங்குந்
துங்கதிருவழகர்மண மாலைபெரு மற்றளருஞ்
சோர்வு கண்டோ
வெங்கதிரோன் றனைவிழுங்கி வெந்தணல்போற் காந்தலுற்ருய்
வெண்ணிலாவே (31)

—

27. கீர்த்தனம் - இராகம் - பியாக் - ஆதிதாளம்

பல்லவி

வன்கொடுமை செய்கிறுய் மதியேநீ
வன்கொடுமை செய்கிறுய் (வன்)

அனுபல்லவி

பொங்கமுடனேழு வொன்பது பெண்களைப்
போகஞ் செய்தாயே முன்னம்
அங்கமிலாததோர் சங்கதியில் குரு
த்ரோகஞ் செய்தாயே மதியே நீ (வன்)

சரணங்கள்

1. சுதையுடன்கூடப் பிறந்துத் தண்ணளி
தோன்ருதென்கண்டாயே - பரு
மதியின்றிச்சிறு மதியென்றே அவ
மதியுங் கொண்டாயே பாவி (வன்)

2. வானமுழுவதும் நீ சுட்டுக்கொப்பள
மானது தானல்லவோ - அதை
மீனினந்தோய்ந்த விசும்பென்று சொல்வது
வீண்மொழி தானல்லவோ பாவி (வன்)

3. நித்தன் நுதற்கன லிற்குமே லாகிய
நிட்டூரங்காய்ந்தாயே பெண்கள்
பித்துக்கொண்டல்லவோ நாளுக்கு நாளுன்றன்
பேரொளி தேய்ந்தாயே பாவி (வன்)

4. மங்கையைத் தீப்புகச் செய்தவன் போற்பழி
வார்த்தைக் குள்ளாகாயோ - இப்போ
திங்குள்ள வெம்மையைக் கொண்டென்னழக
னிடத்திநிற்கேகாயோ - பாவி (வன்)

மேளம் 29

பியாக் - ஆதி

பல்லவி

ஸ கா ம பா,ம* க ம | கா, | ம ம க ரி ஸ நி ||
வன்கொ டு மை செய் கி ருய் | ம . தி யே நீ

அநுபல்லவி

, நி ப த நி நி நீ | ஸ் ஸ் ஸ் | ஸ்ா ஸ் ஸ் ||
பொ ங் க மு ட னே மூ | வொன்பது | பெண்க ளை

ஸ் ஸ் ரி ஸ் நி ஸ் நி த பா | க ம ப த நி ஸ் நி த | ப ம* த ப ம க ||
போகம்செய் தா யே | முன் | னம்

, க் க் ரி—ம் க் ஸ்ா | , ஸ் ஸ்ா ரி ஸ்ா | நி ஸ் நி த ப ம* பா ||
துங்கமில் லாததோர் | சங் கதி | யில் கு . ரு

ஸ கா ம பா, ம* க ம | கா | ம ம க ரி ஸ நி ||
த்ரோகம் செய் தா யே | | ம . தி யே

மோகனவல்லி மன்மதனை நிந்தித்தல்

விருத்தம்

கதிக்குடைய கதிநீயென்றெழுதிவிட்ட ருக்மிணியைக்
கரந்தொட் டந் நாட்
சதிக்குடைய சிசுபாலன் றலைகுனிய விடுத்தருண்மா
தவன்மா மோகா
வதிக்குடைய வல்லியென்பா லஞ்சுகவாம் பரியேறி
மதங்கொண்டுன்றன்
மதிக்குடையைப் பிடித்தெனது மதிக்கிடரைப் புரிவதெனை
மாரவேளே

---

28. கீர்த்தனம் இராகம்—பியாகடை—ரூபகதாளம்

பல்லவி

மதனுவுனக் கேனிந்த வர்மமடா: என்ன தர்மமடா அட

அநுபல்லவி

எதிரிலிக்குவில் வளைத்து வண்டு நாண்
இறுக்கிருய் கடிந்துறுக்கிருய் என்னை
ஒறுக் கிருய்மெத்த முறுக்கிருயடா (மதனு)

1. பாவி நிலவைக்கொண் டேன் கொளுத்தி நீ
வாட்டுருய் விருதுபா ராட்டுருய் பய
மூட்டுருய்பயில் காட்டுருய்அட (மதனு)

2. எங்குந்தானே பரித்திவிதைக்க
லாகுமோ அதுவிளைவாகுமோ மதி
போகுமோ உன்தனு லாகுமோ ஏகடா (மதனு)

3. தேள் தனக்கதி காரங்கொடுத்தாற்
போலே சினந்தொருக்காலே—பகை
யாலேயே தோவென் மேலே கோலுருய் (மதனு)

4. செய்யாது செய்தால் வையகங்கலங்
காதோ—என்னுடென்ன வாதோ அட
மேதோ ஏனிந்தத் தீதோ ஓதடா (மதனு)

5. நெற்றிக் கணற்குமு னேகணைசொரிந்
தனையே—யுடல்பொரிந்தனையே புகமொழிந்
தனையே—யிகழ்வடைந்தனையே முனையே (மதனு)

6. மாலழகருக் குற்றமனைவி நான்
அல்லவோ உனக்குத் தாயல்லவோ—அங்கே
சொல்லவோ உன்றனை வெல்லவோ சொல்லடா (மதனு)

மேளம் 29

பியாகடை—ரூபகம்

பல்லவி

ஸ ஸ | கா ம ம | ப த நீ த | ப ரீ , க ம ப || ரீ | ஸ ா; || தா ரி நி | , த ப ம ா க ரி ||
ம த ஞ உனக் கே னி ந் த வ ர் ம . ம டா என்னதர் ம ம டாஅட

அனுபல்லவி

, ம க | ம ப த ப || ஸ் நி த ப | ஸ் நி ரி ஸ் || க் க் ா ம் | ரீ ஸ் ஸ் || ஸ் ! ரீ ஸ் | நீ த ப ||
எ தி ரிலீக்குவில் வ ளைத் துவண்டுநாண் இறுக்கிருய் க டி ந் து றுக்கி ருய்என்னை

ப தா ரி | நீ த ப || க ம ா ப | ப ப ம ா க ா ம ரி ||
ஒறுக் கி ருய்மெத்த மு று க் கு ரு ய் அ ட

சரணங்களும் அனுபல்லவி போல்

அதிமோகினி அழகரை நினைத்துக் கூடல் வளைத்தல்

வெண்பா

மாலழகர் மாலால் மயங்கியதி மோகினிப் பெண்
நீலளகஞ் சோர நிலை சோரச் - சால
இளைத்தாள் மனது மிக ஏங்கிஞள் கூடல்
வளைத்தாள் தழைத்தாள் மகிழ்ந்து. (33)

குறமடந்தை வருதல்

விருத்தம்

ஒரு கையிலே தலை கவிழ்த்தி யுருகி மயல் பெருகிவல்லி
யுள்ளம் வாடிக்
கருகையிலே கயிற் பிரம்பு மிடுக்கிய கூடையு மிலங்கக்
கலீர் கலீரென்
திருகையிலே வளை கிலுங்க இடைகுலுங்க நடைதுலங்க
எவருங்காண
வருகையிலே நல்வரத்து வருகுதெனக் குற மடந்தை
வருகின்ருளே. (34)

இதுவுமது

செய்க்கு வளைத்தேன் பரந்து செந் நெல்விளை சோலைமலைச்
செம்மல் மால் கொண்
டிக்கு வளைக்குஞ் சரத்தா லிளைத்த வளுக்கினிதுரைக்க
இகல் வேந்தெல்லாங்
கைக்கு வளைக்குங் குறியாள் காது வளைக் குஞ்சரியாள்
கயலை வென்று
மைக்குவளைக் குயர் விழிமாலழகர் மலைக் குறவஞ்சி
வருகின்றாளே. (35)

இதுவுமது

நிலை மண்டில ஆசிரியப்பா.

வயிணவர் தரிக்கும் வளர்நேமி சங்கமென்
றியல் புறு முத்திரைக்கிணைரவி மதியைத்
துலங்கவே தரித்துச் சுவர்க்க மட்டுலவுஞ்
சிலம்பு சேரருவி திகழ் சோலை மலையான்
மழைத்தாரையுடனே மலர்த்தேனு மொன்றாய்ச்
செழித்து நீர்பெருகுந் திருவை கையுடையான்

பூங்கரும் புடைந்த புனல்பணை மேவிப்
பாங்கு நெல் விளைக்கும் பாண்டி நாடுடையான்
வாசவனயன் முதல் மகிழ்வுடன் போற்றும்
போசனு மழகா புரி நகருடையான்
ஓது நான் மறையே யுகந்தவாம் பரியான்
தீதிலா வஷ்ட திக்குறுங் கரியான்
செந்திருமடந்தை செழுமுலைத் தடத்தில்
தொந்தமாய் முயங்குந் துளப மாலிகையான்
கதிர் சிறையடிக்குங் கருட வாகனத்தான்
அதிர் திரை கடந்தவனுமகே தனத்தான்
வார் கடலொலியென வழங்குமும் முரசான்
சீர்மாயை வயிற்றுட் செலுத்துமாணையினன்
புவன கோடி யெலாம் புரக்கும் வெண் குடையான்
மவுனசித் தாதியர் மனத்துளன் புடையான்
முத்தொழில் முக்குண முச்சுடராதி
எத்தொழில் தமக்கு மிறைவனுஞ் சோதி
செங்கண் மாலழகர் திருவருள் பாடிச்
சங்கணி கொங்கைத் தடமதிற் சூடிச்
செங்கள பங்கள் திகழ்மணங் காட்டிக்
கொங்கலர் மாலை கூந்தலிற் சூட்டி

வச்சிரமிழைத்த மணிக்கூடையதனை
மெச்சிய இடையில் விளங்க வேயிடுக்கித்
தொடி வளையணிந்த துளிர் வலக்கரத்தில்
வடிவுடன் பிடித்த மாத்திரைக் கோலும்
டுண்டுடும் டுண்டுடும் டுண்டெண விசையொடும்
விண்டிடாக் குறியெலாம் விளங்க வேயிசையொடு
துடியிடக்கரத்தில் துலங்கவே பிடித்துப்
படியெலாமளந்த பரமனைப் படித்து
நகை முகங்காட்டி நகருளோர் தமக்கு
உகந்துமே வியப்புற உறைத்திடுந்திறத்தாள்
மகுடமன்னவர்க் கெலாம் வலக்கர நோக்கி
யிகலில் மங்கையர்க் கெலா மிடக்கர நோக்கி
யகக்குறி முகக்குறி அகங்கை விழிக்குறி
நகக்குறி முதலெண்ணுன் கிலக் கணக்குறி
நொடிக்கு முனேக்கி நுவலும் வல்லமை சேர்
மடக்கொடியாங்குற வஞ்சி வந்தனளே (36)

29. கீர்த்தனம் **இராகம்—பியாகடை—ஆதி**

பல்லவி

மலைக் குறவஞ்சி வந்தாளே - மாயவன் சோலை (மலை)

அநுபல்லவி

மலைக் குறவஞ்சி வந்தாள் தலத் திலதி மோகன
வல்லி தனக்கு குறி சொல்லும் வல்லமையுள்ள (மலை)

சரணங்கள்

1. பாலனைய மொழியாள் சேலனைய விழியாள்
பைங்கள பங் களிலங்க அணிந் தெழு
சங்கணி கொங்கை வடங்கள் துலங்கிட (மலை)

2. மின்ன லெனுமிடையாளன்ன மெனும் நடையாள்
மென்கையிலங்கிய கங்கண வோசை
கலின் கலினென்று குலுங்க நலங் கொடு (மலை)

3. அங்கங் கலிங்கம் வங்கம் கொங்கஞ் சிங்கந்தெலுங்கம்
அஷ்டதிசை கண் முதலிஷ்ட முடன் விருது
கட்டிடுங்குறிவிண்டு சட்டஞ்செலுத்திக் கொண்டு (மலை)

4. வாணர்க் கருளுங்கலை வாணி கேள்வன் முதலாய்
வர்த்தனையுடனனு நித்தமுந்து திசெயுங்
கர்த்தனழகன் பதஞ் சித்த மதிற் பதித்து (மலை)

பியாகடை—ஆதி

பல்லவி

; க மா ப மா தா பா ஸ் நி த ப | ஸா ; ; ப த | நி நி த ப ம ப ம க ||
ம லை க்கு ற வஞ் சி வ ந் தா ளே ம ா ய வ ன் சோ. லை

ம ரி - க மா த ப ம க ம க ரி ஸ நி த ப | ஸா ; ; ; | ; ; ; ; ||
ம லை க் கு ற வ ஞ் வ ந் தா ளே

அனுபல்லவி

; ம பா த பா ஸ்ா நீ ரீ ஸ்ா | ; க் க்ா க் ரீ | ம்ா க் ரி ஸ்ா ஸ்ா ||
ம லை க் குற வ ஞ் சி வந் தாள் தலத்தில தி மோ . க ன

; ரீ , ஸ்ா நீ நீ தா பா | ; பதநீ ,தபா | ப ம த ப ம க மா || ரீ
வ ல்லித ன க் குக் குறி சொல்லும்வல் ல மை ம யு ள் ள

சரணம்

; ரி நீ த பா- ப ம த ப ம க ரி | ;கமா ப பா | ப ம தா பா ; ||
பா ல னை ய மொ ழி ய ா ள் சேல னை ய வி . ழி யா ள்

க்ா க் ரி ம்ா க் ரி ஸ்ா ஸ் ரி நீ த ப | ரீ ஸ் ரி நீதப | ப த நி த ப ம கா || மரி-
பைங்கள பங்களி லங்க அணிந்தெழு சங்கணிகொங்கைவ ட ங் க ள் துலங்கிட

அதிமோகன வல்லிக்குக் குறமடந்தை சோலைமலை வளத்தையும் தன் குலவளமையும் கூறல்

விருத்தம்

கலையளித்துக் கோவியர்க வலை தணித்த மாலழகர்
கருணைபாடிச்
சிலை நிகர்த்த வடிவுடைய குறமடந்தை வருதல்கண்டு
தெசமுகன்பால்
விலை வளைத்த மாயவன் பால் மயல்விளைத்த அதிமோக
மின்னாளுன்றன்
மலை வளத்தை யுளமுவப்ப நிலைவரமாய் யெனக்கறிய
வழுத்தென்றாளே (37)

---

30. சிந்து—இராகம்—ஆனந்த பைரவி—திச்ரதாளம்

ஆவின்கன்றை மடிமிசைவைத் தாண்புலிதா லாட்டும்
அக்கன்றுக்குப் பெண்புலிவந்தன்புடன்பா லூட்டும்
காவிற்கிளி மாதவர் சொல் கலைகளெல்லாம் படிக்கும்
கார்வண்டு களிசை பாடக் கண்டு மயில் நடிக்கும்

மாவிளந்தே னெடுத்து மந்தி மாமுனிவர்க் களிக்கும்
மலர்ப்பனி நீர் சிற கிலள்ளி வரிக்குயில்கள் தெளிக்கும்
மாவலி சேர் பஞ்சவர் தூ தேவல் சென்ற மூர்த்தி
மாலழகர் வளர் சோலை மலையெங்கள் மலையே

2. வானைப்பிடி யென்று மதயானையெட்டிப் பிடிக்கும்
மாரியெனத் தெரிந்து கையால் நீர்பிழிந்து குடிக்கும்
ஏனம்புல்லை கசக்கிவழிமோனவர்க்குக் காட்டும்
எடுத்துடன் வால்கொடுத்துச் சிங்கம் அடுத்து வழி கூட்டும்
வேனலுக்குத் தகுந்தபடி சோனைமழை கொடுக்கும்
வீசுமலைப்படி யெனவே மாசுணங்கள் படுக்கும்
மானையன்று தொடர்ந்து சென்று வடிகணையால் முடித்த
மாலழகர் வளர்சோலை மலையெங்கள் மலையே.

3. மன்றலந்தேன் குன்றவர்கள் மனையில்வந்து பாயும்
மண்டுமடுக் கலையினிற்கற் கண்டுகளாய்த் தோயும்
அன்றெடுத்துத் தினைமாவோடொன்று கலந்திடுவோம்
ஆறுமுகவேலவர்க்கு நேரும் விருந் திடுவோம்
சென்றுபுலி நகமெடுத்து நன்றணிபோல் வனைவோம்
சிலந்திமுந்நூல் குரங்களிக்க அருந்தவர்க்குப் புனைவோம்
வன்திறல்சேர் அரக்கர்களை யன்றடர்த்த மூர்த்தி
மாலழகர் வளர்சோலை மலையெங்கள் மலையே.

4. முகபடாம்போ லுடுக்களெலா மிகவுமொளி துலங்கும்
முற்பிறையுங் கோடெனவே பொற்புடனின் றிலங்கும்
மிகுமுனிவர் பாகரைப்போ லகிலமெல்லாந் தோணும்
மேலரவ மணிப்ரபைகள் ஜூலெனவே காணும்
வகையுறும் மதமெனவே வரையருவி சொரியும்
வழுத்திடும்பேர் நாகமென்றே தழைத்தெவர்க்குந்தெரியும்
மகிதலத்தை யோரடியால் மாவலிக்காயளந்த
மாலழகர் வளர்சோலை மலையெங்கள் மலையே.

5. ஈசர்வளர் கயிலைகிரி யிமைய மெனுங் கிரியும்
ஏர் பெருகும் நீலகிரி யிடநிடத கிரியும்
வீசுதங்க மேருகிரி விரிமந்தர கிரியும்
வேங்கடமென்றுரைக்கு மொளிவிளங்கு சப்த கிரியும்
தேசுலவும் விந்த்யமலை திகழ்பொதிய மலையும்
சித்தர்வளர் சதுரமலை குற்றால மலையும்
ஆசுபெருங் கொல்லிமலை பேசுமலை யெல்லாம்
அழகர்மலைக் குள்ளடக்க மானமலை யம்மே

6. வரமிகுமா னுகந்தவெங்கள் வள்ளியை யன்புடனே
மாமணம் செய்திடும்பொழுது வள்ளிமலையுடனே
பரங்குன்றம் ஐயந்திமலை பழனியெனு மலையும்
பாமணஞ்சேர் சாமிமலைமா மயூரமலையும்
அரவநதிச்சோலைமலை யாகுமெங்கள் மலையும்
ஆறுமுக வேலவர்க்குச் சீர்கொடுத்தோ மம்மே
மருவுமெங்கள் குலத்துடைய வண்மைமிகு செம்மை
வரிசையுடன் பகருகிறேன் வகையுடன் கேளம்மே.

7. சாதியன்றி பெண்கள் கொடோம் சாதியன்றிக் கொள்ளோம்
சரியுறவு பிடித்தவரை யொருபொழுதுந் தள்ளோம்
போதகத்தின் முத்துடனே சாதிமுத்துங் கோர்ப்போம்
பொறுக்கிவரும் முத்தையெல்லாம் உறிக்கலயஞ் சேர்ப்போம்
காதுகுத்திப் பெண்களுக்கு கலனணியச் செய்வோம்
கஞ்சமுள்தாள் நூலெடுத்து மிஞ்சுதுகில் நெய்வோம்
மாதவனைப் பரவியவன் மருகனையும் பணிவோம்
வளஞ்சிறந்த வெங்கள் குலம் தளஞ்சிறந்த தம்மே.

மேளம் 20

ஆனந்தபைரவி - திச்ரம்

பல்லவி

பா ப ப் ப ம | ம ம க* ப ம க ரி | க ம ப ம ப ம | க ரி கா ; ||
ஆ வி ன் க ன்றை ம டி மி சை வைத் தாண் பு லி தா லா ட் டும்

பா ப ம ம க | ம க ரி ஸ நீ | ஸா ப ம க ரி | ஸா ஸா ; ||
அக் கன் றுக்கு ப் பெண் பு லி வந் தன் பு ட ன் பா லூட்டும்

ப நி ப ப பா | பா ஸ் நி ஸ்ா | ஸ் ஸ் ம் க் ரீ | ஸ் நி ஸ்ா ; ||
அா வி ற் கி ளி மா த வர்சொல் க லை க ளெல்லாம் ப டிக் கும்

பா ஸ் ஸ் ரி ஸ் | நி த நி ப ப ம | கா ம ப ப ம | க ரி கா ; ||
கார் வண்டு க ள் இ சை பா ட கண் டு ம யி ல் ந டிக் கும்

மற்ற சரணங்களும் அதேபோல்

இதுவும் குலவளமை

கொச்சகக்கலிப்பா

நம்பனிடம் பார்த்தனுக்கு நன்குவரங் கொண்டளித்த
அம்பனைய மேனியழகர் திருமால் வரையில்
வம்பனைய கொங்கைகுற வஞ்சியப ரஞ்சியெனும்
கொம்பனைய நங்கை குலவளமை சொல்வாயே. (38)

---

31. கீர்த்தனம் **இராகம்—பிலகரி—ரூபகதாளம்**

பல்லவி

எங்கள் சாரியொன்றே செம்மை -சொன்னுலுனக் கேற்குமம்மே

அநுபல்லவி

லெங்கையரக்கனை வாட்டி - வீடணற்கு முடிசூட்டித்
தங்குமழகர்தம் நாட்டில் தழைத்தருளுஞ் சீமாட்டி **எங்கள்**

சரணங்கள்

1. மொய்குழல் வள்ளிசம்பந்தஞ் செய்ததால் முருகன் சொந்தம்
மெய்முறைமையாலே தொந்தம் விடாதரழகனுபந்தம்

2. மலைக்கொம்புத் தேனெடுப்போம்-வானவர்க்குங்கொடுப்போம்
குலச்சங்கணி தொடுப்போம் குறித்தவற்கலை யுடுப்போம்.

3. பொருகரியைத் தடுப்போம் - புலிவாய்க் கட்டி விடுப்போம்
மருவக் குகையடுப்போம் - மலர் விரித்துப் படுப்போம்

4. வைத்தகுறிதப்பா தெய்வோம்-வளர்தினைக் கதிர்கொய்வோம்
சித்தர்க்கும் விருந்து செய்வோம் - செங்கணை
வாழ்த்தி உய்வோம் (எங்கள்)

அதிமோகன வல்லிக்குக் குறமடந்தை சோலை மலை மூர்த்தி, தலம், தீர்த்த விசேடங்கள் கூறல்

விருத்தம்

ஆர்த்த மரிற் குவியிரத மிருத்தி விஜயனைக் காத்த
அழகர் வெற்பின்
சீர்த்தி பெற்ற குறக் கொடியுன் குலவளமை யுணர்ந்துவகை
சிறந்தேன் கங்கா
தீர்த்த மந்த வரையினுற்ற காரணமு மதன் பலனுந்
திருவைகுந்த
மூர்த்தியங்கு திரு உருவா வந்துதித்த வகையும் நன்றாய்
மொழி யென்றாளே (39)

இதுவுமது-விருத்தம்

தாதிலங்கு சோலை மலைத் தலத்தின் முசு குந்தன் பூ
சனைசெய் தேத்த
ஆதியுகத் தாலினன்ன வனுக்கருளி யடுத்த யுகத்
தரசிற் கஞ்சன்

கோதில் பூ சனைக் கருளித்துவா பரத்திந் திரன் மலர்கைக்
கொடுபராவச்
சோதி மரத் தமர்ந்தருளு மாதி மறைப் பொருண் மகிமை
சொல்லக் கேண்மோ.

நிலை மண்டில ஆசிரியப்பா.

சீர்மறை புகலுமீரே ழுலகும்
பேரெழில் சிறந்த பிறங்கெழு கடலுங்
கோதிலாச்சப்த குல பருவதமுஞ்
சோதியாயிர முடி தோய்ந்த பொற் கிரியுஞ்
சதுர் முகன் முதலாஞ் சகல தேவரையும்
விதி நவக்கிரகம் விண்ணுடுக் களையும்
மானிடர் முதலேழ் வகைப் பிறப்பினையுந்
தானெனு மண்ட சராசர மெவையும்
முறை முறை படைத்து முத்தொழில் நடத்தும்
விறன் மிகுபைந்துழாய் வேய்ந்த மாலழகர்
வளர் சோலை மலையின் மகத்து வங்களையும்
தெளிவு நீரருவித் தீர்த்தமா மகிமையும்
திகழுர கற்கும் செப்புத லரிதாம்
வனிதையே அடியாள் வழுத்தவும் வசமோ
வழிமுறை மலரோன் மரபினில் வந்த

மொழி மறை தேர்ந்த முனிவரெல்லோருஞ்
சூதனை வணங்கித் தோத்திரம் புரிந்தாங்
கேதமி லிடபாத்திரி மகத்து வத்தைப்
போத வெங்கட்குப் புகல்வா யெனலும்
மாதவனந் நாள் வழுத்திய கதையின்
அத்யாயந் தசமா மதனில் யான் சிறிது
தத்தையே மொழிவேன் தயை செய்து கேண்மோ
தரும தேவதை முன் தவம் புரிவாய்மையால்
திரு நாம மிடபாத் திரியெனப்பு கல்வார்
தடமிசையாவருஞ் சஞ்சரிக்காமையால்
வடிவு சேர்சிங்க மலையெனப் பகர்வார்
கேசரி தினம் பூஜித்த கீர்த்தியினுற்
கேசரி மலையெனக் கிளற்றுவரெவரும்
வாசவனிரவில் வந்து போற்றிடலால்
வாசவுத்யான மலையெனப் பகர்வார்
இந்நலங் கொண்ட வெழில் சோலை மலையில்
பன்னக சயனப் பரமமா லழகர்
வந்தவாறுரைப் பேன் மங்கையே கேள்முன்
செந்திருவுடனே சேடதற் பத்தில்
பண்டு பாற் கடலிற் படைவிழிதுயிலுங்

கொண்டல் சேர்வண்ணன் குவலயந்தழைப்ப
மதி முக மலர்ந்தம் மாமலையதனில்
விதிவட வால விர்க்ஷத்தினடியில்
சுந்தர மாகத் துலங்கிடும் அந்நாட்
சிந்தை யுள்ளுருகித் திருவடி தொழுதே
திடமிகு தரும தேவதை பூஜித்
திடபரூப ங்கொண் டினிதுடனிருப்ப
இந்திர நீல மிலங்கிய மேனியுஞ்
சுந்தரமிகுந்த சந்திரவதனமுந்
தருபாஞ்ச சன்யஞ் சங்கு சக்கிரமும்
மருவிய கரமும் வளர்ச்சிலைப் புருவமும்
பவளமாமணியும் பசுமணிக் குழையும்
நவமணி பதித்த ரத்நகே யூரமுஞ்
ஸ்ரீவத்ஸ கவுஸ்துபந் திகழ்மணி மார்பில்
மேவுமுந்நூலும் விளங்குபற் பணியும்
அன்பர்பாற் கருணை யருள் திருவிழியும்
இன்பமா மதுரத் தினிதுறு மொழியும்
கோலமா முடியும் குலவியே யிலங்கச்
சீலமாவழகர் சேவை தந்தருள
அதிசயங் கேண்முன் னமரர்களெல்லாங்

கதிபெற விண்ணின் கங்கையை யழைத்துச்
சுமுகனுமெங்கள் சுந்தரராஜர்
சமுகமதடைந்து தனிமறை மொழிந்தே
யம்புய பதத்தினபி ஷேகஞ் செய்யச்
செம்பொனூ புரத்திற் செய ஸ்தம்பம் போல
விண்ணினின் றழகாய் விளங்கிய கங்கை
கண்ணனூர் மலையிற் கருதியே யுகந்த
திவ்வளங் கொண்ட வெழில் சிலம்பாற்றில்
திவ்யமாம் ஸ்நாநஞ் செய்தின முரைப்பேன்
மங்களவாரம் வளர்துலாமாசம்
பொங்குத்வா தேசிபொரு முபராகம்
இத்தினங்களிலே யிந்நதி மூழ்குவோர்
கர்த்தர்மா லழகர் கரு தருட்டுணையால்
இம்மையிற் சகல இன்பமும் எய்தி
அம்மைநன் னலனும் அடைந்திடுவாரே.

இதுவுமது விருத்தம்

துங்கமாலழகர் மேவுஞ் சோலையுத் யானசைலக்
கங்கை நீரருவி வண்மை காதினிற் கேட்கக் கேட்க
இங்கினித் தெவிட்டாதின்ன மெழில்குறப் பாவாயுன்றன்
செங்கனி வாய் திறந்து தெளிவுறத் தெரிவிப்பாயே.

———

32. கீர்த்தனம்—இராகம் ஆனந்த பைரவி—
தாளம் கண்டஜாதி திரிபுடை

பல்லவி

தீர்த்த மகிமையைக் கேளம்மே மனப்
பூர்த்தியாய் உவந்தென்னை யாளம்மே

அநுபல்லவி

பார்த்தன் படிந்துசுபத் திரைமின்னாள் தனைச் செங்கைப்
பாணிக்ரஹணஞ் செய்து பலனடைந்தனன் கங்கை

சரணங்கள்

1. மூவர்கள் முதலான தேவர்க்கு மங்கே நாட்டம்
முனிவர் முதலாம் பக்த ரனைவர்க்குமிகு தேட்டம்
தாவுபுகழுலகில் பாவமாம் பெருங்கூட்டம்
தலையருவியைக் கண்டால் விலகியெடுக்கு மோட்டம் (தீர்)

2. தொந்தமாகியப்ரதி பந்தங்களையும் போக்கும்
துஷ்டக்ரகமாம் பவத்துன்பமனைத்தும் நீக்கும்
சிந்தை சேர் மலடிக்குஞ் சந்ததியை யுண்டாக்கும்
தெரிந்தந்த மகிமையை உரைக்கக்கூடுமோயார்க்கும் (தீர்)

3. குருடன் கனியைக் காட்டக் கூனன் நிமிர்ந்து பார்க்கக்
குறை சேரங்கன் கால்கூடி மரமீதேறி நின்றார்க்கத்
தரந்தோணு வூமையும் வாய் திறந்தெனக் கென்றுகேட்க
ஸ்நாநஞ் செய்பலனிவ்வா றனதுன்மன மேற்கத் (தீர்)

4. பாரிலுயர்ந்த பெரி யோர் மகிழ்வுறக் கலை
பகருங் கவிகுஞ்சரம் பரிவுற்றிறைஞ்சுஞ்சிலை
மாரளயனைப் பெற்றுச் சீருகந்த கமலை
மருவுந் திருவழகர்க்குரிய தென்சோலை மலைத் (தீர்)

மேளம் 20

ஆனந்த பைரவி—கண்ட திரிபுடை

பல்லவி

பா நி ப ப ம க ரி ஸ ṇி ஸ ம | க ரி ரி க | ஸா ப ம ||
தீர் . . ர்த்த ம கிமையை கே ளம் மே . . மன ப்

ப ா ப ṙி ஸ் ா , ஸ் நி த* ப | , த ப ம | க ரி க ம ||
பூ . ர்த்தியாய் உ வந் தெ னே ஆ . . ள ம் மே

அனுபல்லவி

ப ா ப ம ப ஸ் ஸ் ஸ் ஸ் ம் | க் ṙி ஸ் ஸ் | த* நி* ஸ் ஸ் ||
பார் த்தன் ப டிந் து சு ப . த்திரை மின்னுள் தனெசெ ங் கை

ப ா , ṙி ஸ் ஸ் நி* த* ப ப | க ம ப ம | க ரி க ம ||
ப ா ணி க் ர கணம்செய் து ப ல ன டை ந்த னன் கங் கை

(தீர்த்த)

சரணம்

ப் நி ப் ம க ரி க ம ப நி | ப ம க ரி | ஸ நி ஸ ா ||
மூ . வர்கள் மு த லா ன தே வர்க்கும் அங்கே நா . ட்டம்

ஸ க ரி க ம ம ம ம ம நி | ப ம க ரி | க ம ப ா ||
மு னி வர் மு த லாம் பக் தர் அ னை வர்க்கும் மி கு தே ட் டம்

ப ா ம ப ஸ் ஸ் நி ஸ் ஸ் ம் | க் ரி ஸ் நி* | த* நி* ஸா ||
த ா வு பு க ழு ல கி ல் பா வமாம்.பெருங் கூ ட் டம்

ப ப ஸ் ஸ் நி* ப ப க ம | ப ம க ரி | க ம ப ா ||
த லை ய ரு வியைக்கண்டால் வி ல கி எடுக் கு ம் ஓ ட் டம்
(தீர்த்த)

மற்ற சரணங்களும் அதே போல்

குறத்தி நாட்டுவளங் கூறல்

விருத்தம்

பொன்னுவனுட்டவர் வணங்கும்பு யலழகர் மலையருவிப்
புதுமையெல்லாஞ்
சொன்னவனுட்டுயர் நீங்குமென்பதுநின் வாய்மொழியால்
துலங்கிற்றம்மா
அன்னவனுட் டங்களின்றியகிலமிசை யாட்டமுண்டோ
வறவோர் வாழ்த்துந்
தென்னவனுட்டுயர் வளத்தைப் பன்னக நாட்டரசுவப்பச்
செப்புவாயே

திபதை - இராகம் - யதுகுலகாம்போதி - சாப்புதாளம்

1. காருலாவிய சோலைக்குயிலினங் காமவேள் வருவானெக்கூவச்
சீருலாவிய மங்கையரெங்கிருந் சிற்றில் கட்டி நின்றின்
புற்றுலாவ
ஈரமாமதிவெண்குடை நீட்ட ஏர்பரிக்கிள்ளை நேர் மொழி
காட்டத்
தேரிலேறி வசந்தன் மகோஸ் தவஞ்செய்யும் பாண்டி நன்னு
டெங்கள் நாடே

2. வஞ்சியர்குழற் கஞ்சித்திரைபுக்கி வாரி நீருண்டு காரிக்கறுத்து
விஞ்சி வன்னமுலேக்கு நிகரெனவெற்படைந்து நுதற்சிலே பூண்டு
கஞ்சநூலிடையாமென மின்னியே கண்ணழகர் அருட் கிணையாக
மஞ்சினங்கள் பொழிந்து முச்செந்நெல் வளர்க்கும் பாண்டி நன்னுடெங்கள் நாடே

3. மாதர்சொற்கிணை யோவென்றிளைஞர் மதித்துப்பூவிற் பதித் திட்டகன்னல்
கோதிலாப்பயிர் கொண்டு தழைத்தந்தர் கோதையர் பசுந் தோட்கிணையாகிக்
காதலீயர்தம் மூரலே வென்றுடன் காமுகர் மனந்தன்னேயும் வெல்லச்
சீதமாமதன் செங்கைவில்லாகிய தென்னன் பாண்டி நன்னு டெங்கள் நாடே

4. வையைநீர்வளம் பொங்கியநாடு மதுரைமாத்தலங் தங்கிய நாடு
பொய்யகற்றிமெய் யோதிடுநாடு பூமிமுப்பல மோதிடுநோடு
வையகர்வியப் பெய்திடுநாடு மாதமும்மாரி பெய்திடுநாடு
தெய்வம் மெய்யொடு தங்கிவளம்பெறு தென்னன் பாண்டி நன்னுடெங்கள் நாடே

5. கற்கக்காண்பது சொற்கலை ஞானம்கற்றிடாதது பொய்கர
வீனம்
விற்கக் காண்பது வாணிபர் செங்கை விலையிலாதது மிக்கவர்
நட்பு
நிற்கக்காண்ப தறஞ்செய்யும் செல்வம் நிலையிலர்தது கஞ்சத்து
வெள்ளம்
பொற்கைகோதண்ட மாலழகேசர் புரக்கும் பாண்டிநன்னு
டெங்கள் நாடே

6. கட்டக்காண்பது நெற்கதிர்க்கற்றை கவிழக்காண்பது வீரர்
கைவில்லு
வெட்டக்காண்பது முத்தக்கரும்பு வெருட்டக்காண்பது
மங்கையர் செங்கண்
கொட்டக்காண்பது பேரிகைமேளங் குமுறக்காண்பது விண்
ணிடை மேகம்
தட்டக்காண்ப துருக்குங்கனகந் தனஞ்சிறந்ததென்பாண்டி
நன்னுடே

7. மாங்கனிகள் வருக்கையில் தூங்கும் வளருமக்கனி வாழையில்
தூங்கும்
ஓங்குமக்கனி கன்னலிற்சாயு மொடிந்து கன்னலுஞ்
செந்நெலிற்சாயும்

பாங்குசெந்நெலு மஞ்சளைச் சாய்த்திடப் பங்கயந்தனிற்
சங்குதிர் முத்தைத்
தாங்கிமாத ரிலைக்கு விருந்திடுதண்பணை திகழ்பாண்டி
நன்னாடே

8. மாதுளங்கனி யைக்கரத்திற்கொடு மந்திக்கூட்டங்கள்
பந்தடித்தாடும்
பேதைவண்டுகள் பண்ணிசை கூறிடப் பேடைமாமயில்
நாடகமாடும்
கோதிலாத புளினங்கள்தோறுங் குலாவியன்னங்க ளின்றுயில்
கூரும்
சீதமாமதி தங்கியசோலை செறிந்த பாண்டி நன்னாடெங்கள்
நாடே

குறமின் தன் குறிவல்லமை கூறல்

விருத்தம்

படியளந் தகிலம் காக்கும் பரமமாலழகர் வெற்பிற்
கொடியிடை துலங்க வாழுங் குறவஞ்சிப் பாவாய் நீமுன்
வடிவுசேர் வேந்தர்க்கெல்லாம் வழுத்திய குறியின் வாய்மைத்
துடிமையை யெனக்கு நன்றாய்த் தோற்றிட வுரைசெய்வாயே (44

34. கீர்த்தனம் இராகம்—பைரவி—ரூபகதாளம்

பல்லவி

அம்மையென்குறித் திறமை கேளடி அதிமோகனவல்லி
(அம்மை)

அநுபல்லவி

இம்மகிதலங்கள் முழுவதும்
என்னுடைய கைவசங்கள் செய்துள்
ளிணக்கி மன்னர்கள் பிணக்கெலாந் தீர்த்து
வணக்கங்கொண்டிட மணக்கோலஞ் செய்வேன் (அம்மை)

சரணங்கள்

1. கல்லினும் நாருரிப்பேன் - மணலையுங்
கயிறெனத் திரிப்பேன் நல்ல
வல்லமையாயங்கை நெல்லிக் கனியெனச்
சொல்லுங் குறிகொண்டு வெல்லுவேன் பாரடி (அம்மை)

2. கூட்டுறவைப் பிரிப்பேன் பிரிந்ததைக்
கூடவுஞ் செய்துவைப்பேன் இன்னம்
சாட்டையின்றிப் பல மேட்டியாய்ப் பம்பரம்
ஆட்டி ஜயஸ்தம்பம் நாட்டிக் கொள்வேனடி (அம்மை)

3. அகத்தினிலிருப்பன் பதினெட்
டாம்படிக்கருப்பன் குறி
முகத்தெய்வமென்றன் முகத்திலென்றுஞ்சு
முகத்தோடிலங்கும் மகத்வம் பாரடி (அம்மை)

பைரவி—ரூபகம்

பல்லவி

ரீ ;	நீ ஸா ; ; ‖	ரீ ஸ்ா	; நீ தா மா ‖
அம்	மைஎன்	கு றித்	தி ற மை
பா க்ா	ரீ ஸ்ா பா தா* ‖	ரி ஸ் நி த	பா - ம ப ம க ரி ஸ ‖
கே .	ள டி அ தி	மோ. க	ன வல் லி

அனுபல்லவி

பா ;	ம ப ம த ப த ப ம ‖	கா ரீ	ரீ நீ ஸா ஸா ‖
இம்	ம . கி . த . ல ங்	. கள்	மு மு வ தும்
ஸா கா	ரீ கா மா ; ‖	மா மா	மா - தா பா : ‖
என் னு	டைய கை	வ சங்	கள் செய் துள்
தா நீ	ஸ்ா ரீ க்ா ரீ ‖	நீ நீ	நீ ஸ்ா ஸ் நி த நி ‖
இ ண	க்கி மன்னர் கள்	பி ணக்	கெல்லாந்தீர் . . த்
ஸ்ா ;	; ; ; ; ‖		
து			
		நீ நி ரி	ஸ் ·நி தா நீ ஸ்ா ‖
		பி ண க்	கெல்லா ந் தீர் த்து
நீ க்ா	ரீ - ஸ் நி தா பா ‖	மா ம நி	தா பா - ம க ரி ஸ ‖
வ ணக்	கங் கொண் டி ட	ம ண	க்கோலம் செய் வே ன்

மற்ற சரணங்களும் அதே போல்

மோகனவல்லி குறத்தியைத் தனக்கும் குறியுரைக்கும்படி கேட்க அதற்கவளிசைந்து கூறல்

விருத்தம்

குனிக்குமுயர் கோதண்டந் தொடுகணையா லுரமழிந்து கொடிய போரிற்
றனிக்கு மடலரக்கனைச் சென்றமர்க்குவர நாளையெனச் சாற்றுஞ்செய்ய
பனிக்குவளைப் புயலழகர் மலைவளருங்குற வஞ்சிப் பாவையே செங்
கனிக்குவமைத் திருவாயா லெனக்குமொரு தனிக்குறிநீ கழறுவாயே (45)

---

35. திபதை - இராகம் - ஆரபி - சாபுதாளம்

1. தனிக்குறியுறைக்கிறே னினித் திறங்கேளடியம்மே—இதில்
தப்பிதங்களிருந்தால் தப்பாமல் தள்ளிப் போடென்னம்மே
மனக்கபடா யெண்ணுதே உனக்கொன்றுங் குறைவில்லை யம்மே—அணு
மாத்ரங்குறிதப்பினுல் மாற்றியென்பேரழைப்பாயம்மே

2. வாக்குரை கொண்டவர்க்குத் தாக்கியே தேனுமுண்டோ
அம்மே
சகலபுவனஞ்சென்று மிகுபுகழ் பெற்றுவந்தேனம்மே—இது
சாலவெனக்காயிரங் காலரைக்கால் மாகாணியம்மே

3. சோலைமலைத் தெய்வமென் மேற்குடிகொண் டிருக்கு
தம்மே— நான்
தொட்டகுறித் தெய்வம் அபீட்டபலன் கொடுக்குமம்மே
ஏலும்பசியடங்கப் பாலுங் கஞ்சியும் வாராயம்மே - இப்போ
தித்தினை பாக்குப்போ யிலைவெற்றிலையுந் தாராயம்மே

4. ஜகமீதிலுன்றனைப்போல் மிகயோக சாலியாரென்னம்மே
—இதோ
தேட்ட மோடாந்தைகிளை கூட்டுதருகிற் பாரென்னம்மே
சுகமாய்ப் பல்லி நிமித்தம் வகையுடன் சொல்லுது
பாரம்மே—நெற்றிச்
சுழிமுனைமீதிற்சரம் பழுதில்லாதோடுது பாரம்மே.

———

குறத்தி குறி சொல்வதன் முன் செய்ய வேண்டிய முறைகளைச் செய்யச் சொல்லல்

கலிப்பா

கத்தாவென் றோராவே காலியைத்தன் கையுகிரால்
அத்தாய மாய்த்தலைகொய் தாங்கவனைமாய்த் தருளீ
முத்தார மோடிலகு மூர்த்திதிரு மாலருளால்
வித்தார மான குறி விண்டிடுவாய் வஞ்சிமின்னே (46)

---

36. திபதை - **நாதநாமக்கிரியை - அடதாளம்**

பார்மெழுகிக் கோலந் தீட்டுவாயே கண
பதியைப் பிடித்து வைப்பாய் நீயே
சீரரறுகு மலர் சாத்துவாயே முன்னம்
தேங்காயுடைத்து வைப்பாய் நீயே
நிறை நாழியால் முத்தளப்பாயே—குறி
நேர்ந்திடத் தச்சணை வைப்பாய் நீயே
முறை மனுவால் துதி செய்வாயே ஆதி
மூர்த்தியை மனத்துள் வைப்பாய் நீயே

பாக்கிலை சூடன் கொடுப்பாயே முப்
பழமும் குளமும் வைப்பாய் நீயே
சீக்கிரந் தூபமும் கொடுப்பாயே மலைத்
தெய்வத்தை வேண்டிக் கொள்வாய் நீயே

குறத்தி மோகினியின் கரத்தைக் காட்டச் சொல்லல்

கட்டளைக் கலித்துறை

கார்காட்டுஞ் சோலைத் திருமா லழகர் கனக வெற்பிற்
கூர்காட்டும் வேல்விழி வல்லியுன் பால்மணக் கோலமுக
நேர்காட் டுதுதிசை நீள்பலன் காட்டுது நின்கமலச்
சீர்காட்டுஞ் செங்கரங்காட்டாய் மணக்குறி செப்புதற்கே(47

---

37. திபதை—இராகம்—எதுகுலகாம்போதி—ஆதிதாளம்

1. *அங்குலியமிட்ட கரங் காட்டுவா யம்மே - கணை*
யாழி மோதிரமிட்டகை காட்டுவா யம்மே
செங்காந்தள் மலர்க்கரம் காட்டுவாயம்மே - வர்ணச்
சித்திரச் சூடகக் கரங் காட்டுவாயம்மே

2. தங்க நெளியிட்ட கரங்காட்டுவா யம்மே - ரத்னச்
சரிகடய மிட்டகரங் காட்டுவாயம்மே
சங்கரேகை கண்டேனடி மோகினியம்மே - கையில்
தான்ய ரேகை கண்டேனடி மோகினியம்மே

3. பொங்கு தனரேகை கண்டேன் பாரடியம்மே - நல்ல
புத்திர ரேகையுங் கண்டேன் பாரடியம்மே
சங்கரேகை கண்டபலன் பேணிப்பாரம்மே - உடன்
சட்டமாகக் கையிற் பலன் காணுவாயம்மே

குறத்தி மலைத் தெய்வங்களை வேண்டல்

விருத்தம்

செங்கரம் பார்த்தேன் உன்றன் சித்தத்தை மருளச்செய்த
புங்கவ னின்னுனென்று புலப்படவுரைப்பேன் கண்டாய்
மங்கையர்க்கரசி யென்றன் வாக்குரை தவறுதென்று
நங்குற வஞ்சி தெய்வ நாமத்தை வேண்டுவாளே (48)

---

38. திபதை - இராகம் - அரிகாம்போதி - ரூபகதாளம்

1. வாலையருள் திருமகனே
வல்லபைக்கினிய சுகனேநல்
வரமருள்வாய் மத கரிமுகனே
சோலைமலை மான்மருக
சுமுகமோ டென்பால் வருக எங்கள்
துங்க வடிவேன் முருக

2. கோலவள்ளி நாயகியே
கோதில் சவுந்தரமுகியே தெய்வ
குஞ்சரியே பக்த தாயகியே
ஆலமுண்ட கந்தரனே
அன்பர்கள் சுதந்தரனேமீ
னாக்ஷியம்மை மேவு சுந்தரனே

3. அஞ்சனையாள் பெற்றமைந்தா
அஞ்சலென்றுன் னருள்வரந்தாபுகழ்
அடல்சிறந்த வீர ஹனுமந்தா

மிஞ்சகில பரி பாலா
வேண்டினவர்க்கனு கூலா அருள்
வீரபத்ரா அகோரருத்ரா

4. பரிவுடனென்பால் பொறுப்பாய்
பகர்ந்தருள்செய்வா யென்னப்பா மலைப்
பதினெட்டாம்படிக் கறுப்பா
குறுமதுரை வீரண்ணனே
கோமளப்பவள வண்ணனே மொட்டைக்
கோபுரத்து மா முனியண்ணனே

5. ஐயம்பிடாரி யம்மா
அன்புடையங் காளியம்மா - மக
மாயிமுத்து மாரியம்மா
கையிற்பலன்றரு மம்மா
கருணைக்கண்பாரு மம்மா ஒன்பான்
கம்பளத்து ஸக்கதேவியம்மா.

மேளம் **28** **அரிகாம்போதி—ரூபகம்**

ப ஸ் நி த ப் ப | ப ம பா த நி த நி || ப நி ப ம க ஸ | ரி க மா-ரீ க ஸ ||
வா லை ய ரு ள்திரு ம க னே . . வல்ல பைக்கி னி ய சு க னே-ந ல்

ரி ரி க* ம ப த* பா | ப ம க ரி நி̣ நி̣ || ஸ ம க* ரி ஸா ||
வ ர ம ரு ள் வா ய் ம த க ரி மு க னே

மற்ற அடிகளும் அதேபோல்

அதிமோகினியின் தாயார் குறத்தியை வினவுதல்

பேய்பிடித்த தலைக்கிறுக்கோ பில்லியோ சூனியமோ
பிறவோவென்றன்
சேய்பிடித்த பிடிசோறு தின்னுமற் கிடந்துமனந்
தியங்கலேனே
வேய்பிடித்த நின்சாமி நிசச்சாமி யாகிலுண்மை
விளங்க இன்ன
நோய்பிடித்த தெனவுமதற் குபசாந்தியினதெனவு
நுவலுவாயே. (49)

குறத்தி தன் தெய்வங்களை வினவுதல்

ஆசிரியப்பா

1. *மானிட ஜீவனில் மங்கையோ புருடனே*
தான்யமோ தனமோ தமனியக் கலனே

2. *மாடாடு பக்ஷியோ மருந்திடுங் குறியோ*
மேடையோ கோயிலோ மெத்தையோ திண்ணையோ

3. மங்கையா ளொருவன்மேல் மயக்கமுற்றதுவோ
நங்கைமீ தெவரும்நாட்டமுற் றதுவோ

4. கொடியகண் ணேரே குற்றமற்றெதுவோ
தொடிவளை சிதறிச் சோபமுற்றதுவோ

5. காமநோய்த் தங்கலோ கருதிடும் சங்கையோ
பூமியிலுள்ளதோர் பொருளிலெவ் வகையோ

6. ஏந்திழைக் கமைந்த தீதெனத்தெரிய
வாய்ந்தநற் குறியினை வகையுடன் புகல்வீர் (50)

குறத்தி குறி சொல்லத் தொடங்கல்

விருத்தம்

எடுத்துடு கடிக்கு முன்னே யீதயமுற் றருளாவேசங்
கொடுக்குது நலமுண்டென்று குறிமுகத் தெய்வம்வந்து
முடுக்குது சொல்லென்றென்னை மோகினித்தாயே யிங்கு
தொடுத்து நீ நினைத்தவெல்லாஞ் சுருக்கினில் உரைப்பேன்
கண்டாய் (51)

38. கீர்த்தனம்நிபதை—இராகம் யதுகுலகாம்போதி—ஏகதாளம்

1. முக்கியமாயிக் குறியைக் கேளடியம்மே - ராஜ
மோகினியுனக்கு நல்ல நாளடியம்மே இன்று
தொக்கிலுனக் கதிட்டமுண்டாகு தென்னம்மே உனைச்
சூழ்ந்தவர் கலிகளெல்லாம் போகுதென்னம்மே.

2. மூவரும் துதிக்கப்பெற்ற மூலகாரணன் திரு
மூர்த்தியாய் விளங்குகின்ற கீர்த்திபூரணன் மலர்ப்
பூவையை மார்பினில்வைத்த புண்யதாயகன் முன்பு
பூவுலகளந்த ஆதி தேவநாயகன்

3. நீலநிறங் கொண்டகோல மாமணிவண்ணன் கையில்
நேமிசங்கணிந்தசெழுந் தாமரைக் கண்ணன் நல்ல
சீலமிகுஞ் சிவகங்கை மாமறுகிலேதேரில்
திருப்பவனி வந்ததாகக் காணுதென்னம்மே.

மேளம் 28 **யதுகுலகாம்போதி—ஏகம்**

ஸ ஸ ஸ ஸ | ரி ம ப த | தா , ஸ் த ப | பா ம ம
முக் கி ய மாய் . இக்கு றி யைக் | கே ள டி யம் | மே ரா ஜ

பா , த ஸ் த | த ப ப ம ம க க ரி | —ரீ , க ரி ஸ | ஸா ;
மோ கி ணி யு | ன க் கு ந ல் ல | நா ள டி யம் | மே

மற்றவையும் அதேபோல்

மோகினி வினவுதல்

இராகம்— அமீர்கல்யாணி—ரூபகதாளம்

1. பூட்டகஞ்செய்கிருய்மலேக் காட்டுமறத்தி இந்தப்
புத்தியெங்கே கற்ருயடி சித்ரக்குறத்திபயில்
காட்டிமறைத் துக்குறியை மேட்டிமையாக என்றன்
கருத்தைச்சோ திக்கின்ருயோ திருத்தமதாக

2. கனத்துவர் காயாம்பு வண்ணன் காக்ஷியைக் கண்டால்
காச்சல்மயக் கமும்பெரு மூச்சுமுண்டோடிகலத்
தனத்துடன்றேன் பாலுங்கசப் பானதென்னடி நன்ருய்
ஆய்ந்துகுறி குணத்தைக் கண்டோர்ந்து சொல்லடி.

குறத்தி சொல்லுதல்

1. கன்னியருடனே கூடிப் பந்தடிக்கையில் நீ
கண்டுப்யந்ததாய் தோணு துண்டோயில்லையோ நேரில்
கண்ணக்காரக் கள்ளனேப்போ லுன்னைமயக்கிமிகக்
காதலே விளேத்தானடி பேதைமயிலே

2. பைந்துளவம் பூண்டஅதி சுந்தரமுள்ளோன்தனை
பார்த்தவுடன் மையல்வந்து பூத்ததென்னம்மே நீ
சிந்தைமாமயக்கங் கொண்டு நொந்ததுமுண்டு வீசுந்
தென்றலுக்குப் பயந்துள் மெலிந்ததுமுண்டு

3. காமப்பேயல்லாது மறு பேயல்லவம்மே கடும்
காச்சலத ஞலேவந்த காச்சல்தானம்மே உண்மை
ஆம்இதை விடுத்துசொல்ல அஞ்சினேனம்மே அன்ன
வருவருப் பதஞல்வந்த அருவருப்பம்மே.

மோகினி வினவுதல்

1. வழக்குக்கோ வந்தாய்குறி வழுத்தவோ வந்தாய் ஏ-
மாற்றியென்ற னையம்பலத்தேற்றவோ வந்தாய்
உழக்குக்குள் கிழக்குமேற்குக் காட்டியேய்க்கின்ருய் இனி
யுற்றதுசொன் ஞலற்றது பொருதுமே நன்ருய்

2. வாய்புளித்த தோமாங் காய்புளித்ததோ வென
மட்டுமரியாதையின்றி விட்டுச்சொல்கிருய் தன்

தாயுடன் பிறந்தசொந்த மாமன்றனக்கு குலம்
சாற்றுவது போலெனேயே மாற்றுருய் நன்ருய்

3. கன்னி கழியாதசிறு பெண்ணெனக் கண்டேபரும்
காமப்பேய் பிடித்ததென்று வாய்மதங் கொண்டேமுன்
என்னவார்த்தை சொல்லவந்தாய் சின்னக்குறத்தியவ
னிருக்குந்தலமும் பேருமு ரைப்பாயோடி

குறத்தி சொல்லுதல்

1: நீயறிந்தால் போலவனே நானறிந்த துண்டோஅந்த
நிலேவர மறிந்துசொல்வோ ருலகினுமுண்டோ நல்ல
தாயினு முனக்குவேண்டிச் சொல்கிறேனம்மே பாடி
ஆயர்வீட்டில் வெண்ணேயுண்ட மாயன்ருனம்மே.

2. செங்கண்மா லழகனவன் பேரென்ன லுங்குனிந்தே
சித்திரம்போல் வெட்கமுற்றவள் நிற்கமகிழ்ந்தேவஞ்சி
கண்குளிர மாயவன்புயஞ் சேருவாயென்ருள் சின்னக்
கைக்குழந்தை யோஉனக்கு வெட்கமே னென்ருள்.

குறத்தி மோகினிக்கு கண்ணன் வரவு கூறல்

40. கீர்த்தனம் **இராகம் ஸகாஜ—சாபு தாளம்**

பல்லவி

வந்துசேருவார் மானே—இனியொன்றுக்கும்
மலையாதே நீதானே

அனுபல்லவி

சுந்தன்மாமஞகிய சுந்தரராஜ னென்னும்
கங்கைமலைவளர் துங்கவழகர் சு
கங்கள்த ரவே இணங்கி யுனிடத்தில்

சரணங்கள்

1. குருமொழியென நெஞ்சிற் கருதுவாயென்றன் சொல்லைக்
கூறிகுணங் கண்டேனுனக் கொருபோதுங் குறைவில்லை
வரவுபலன் சொலிக் கெவுளி படிக்கிது
வாமபாகத்தில் தோளுந் துடிக்கிது
வரிசங்க நாதமு மணியுமடிக்கிது
மருவமகிழ்வுடனிரவி லுனதிடம் (வந்து

2. வில்மதன்விடுகணைச் சல்லையானதுந் தீரும்
மிகவுமுன்க்ரஹத்தினிற் சகல நிதியுஞ்சேரும்
தொல்புவியிலுனக் கிணையதாரடி
சுகமுடனேமன மகிழ்ந்துதேரடி
நல்வசனமென்சொ லறிந்துபாரடி
நறுந்துளபந்துன்னத்திரு மகுடமின்ன (வந்து)

3. மகதபோதனர்தொழு மாலழகரை நீயே
மதியோடணைந்து செல்வர் பதிறும் பெறுவாயே
சுககளபம் பூசி மலர்கள் முடித்துக்கொள்
துதிகவிகுஞ்சரம் பதங்கள் படித்துக்கொள்
தகுபரதநட முவந்து நடித்துக்கொள்
தாட்சியினியென்ன காட்சி முகிலென்ன (வந்து)

மேளம் 28

ஸஹானா—சாபு

பல்லவி

; ஸ | ரி கா ரீ || ரி ரீ | ரீ நி த ॥ பா , | ; , க || க ம ரி | ரீ கரிஸா ||
வந் து சே ரு வார் மா னே இ னியொன் றுக்கும்.

; த நி | ஸாஸாமக || ரிஸஸாநி | தா நீ ॥ ஸா , | ; ; ||
ம லை யா . . . தே. . . நீ தா னே

அநுபல்லவி

; நி த | பா,தமபாம ॥ த நீ | ஸ்ாஸ்ா ॥ ; த ரி | ஸ்ாஸ்ாஸ்ரி || நீநிஸ்ாத | த ஸ் நி த பா ||
க ந் தன்மா . . ம ஞ கிய சு ந் த ர . . ராஜ னென்னும்

த நி ஸ் | ஸ்ஸ்ரிஸ் || நீ ஸ் | தாநிதபப ॥ தநிஸ் | ப ப த ப ॥ கா ம | ரீ ரி க ரீ || ஸா-
க ங் கை மலைவளர் துங்க அழகர்சு கங்கள் த ர வேஇ ணங் கி உன்னிடத்தில்

சரணம்

முற்பகுதி பல்லவிபோல்
பிற்பகுதி அநுபல்லவிபோல்

அதிமோகினி மன்மதனைக் கடிந்துபேசல்

விருத்தம்

மாதனமா வினம்பூமி தானம் செய்து
வாணர்மனந் தளராதெக் காலுமேதப்
பாதனமீந் தளிக்குமுசு குந்தவேந்தன்
பங்கயக்கை குவித்துநிதம் பரவும்செம்பொற்
பாதனறுஞ் சோலைமலை யழகர் செங்கைப்
பசுந்தொடைபெற் றிடுவேன்என் பால்நீ மீன
கேதனவுன் ணுண்மைதகா தகல்வா யென்சொற்
கேளென்பாள் வந்தவழி மீளென்பாளே (52)

---

41. கீர்த்தனம் **ஆனந்தபைரவி இராகம்—அட தாளம்**

பல்லவி

தப்பிப்போடா மன்மதா
இவ்விடம் விட்டுத் (தப்பி)

அனுபல்லவி

செப்பமிகுஞ் செழுஞ்சோ லைப்பருப்பதமேவும்
திருமருவியசுந் தரவழகரெனுங்
கருணைமால்வருந் தருணமாச்சுது (தப்பி)

சரணங்கள்

1. நித்தமிதுதான் வேலையோ - உன்றனக்கினி
மற்றோர் வேலைதானிலையோ - இன்று
தத்தையாம் பரியும்தென்றல் தேரினையுமலர்ச்
சரத்தையு நாண்மது கரத்தையும் பொடித்தம்
பரத்திற் பறக்கவே துரத்திவிடு முன்னே (தப்பி)

2. மங்கையருடன் வாது - செய்பவர்க்கவ
மரியாதை தவறுது - இப்பொழுதுன்றன்
கங்குன் மதயானைக்கி ணங்கும் பிறைக்கொம்பையும்
கருப்பு வில்லையுங்கை தரித்தவாளினையும்
பறித்துத்துண்டு துண்டாய் முறித்துபோடுமுன்னே (தப்பி)

3. நந்தன்றந்த கோபாலர் - கோவியருக்கா
நந்தந்தந்த விலோலர் - பரிவுகந்து
சந்ததங்கவிகுஞ்ச ரந்தமிழ்க்கருள் செய்யும்
தண்டுளபமணி கொண்டலழகரென்
அண்டையில் வருமுன் கண்டுபிழைத்திப்போ (தப்பி)

மாலழகர் அதிமோகினியைத் திருணம் புரிதல்

42. கீர்த்தனம் **இராகம் - மோகனம் - சாபுதாளம்**

பல்லவி

மருத்துளப அழகர் திருக்கல்யாணம் செய்து
மகிழ்ச்சி பெற்றிருந்தாரே (மருத்)

அனுபல்லவி

விருப்பமுற்றனைவருங் கருத்துவந்து கொண்டாட
மெல்லியலெவ்வன ராஜமோகன வல்லிதனைகன
மாட்சியுடன்கூட (மருத்)

சரணங்கள்

1. சொன்ன வேதிகையும்பாலி கையுமலங்கரித்துத்
துய்யசாலி தண்டுலந் திவ்யமாகவிரித்து
உன்னத கும்பம்வைத்து மின்னுந்தழைதரித்து
ஓமம் வளர்த்தாகம மாமந்த்ரமுச்சரித்து
முன்னுமறைமுறை யோடுவேதியர்
சொன் மொழியின்படி நன்னயமர்கவே (மருத்)

2. இந்திரன் றுதிபுரிந் தினியமொழி பாஷிக்க
எழுகடலொலி யென இயங்களெங்கும் கோஷிக்க
விந்தை யுடன்றும்புரு வீணைமீட்டி வாசிக்க
வேதன் மறைகளோதி விரைமலரால் பூசிக்க
கந்திருவர் சுர ரந்திரமதிலெ
ழுந்தலர் மழை பொழிந்து துதிசெய்ய (மருத்)

3. திங்கள் முகமங்கையர் ஜெயசோபனங்கள் கூற
ஜெகத்துள சர்வஜீவ ராசியின் கலிமாற
பொங்குமின் கவிகுஞ்ச ரந்தமிழ்வளர்ந்தேற
போதமுனிவராசி பொழிந்துளங்களிப்பூற
பங்கயமுகவ ரம்பையர் சுருதில
யங்கொடுநய நடங்கள் புரிந்திட (மருத்)

மேளம் 28

மோகனம்—சாபு

பல்லவி

; ; ஸ ரி | கா ; ரீ ; || ஸ ரி க ப க ரி | ஸா ரி க ரி ஸ ஸ த ||
ம ருத் து ள ப . . . . . அ ழ . கர்

தா பா- த த | ஸா ; ரீ ; || கா , பா , | கா ; பா , த ||
திருக் கல் யா ணம் செய் து .

ஸ்ா ; தா | ஸ்ா ஸ் ததாபா || ப கா க ரீ | கா ; க த பா ||
ம கிழ்ச்சி பெற் றி ருந் தா

க ரீ , ஸா | ; ; ; ; ||
ரே

அனுபல்லவி

; ப ப | பா . க ரீ கா || பா பா ; | கா த ப தா ; ||
விருப் ப . முற் ற னை வ . . ரும்

ப த | ஸ்ா ; ஸ்ா ; || ஸ் தா ரி ஸ்ா | தா பா தா ; ||
க ரு த்து வந் து கொ ண் டா . ட

தா க் ா ரீ | ஸ் ா ; ரீ ஸ் ா || தா பா தா | ஸ்ா ; ஸ்ா ஸ்ா ||
மெ ல் லிய லெ வ் வன ரா . ஜ மோ க ன

தா ஸ்·ா தா | பா கா கா ; || ப ா தா ஸ் ா | தா பா - பா த ப ||
வ ல் விதி ஊ க ன ம ா ட் சி யு டன் கூ . .

கா ரீ -

ட . (மருத்துளப்)

சரணம்

; ; ஸ ரி | கா ; கா ; || க ா க ா ; | க ப கா கா ரீ ||
சொ ன் ன வே இ கை யும் பா

ரீ கா ; | ப ா ; ச ா ப ா || தா , பா , | கா பா கா ரீ ||
வி கை யும் அ . லங் க ரி த் து

; ஸ ரி | கா பா கா ரீ || ஸா ரீ தா | ஸா ; ஸா ; ||
து ய ய . சா . லி த ன் தி லம்

; ; ஸ ரி | கா ; ரீ கா || பா பா ; | தா பா த்ா ; ||
தி வ் ய மா க வி ரி த் து

கா கா கா | பா பா பா பா || ப த ஸ்ா தா | ஸ்ா ஸ்ா தா பா ||
உ ன் னத கும் பம் வை த்து மி ன் னும் த ழை த ரித் து

ப த ஸ்ா தா | ஸ்ா ஸ்ா தா பா || ப த ஸ்ா தா | ஸ்ா ஸ்ா ஸ்ா ஸ்ா ||
ஓ ம ம் வ ளர் த்தா க ம மா ம ந் த்ரம் உச் ச ரித் து

தா ஸ்ா ரீ | க் ப்க் ரி ரீ ஸ்ா || ஸ் ரி ் ரி ஸ்ா | தா பா தா ; ||
மு ன்னு ம றை மு றை . யோ டு ம் வே தி ய ர்

தா ரீ ஸ்ா | தா ஸ்ா தா பா || கா தா பா | ப க த ப க ப க ரி ||
சொ ன் மொழி யி ன் ப டி நன் ன ய மா க . வே

ஸா

(மருத்துளப)

சிங்கன் சிங்கியைத் தேடி வருதல்

விருத்தம்

சுகம் பெற்ற மோகினி மதனகோபால
சுந்தரரா ஜரைமணந்தே காந்தயோக
மகம்பெற்றங் குவந்துகுற மடந்தைக்கான
வரிசைபரிசளித் தனுப்பி மகிபனை
செகம்பெற்ற முசுகுந்த னமைத்த மானச்
செழுஞ் சோலைமலையுறவெண் ணனந்தமான
யுகம்பெற்ற அழகர்மலைச் சிங்கன்றனும்
உரியகுற மினைத்தேடி வருகின்றனே (53)

இதுவுமது

விருத்தம்

வாலைமலைக் குமரிதுணை வாவெனவா னேத்த
மந்தரமா மலையினிடை வாசுகியைப் பூட்டி
வேலைமலைக் கும்படிம தனம்புரிந் தகாலை

விண்ணவர்கள் மலையாதுய்ந் திடவமுத மளித்துச்
சேலைமலைக் கனையகொங்கை நீங்காதவண்ணம்
செய்தமலை யெனுந்துரோ பதைகவலை தீர்த்த
சோலைமலைக் குரிசில்பத கமலமனத் துன்னித்
துங்கமலைச் சிங்கனெழில் துலங்கநடந் தனனே. (54)

---

37. கீர்த்தனம்—இராகம்—தன்யாசி—ரூபக தாளம்

பல்லவி

சோலைமலைச் சிங்கனும் வந்தான்
சிங்கியைத் தேடி (சோலை)

அனுபல்லவி

காலைமலைமறு கெழுந்து
கருமுகிலென நடந்து
கோலத்திலதமும் புனைந்து
குறத்தியைக்காணவே நினைந்து (சோலை)

சரணங்கள்

1. கட்குடித்தங்காடிக் கொண்டு
கண்டவண்ணம்பாடிக் கொண்டு
கொக்கிறகைச்சூடிக் கொண்டு
குறத்திதன்னைத்தேடிக் கொண்டு (சோலை)

2. கச்சைகட்டிவா ளிறுக்கி
கைகொடுவீசை முறுக்கித்
துற்சனர்களை யுறுக்கித்
துலங்குபலகறையணி வீக்கி (சோலை)

3. பற்கிடையிற்காவி துன்னப்
பாணியிற்சிலையு மின்ன
வக்கரியம் பௌனத்த தென்ன
மணிக்கழல் கலீ ரென்ன (சோலை)

சிங்கன் தன் விருது கூறல்

விருத்தம்

நிதிசிறந்த பாடிதனிற் கோவியர்க ளகந்தோறு
நிதந்தப் பாடல்
ததிசிறந்த பாண்டமுற்றுந் தடியறிந்து தடவியுண்ட
சாமிவெற்பின்
மதிசிறந்த வாணுதலாள் வஞ்சியின் பால்மிஞ்சிமயல்
மலர்மேல்வண்டின்
பாதிசிறந்த சோலைமலைச் சிங்கன் விருதோதிநடம்
புரிகின்றனே.

---

44. திபதை ராகம் காம்போதி—தாளம் த்ருபுடை

1. திருமாலழகர் பாதம் ஒருகாலும் வணங்காத
சிகையை நறுக்கிக்கண்ணி வகைதிரிப்பேன்
2. ஒருமையோ டெட்டெழுத்தைக் கருதாமாந்தர்கள்நாவை
ஒட்டவறுத்துக்கண்ணிக் கொட்டுகள் சேர்ப்பேன்
3. பரமபாகவதரைக் குறைசொல்லி யிகழ்ந்தோரைப்
பல்லையுடைத்துக் கண்ணிக்குச் சில்லுகள் வைப்பேன்
4. மருவியெனைக் கலந்து சரசலீலைகள் செய்யும்
வங்கணச் சிங்கிக்குகந்த சிங்கனும் நானே.

குளுவன் வருதல்

உரலொடு தவழ்ந்து சென்றங் கூக்கமோ டுடுபுக்கி
மருதொடு மருதைச் சாய்த்தமாலழ கேசர் வெற்பிற்
பெருமைசேர் சிங்கன்முன்னே பெருநரிதனைத் துறத்திக்
குருகினம் பிடிக்கவென்னக் குதிகொடு குளுவன் வந்தான் (46)

---

45. திபதை இராகம் காம்போதி—தாளம் ஆதி

1. அம்பினைத்தொடுத்து - விலங்கின
முன்பினில் விகுத்துக் - கரிகளின்
கொம்பினையொடித்துக் - கையிற்கொண்டு
குளுவனும் வந்தான்.

2. மண்டிகட்குடித்துப் - பறவைகள்
கண்டவைபிடித்துச் சிங்கன்முன்னே
குண்டணிபடித்துக்கோள் சொலிக்
குளுவனும் வந்தான்

3. வளைதடிக்கம்பும் - மிருகங்கட்
கொளிவலைத்தும்பும் - மயக்கிடும்
குளிநரிக்கொம்புங் - கரங்கொடு
குளுவனும் வந்தான்.

குளுவன் சிங்கனைப் பார்த்து பட்சிவரு நிலைமை கூறல்

விருத்தம்

சனகனளி விலைமுறித்துத் தவமுனிதன் சிலைபறித்துத்
தருவின்மேலாய்க்
கனகமணிக்கொடையளிக்குங் கன்னனருகமரில் முனங்
காட்சிதந்த
அனகன்மலைச் சிங்கன்முனங் குளுவனெடி வகைபேசி
யாடிப்பாடித்
தினகரன் காண்பரியமரமேறி வரும்பட்சிநிலை
செப்புவானே

46. கீர்த்தனம்—இராகம்—கல்யாணி—சாப்பு தாளம்

பல்லவி

பறவைகள் வருகுதையே—நிரை நிரையாய்ப் (பறவைகள்)

அநுபல்லவி

அறவிடையமரிறைக் கமைமச்சானுரவுற்ற
அண்ணலழகருடைப் பண்ணையின் புறவெல்லாம் (பறவை)

சரணங்கள்

1. மாவலி செய்தர்ம வாதையினு லோடி
வானவர்மேருவைகுந்தமதிற் கூடி
மேவிப் பரவிமுறையிட்ட காலையில்
விஷ்ணு உபேந்திராவதாரஞ் செய்தக் கணம்
கூவினில் மூன்றடிவாங்கி மாவலி
கொட்டமடக்கலும் அஷ்டதிசையுள்ளோர்
யாவரும்விரும்பிட அபிஷேகஞ் செய்வதற்
காகாச கெங்கைப் பிரவாகம் வந்தாற்போலே (பறவை)

2. அன்னம்பச்சை நிறக்காடை கொக்குமான
அன்றில் குயில்மயிற்பேடைபல வான
வர்ணக் கிளிகள் வருமழகை நான்
என்னசொல்வேன் முன்னம் தென்னிலங்கைதனில்
மின்முடிராவணன் றன்ஞேடோ ராயிரம்
வெள்ளமரக்கரை வென்றுவைதேகியாம்
அன்னை சிறைமீட்குங் காலத்தில் வானவர்
அத்தரமீதிற்பூப் பந்தரிட்டாற் போலே (பறவை

3. அண்டரெண்ட பக்ஷிசக்கிர வாகமும்
ஆலாவயிரிக் குருவிகள் மோகமுங்
கொண்டொன்ருென்று வயிரங்களின்றியே
கும்பல்கும்பலாகவே அம்பரத்தினின்மேவி
ஒண்டொடி சீதையைக் கண்டுடனுனந்தம்
ஓங்கியனுமந்தன் வானரங்கள்சூழ
மண்டி ரகுவீரன் அண்டையினிற் சொல்ல
வருங்கதிபோலவே பறந்ததிவேகமாய் (பறவை)

இதுவுமவன் சொல் கொச்சகக் கலிப்பா

வெண்ணையுண்டு கோவியர்த மின்னிதழ்த்தேன் றன்னையுண்டு
மண்ணையுண்டு மாமுனியால் வன்சிலையாய்ச் சாபமுற்ற
பெண்ணையுண்டு பண்ணிவைத்த பேரழகர் பூசனைக்குப்
பண்ணையுண்டு பண்ணிவைக்கப் பக்கியெலாமேவுதையே (58)

சிங்கன் குளுவனைக கண்ணி கொண்டுவரச் சொல்லல்

இதுவுமது

இக்கதைசிங் கன்கேட் டியம்புவனீ யார்பொருளை
மைக்கண்வலை வீசிவிலை மாதர் கவர்வதுபோல்
தக்க திருமால ழகர்சார்பினு றும் பக்கியெலாங்
கைக்கொடுவளைக் கவலை கண்ணிகொடு வாகுளுவா (59)

---

47. கீர்த்தனம்—இராகம்—புன்னாகவராளி—சாப்பு தாளம்

பல்லவி

குருகினம் பிடிக்கவே குளுவா—கண்ணி
கொடுவா

அனுபல்லவி

அருமை சேரட்டாக்க ரத்தைமனம் பதித்தே
அழகர்வனசமலர்க் கழலிணையைத் துதித்தே

சரணங்கள்

1. பாப்பான்மடவன்னப் பக்கியைக்கைக் கொண்டான்
பஞ்சவர் தூதன் பருந்தையுங் கைக்கொண்டு
த்ரப்பாய் வனத்துள பத்தையும் பெற்றுச்
சவரிப்பெண் கொக்கைக் கனிவாயருந்திப்பின்
வாய்ப்பான கோளியின் பத்திரத்தே தலை
வைத்துக்கொண்டான் துயில்பெற்றுக் கொண்டான் அவன்
கோப்புற்றமுத்த மருகனெலி கொண்டான்
கூச்ச நமக்கென்ன வாச்சுதடா வண்ணக் (குருகினம்)

2. தேட்டுயர் தெய்வப் பிராட்டி மகன்றேவ
சேனுதிபன்மலைக் கானவனுகிமுன்
வேட்டைக்குச் சென்ருெரு பேட்டைக்கைப்பற்றிட
வேங்கையுமாய்விண்ணில் ஆங்கொரு கூட்டத்தில்
ஆட்டையெடுத்திகற் கோளியும் கைக்கொண்ட
அன்றுமுதல் மயிலாடி யென்றெப்போதும்
நாட்டிலெல்லோருந் துதிக்கப் பெற்ருனினி
நங்குலத்துக்கொரு பங்கந்தானேதடா (குருகினம்)

3. கண்ணப்ப வேடுவன் எச்சிற்புலாலைமுக்
கண்ணப்ப னுண்டு களித்தது மல்லாமல்
மண்ணிற் பரவர்தம் எச்சத்தை இச்சித்து
வாரிப்பரவனும் ஆகிவலைவீசித்
தண்ணுற்ற மீனைப் பிடித்ததால் விண்ணெடும்
தாரணி போற்ற மணக்கோலங் கொண்டனன்
எண்ணத்தைக் கொள்ளாதே கானவர்சாதிக்
கிழுக்கொன்று மில்லை வழக்கங்கள் போலவே (குருகினம்)

———

சிங்கன் சொற்படி குளுவன் கண்ணி கொண்டேகல்

கொச்சகக் கலிப்பா

எண்ணிரண்டி ரண்டுதினத் தேற்குமிகற் சேனையெலா
மண்ணில்ரண்டு துண்டுசெய்த மாலழகர் பண்ணையிலே
துண்ணிருண்டு மண்டியெழு சோலைமலைச் சிங்கன்முனங்
கண்ணிகொண்டெ ழுந்திரண்டு கால்நரிபோல் வந்தானே (60)

சிங்கன் கூறல்

இதுவுமது

கன்றிகரா வுண்டவொரு காண்முளையை மூனருணடு
சென்றுவரு வித்த திருவழகர் பண்ணையிலே
மன்றில்நெறி யோர்குழுவின் வந்துளறும் பேதையர்போல்
இன்றெனது முன்னடைந்தி ரைச்சலிடா தேகுளுவா (60)

கீர்த்தனம்   இராகம் - சௌராஷ்டிரம் - அடதாளம்

பல்லவி

பேசாதடையே சற்றேபொறு
பேசாதடையே

அநுபல்லவி

பாசாடவி நீக்கும் பரமமால் வெற்பினில்
பக்திகள் கைக்குள்ளே சிக்கவேண்டு மென்றால்   (பேசாத)

சரணங்கள்

கஞ்சமலர்முக மாதர் குளித்திட்ட
மஞ்சள் நீரோடு வரும் பெருவாய்க்காலில்
கொஞ்சியே பக்ஷி நிரைநிரையாகவே
கூடியே கண்ணியை நாடியே வருகுது
விஞ்சை மருந்து குளிகை திலதமும்
மின் கொடிமாத ரிணங்கும் படிக்குச்செய்
அஞ்சனமாகினு மாந்தைப் புலால் கறி
வெஞ்சன மாகினும் கஞ்சிக்கு வேண்டிக்கொள்   (பேசாதே)

சிங்கன் பட்சிகளைக் கண்டவுடன் சிங்கியை நினைந்து வருந்தல்

விருத்தம்

மன்றிலகு தார்ப்புயருக் மாங்கதனுக் கரியபத
வழியைக் காட்டி
நன்றியருள் திருவழகர் பண்ணையெலாங் கண்ணிகுத்தி
நாடிச்சிங்கன்
நின்றிடும்போ தங்குமழைத்தாரை கண்டான் மான்கலைசேர்
நிலைமைகண்டான்
அன்றிலும்பே டுடன்புணருஞ் சுகங்கண்டான் வஞ்சிமயல்
அகங்கொண்டானே (62)

---

49. கீர்த்தனம் திபதை இராகம் காம்போதி—சாபு தாளம்

1. மங்கையர் பனைக் காட்டும் கண்ணிலவர்ணமானே - என்றன்
வஞ்சிசென்ற இடங்காட்டுவாய் கணணெதிர்தானே
2. பெண்களுடைய மருங்கிற் கனையபூங் கொடியே - என்றன்
பெண்கொடி யையிருகண்களுங் காண்பதெப் படியே

3. புட்குரல்வி முழக்கிடு மாடப்பு றுவே - என்றன்
பூவைபிரிந்திட்ட நாள்முத லுகமோரி ராவே
4. மைக்கருங் கூந்தற் குவமையற்ற தோகைமயிலே - ஒரு
வகையும் கூறுமலிருப்பது தானென்ன பயிலே
5. யாழிசை போலநின் றேலிடும் மாமரக்குயிலே - ஏங்கி
யானிங்குநின்று தவிப்பதற் கின்மொழி பயிலே
6. நாளுமினிய மொழிதனைக் கூறுமஞ்சுகமே - சொல்லின்
நவரஸ மாகிய வஞ்சியைச் சேர்வேனோ இகமே
7. கொங்கைக் குடங்கட் குபமய மானசகோரமே - இனிக்
கூர்விழியாளை நான் சேராதிருக்கிலென் ஸாரமே.

இதுவும் சிங்கன் சொல்லுதல்

கொச்சகக் கலிப்பா

பண்ணைதொறுங் கண்ணிகுத்திப் பாவைவஞ்சிசாயலைப்போல்
வண்ணமயி லாடிநிற்கும் வாகுநடை பார்த்திருந்தேன்
கண்ணியெலாங் கொத்தியென்றன் கண்சிமிட்டிப் பாக்குமுனம்
எண்ணைவொண்ணுப் பக்கிபறந் தேகியல்லோ போகுதையே (63)

---

50. கீர்த்தனம் இராகம் யமுனகல்யாணி—ஆதிதாளம்

பல்லவி

பறந்தோடிப் போயினவே
பக்கிகளெல்லாம் (பறந்)

அநுபல்லவி

நறுந்துளபமணிந்த நாரணர் வெற்பினிற் பொருள்
சிறந்தவட்டாக் கரத்தைச் சிந்தித்தோர் பாவம்
போனாற்போல் (பறந்)

சரணங்கள்

1. நீடியோர் மலர்த்தடத்தில் பேடையன்ன மொன்றுதரிந்
தோடியென்னருகில் வந்து வாடிநின்றிடும் போததைத்
தேடியோர் சேவல்துடர்ந்த சாடைகண் டொருசேவலங்
கூடுபுகுந்திரண்டும்போ ராடியே புணர்வின்றிவி
ரரடபுரந்தன்னில் முன்பு மாடுபிடித்தவர்சேனை
பேடிசெய் சண்டைக்குப் பயந் தோடியொளித்ததுபோல
(பறந்)

2. வடிப்புயர் வாணர்குச் செல்வங் கொடுப்பவ ரருகிருந்து
தடுப்பவர் குலம்போலவும் அடுத்தவர்க் குறுதிசொல்லிக்
கெடுப்பவர் வாழ்வுபோலவும் படைத்த புவியினில்தர்மங்
கொடுத்திடாலுத்தர் பொருளைத் துடைத்துடன்
திருடர்கொள்ளை
யடித்துடன் போவதுபோலு மடைத்தலைப் பக்கிகளெல்லாந்
துடித்திடும் கண்ணியைக் கொத்தியெடுத்துக் கொண்டம்
பரத்தினிற் (பறந்)

சிங்கனுக்கு குளுவன் மறுமொழி கூறல்

விருத்தம்

குருகின்மேற் கண்ணிகுத்திக் குறத்திமேலெண்ண முற்றிப்
பருமதம் பிடித்தநீயும் பக்கிகள்பிடித்து வாழ்ந்தாய்
விருதுகள்பேசி என்னை மிகவுநீ சிரித்தாலே
திருமலைச்சிங்கா வுன்னை சிரித்தது மதனப்பேயே (64)

அதற்குச் சிங்கன் கூறல்

விருத்தம்

கொல்லவென் றரக்கன்விட்ட கோரமுட் டிகசாணூர
மல்லரை மல்லால்வென்ற மாலழகேசர் வெற்பில்
அல்லெனுங் குழலாராசை யாரையும் விடுமோகண்டாய்
மெல்லியென் சிங்கிதன்னை விரைவினி லழைப்பாயென்றான்(65)

---

51. கீர்த்தனம் இராகம் சங்கராபரணம்—ஆதிதாளம்

பல்லவி

அழைத்துவாடா குளுவா
சிங்கையை (அழைத்)

அநுபல்லவி

தழைத்த சோலையழகர் தாசனென்பேர் சொலி (அழைத்

சரணங்கள்

1. மான்பிரிந்தகலை போலே யான்பிரிந்தே னுருக்காலே
தேன்பொதிந்த நின்வாயாலே சேதிசொல்லி
யென்முன்பாலே (அழைத்)

2. காதல்மனஞ் சகியாதே ஏதுசெய்வேனென்னவாதே
சாதகமாக வென்மீதே தயவுசெய் திங்கிப்போதே (அழைத்)

3. தொலையா மனவிசாரம் விலகவைப் பதுன்பாரம்
கலைநெகிழ்ந்தாலந்நேரம் கைக்குண்டோசொல்
லுபசாரம் (அழைத்)

குளுவன் மறு மொழி

விருத்தம்

சர்க்கரை யொருவன் தின்னத் தனிவிர லொருவன் சூப்ப
ஒக்குமோ சிங்கா வெற்பி லுனையவள் பிரிந்தா லென்னச்
சக்யமா யணைந்தா லென்ன சார்ந்தவர்க் குண்டோ லாபம்
அக்கரை யுனக்குண்டானு லழைத்துவா நீயே யென்ருன் (66)

சிங்கன் சிங்கியைத் தலங்கள்தோறும் தேடிச் செல்லல்

கொச்சகக் கலிப்பா

துங்க வழகர்பதம் தோத்திரம்செய் யாதவர்போல்
சிங்கியைநி னைந்துசிங்கன் சிந்தை கரைந்துருகிக்
கங்குல்பக லாயலைந்து கண்ணுறக்க மில்லாமல்
அங்கணில மெங்கணுஞ்சென் றக்கரையாய்த் தேடினனே(67)

---

37. கீர்த்தனம்—இராகம்—கரகரப்ரியா—ரூபக தாளம்

பல்லவி

தேடிச்சென்றானே சிங்கியை
நாடிச் சென்றானே சிங்கன் (தேடி)

அனுபல்லவி

பேடைபிரிந்த அன்றில்போல் வாடியுலகெங்குமோடித் (தேடி)

சரணங்கள்

1. ஸ்ரீவைகுண்டம் தெய்வபுரம்
திருவாழ்வார் நகரீபுரம்
ஸ்ரீவிலிப்புத் தூர் சிகரம்
திகழ்தேவ கோஷ்டி நகரம் (தேடி)

2. திருமன்னூர் குடிவேங்கடம்
திருக்குடந்தைபொழில் தடம்
அருவிவரை யோடிலங்கும்
அனந்த சயனங் கண்டெங்கும் (தேடி)

3. ஸித்தர்வளர் பண்டராபுரம்
ஜெகநாதம் காசி நகரம்
பக்தர்வாழ் கோஸலாபுரம்
பரிவுடன் கண்டனந்தரம் (தேடி)

4. ஆவினந்திகழ் கோகுலம்
அமரர்தொழும் பத்ராசலம்
ஸேவை செய்வோர்க்கின்ப நலம்
செய்திருவரங் கஸ்தலம் (தேடி)

5. சோபிதமிகு மாமதி
துலங்குஞ்சோலை யொடுநதி
நூபுரகங்கை யம்பதி
நூற்ஞெட்டுத் திருப்பதி (தேடி)

சிங்கன் சிங்கியைத் தேடிக்காணுமல் நகர்த் தெருவுள்ளோர்களை வினவுதல்

கொச்சகக் கலிப்பா

வேதாகமத் துறையும் மெய்ப்பொருளாய்ப் பஞ்சவர்க்குத்
தூதாக வுற்றபரஞ் சோதி அழகர்வெற்பில்
மாதாக முற்றவென்றன் வஞ்சியெனைப் பிரிந்திப்
போதாகத் தான் தனியே போனவிடம் சொல்வீரே (68)

53. கீர்த்தனம்—இராகம்—காபி—ரூபகதாளம்

பல்லவி

சிங்கியெங்ஙனம் போயினுள் சொல்வீர்—நகர்த்
தெருவுளோரே என்

அனுபல்லவி

மங்களகர கங்கணதர
இங்கிதகுண வங்கணமுள்ள (சிங்கி)

சரணங்கள்

1. ஈட்டிபோல் விழி காட்டிமையலைப்
பூட்டிலீலைபா ராட்டியென்றனைக்
கோட்டிசெய்மதச் சேட்டைப்பேயினை
யோட்டிவைக்கும் கண்ணுட்டியாகிய (சிங்கி)

2. காட்டின்மிருக வேட்டைபொருதும்
தாட்டிகனெனை மேட்டிமையுடன்
போட்டியால் விழத் தாட்டிபம்பரம்
ஆட்டிவைக்குஞ்சீ மாட்டியாமென்றன் (சிங்கி)

கொச்சகக் கலிப்பா

ஞாலமுண்ட மாலழக நாரணனுர் சோலைவெற்பில்
சீலமத லீலைசெயும் சித்துவித்தை யாரறிவார்
பாலமுத முற்றமொழிப்பாவை யுன்றன் சிங்கிதிருக்
கோலவடை யாளக் குறிப்பதனைச் சொல்வாயே (69)

சிங்கன் தனது சிங்கியினடையாளத்தை நகருளோர்க்கு அறிவித்தல்

54. திபதை—நொண்டிச்சிந்து தாளம்—ஆதி

1. செக்கச்சி வந்த நிறத்தாள் - ஐயேவஞ்சி
செம்பவளந்தனை நகை செய்யதரத்தாள்
மைக்கருவிழி அயிலாள் - ஐயேபஞ்ச
வர்ணமுளவன்னநடை வென்ற வொயிலாள்

2. காமுகரைக்கண்டு கூசுவாள் - ஐயெசிறு
கைக்கிள்ளைப்போலவே கொஞ்சித் திக்கிப் பேசுவாள்
தேமல்படர்ந்த கொங்கையாள் வளைச்
செங்கழுத்தில் சங்குவடம் கொண்டநங்கையாள்

3. இடக்கான மொழியுடையாள் - ஐயே என்றன்
ஏந்திழை சமைந்தொரு மாதமுடையாள்
உடுக்கெடுத்தடித்துக் கொள்வாள் - ஐயே உங்கட்
குற்றகுறி சொல்லி நயம்படித்துக் கொள்வாள்

4. பழகினபேரைப் பிரியாள் - ஐயே என்றன்
பாவை யௌவனமுள்ள சின்னஞ்சிறியாள்
அழகர்மேற் பரிவுடையாள் - ஐயே அவட்
கடையாள மின்னிடையில் வர்ணவுடையாள்.

5. வார்குழற் பின்னற் சடையாள் - நொடி
வார்த்தைகள் பேசிடுவதிற் சற்றுஞ் சடையாள்
நேர்சொக்குப்பொடி தருவேன் - உங்களுக்கு
நிலைகுளிகையும் நரிக்கொம்புந்தருவேன்

6. மண்டலமெங்குந் தேடினேன் - காணுமல்
மான்பிரிந்த கலைபோல மனம் வாடினேன்
கண்டென்னரு கிற்ருனே - சிங்கிதனைக்
காட்டிடிற் பட்சமறக்க மாட்டேனே.

சிங்கனுக்கு நகருளோருரைத்தல்

விருத்தம்

தாவுதன் னில்லங் காக்கத் தரமிலாக் கோழையோருர்
காவலனென்ருர் போலக் கதையுரைத் ததுநீ போதும்
தேவர்கள் துதிக்கப்பெற்ற திருமலை வாழும்சிங்கா
மேவுமுன் சிங்கிசென்ற வீதியுமிதுதான் கண்டாய் (70)

மேளம் 28 • நொண்டிச் சிந்து—ஆதி தாளம்

1. கா கா; ரீ—ரீ, க ரீ ஸா | ஸா ; ; ; | தா ஸா ஸா ஸா ||
செ க்கச் சி வந் த நி றத் தாள் ஐ யே வஞ் சி

2. தா நி ஸ த நி பா ||

ஸா, ரி கா கா கா, மா கா ரீ | ரீ, க ரீ ஸா | ரீ ; ; ; ||
செம் ப வ ளம் த னை ந கை செய்ய தர த் தாள்

கா ப ம கா ரீ ரி ம கா ஸாஸா | ஸா ; ; ; | பா பா மா மா ||
மை க் க ரு வி ழி அ யி லாள் ஐ யே பஞ் ச

ப த ஸ்ா ஸ்ா ஸ் ப-பா, த பா மா | கா ப ம கா ரீ | ஸா ரீ ஸா ரீ ||
வ ர் ண மு ள அ ன்ன நடை வெ ன் ற வொயி லா ள் . .

மற்ற அடிகளும் இதேபோல்

சிங்கன் சிங்கியைக் காணல்

கொச்சகக் கலிப்பா

செங்கையிலே தூசெடுத்துத்தேன் மொழியார் கோவியர்தங்
கொங்கையிலே மையல்கொண்ட கோவழகர் நன்னாட்டில்
தங்கையிலே நின்றசிங்கி தனைப்பிரிந்த சிங்கனவன்
கங்கையிலே போனபொருள் கண்டவர்போற் கண்டானே (71)

விருத்தம்

மாலழகராயர்திரு வருளினாலே
மலடியொரு குழவிபெற்று மகிழ்ந்தாற்போலப்
பாலனைய மொழிமதன மோகவல்லி
பசுந்தொடையல் பெற்றுவந்த பான்மைப்போலச்
சீலமிகு சிவகங்கை வீதிதோறுந்
திகழ்குறிசொல் குறத்தியெனுஞ் சிங்கிதன்னைக்
கோலமிகுமழகர் மலைச் சிங்கன்கண்டு
கூடினான் சுகமுடன் கொண்டாடினானே (72)

மங்கள கவி

விருத்தம்

மாலிருந்த மனமதன மோகமங்கை
மகிழ்வுடனோர் பாலிருக்க அவனிமங்கை
சேலிருந்த விழிநதிமா மடந்தையோடுஞ்
சேர்ந்திருபா லுவந்துபணி விடைசெய்தேத்த
வேலிருந்த கூர்விழிமா மடந்தை வக்ஷ
மீதிருந்தா னந்தமுட னரங்கின்வாழும்
மாலிருந்த சோலைமலை யழகர் கீர்த்தி
வளஞ்சொல்வேன் சோபன மங்களஞ் சொல்வேனே
(73)

55. கீர்த்தனம் இராகம் சௌராஷ்டிரம்—ஆதிதாளம்

பல்லவி

திருமாலழகருக்கு திவ்ய ஜய மங்களம்

அநுபல்லவி

மருமாமலர்துளப மணிமாமகுடரான (திருமா)

சரணங்கள்

1. கருமாமுகில்கள் நிரந் தரமார்தண் சோலைமலை (திருமா)
2. பிரமாதி தனைப்பயந்த ப்ரணவாட்டாக்ஷரத்தமர்ந்த (திருமா)
3. சனகாதி பரவுமாதி யனகராகிய ஜோதி (திருமா)
4. தும்புரு நாரதாதிக் கன்புவைத் தருளும் நீதி (திருமா)
5. கவிகுஞ்சரந் துதிக்குக் கனிவோடருள் கதிக்கும் (திருமா)

வாழி விருத்தம்

மதிவாழி ஆழ்வார்கள் பதின்மர் வாழி
மறையோர்கள் வாழிகலை வாணர் வாழி
நிதிவாழி மயிலேறும் பெருமாள் வாழி
நீள்புவியோர் வாழி மநு நீதி வாழி
துதிவாழி செங்கண்மா லழகர் மீது
சுகுணகவி குஞ்சர நாவலவன் சொன்ன
பதிபுகழும் குறவஞ்சிப் பாவினத்தைப்
படிப்போரும் கேட்போரும் வாழிமாதோ (73)

அழகர் குறவஞ்சி முற்றுப் பெற்றது

★

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
4	7	ஸவாமின்	ஸ்வாமின்
16	2	மலர்	மலாற்
16	4	வாவாக்கு	வாக்கு
36	1	ஒன்பாநாம்	ஒன்பதாம்
36	9	சிரத்தனில்	சிரந்தனில்
38	8	லீதிதனில்	வீதிதனில்
43	10	இதழ	இதழ்
48	1	கிந்தூர	சிந்தூர
48	3	வேலே	வோலே
49	4	பரிந்து	புரிந்து
55	10	நம்க்	நமக்
60	11	ஏறியேய	ஏறியே
61	8	த்ரிபுடை	ஆதி
124	4	தீர்ர்த்த	தீர்த்த
126	13	ரெங்கிறும்	ரெங்கினும்

புத்தகங்கள் கிடைக்குமிடம்

Indian Music Publishing House
No 4, Bnnder Street, Madras-1.

கலைமகள் இசைக் கல்லூரி
No 20, Saidoji Street Triplicane, Madras-5.